REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜுலை 28 வெள்ளிக்கிழமை


# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 177 | Friday 28, July, 2023 | 20பக்கங்கள் | 50/-


## தாமரை கோபுரத்தில் Bungee Jumping

### டிசம்பரில் ஆரம்பிக்கத் திட்டம்



கொழும்பு தாமரை கோபுரத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு Bungee Jumping ஐ ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக முகாமைத்துவ தலைவர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார். கொழும்பு தாமரைக் கோபுரம் மற்றும் சிங்கப்பூர் கோ பங்கி நிறுவனம்

06

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட

## ஐந்து முஸ்லிம் அமைப்புகளின் தடைகளை நீக்கி வர்த்தமானி

### ஜனாதிபதியின் கையெழுத்துடன் வெளியானது

**ஸாதிக் ஷிஹான்**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தொடர்ந்து இலங்கையில் தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட அமைப்புக்களில், ஐந்து இஸ்லாமிய அமைப்புகளின் தடை நீக்கப்பட்டதாக அரசாங்கம் வர்த்தமானி மூலம் நேற்று அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சரென்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையெழுத்துடன் 2342/27 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி மூலம், நேற்று (27) இவ்வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

06



## மருந்து தட்டுப்பாடு இரண்டு மாதங்களில் நிவர்த்தியாகும்

### 160 மருந்துகள் அவசர கொள்வனவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாடு இரண்டு மாத காலங்களில் நிவர்த்தி செய்யப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவசரமாக மேற்கொள்ளப்படும் மருந்து கொள்வனவின் கீழ், 160 மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் கொழும்பில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின்போது அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

06

Ministry of Health

## ONLINE ஊடாக மக்களுக்கு உடனடி அவசரச் சேவைகள்

### உள்ளூராட்சி மன்றங்கள் தயார் நிலையில்



ஒன்லைன் தொழில்நுட்பத்தின் (ONLINE) ஊடாக அவசியமான சேவைகளை உடனடியாகவும், முறையாகவும் வழங்க உள்ளூராட்சி மன்றங்கள் தயாரென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர நேற்று தெரிவித்தார். 2025ஆம் ஆண்டுக்குள் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான வீதிகளை வரைபடமாக்க (Mapping) திட்டமிட்டுள்ளதாகவும், அதன் பின்னர் அவை தொடர்பான விபரங்கள்

06

இனப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சகலரும் உண்மைநிலையை கண்டறிய

# உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அவசியமானது

### அது முழுமையாக சுயாதீனமாக செயற்படுவதை அரசாங்கம் உறுதி செய்யும்



**சட்டம் இயற்றப்பட்டதும் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படுவதுடன், தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதும் அரசின் பொறுப்பெனவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு**

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட சகல பிரிவினருக்கும் நியாயம் கிடைக்குமென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்பில் தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களை தெளிவுபடுத்துவதற்காக (26) ஜனாதிபதி அலுவலகத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட வேண்டும். இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மாத்திரமே அரசாங்கத்தின் பொறுப்பாகும். சட்டம் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படும்.

ஆணைக்குழுவின் பணிகளை

06

## புதிய அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதி ரணிலுடன் விசேட சந்திப்பு



### சம்பளம், கொடுப்பனவுகளில் திருத்தம் உள்ளிட்ட பரிந்துரைகளும் கையளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் 2023/2024 ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் நேற்று (27) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தனர்.

சந்தைப் பெறுமதி மற்றும் செயற்திறனை அடிப்படையாக கொண்ட சம்பள கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தல், புத்திஜீவிகள் வெளியேற்றத்தை மட்டுப்படுத்தல் மற்றும் வைத்தியர்களுக்கான கொடுப்பனவுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு மேற்படி அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டதோடு, அது தொடர்பிலான பரிந்துரைகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

06



## வெளிநாட்டு நாணயங்களை எடுத்துச் செல்லும் கட்டுப்பாடு

ஆறு மாத காலங்களுக்கு தளர்வு

03

முதல் தடவையாக

## கனேடிய அமைச்சரவையில் இலங்கைத் தமிழர்!



தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் புதல்வர் கெரி ஆனந்தசங்கரி, கனடாவின் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர் ஒருவர் கனேடிய அமைச்சரவை அமைச்சராக முதல் தடவையாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளும் லிபரல் கட்சியின்

06

## பிரான்ஸ் ஜனாதிபதி இலங்கை வருகிறார்

### குறுகிய கால விஜயமாக இன்று வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் இன்றிரவு நாட்டுக்கு வருகை தருகிறார். பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதியொருவர் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வது இதுவே முதற்தடவையென வெளிவிவகார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

06

## தமிழர் அரசியல் தீர்வு விடயத்தில் கட்சிகளிடையே வேறுபட்ட கருத்து

### சர்வகட்சி மாநாட்டில் எதிரொலித்ததென்கிறார் சுரேன் ராகவன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வகட்சி மாநாட்டில் தமிழ் கட்சிகள் மத்தியில் கருத்துமுரண்பாடு இடம்பெற்றுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின் பின்னர் ஆளும் கட்சி மற்றும்

06

## சர்வகட்சி பேச்சுக்கள் தெளிவாக புரியவில்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



ஜனாதிபதியுடனான சர்வகட்சி மாநாடு குறித்து சந்தேகத்துடனேயே வந்தோம், அதேபோன்று அது நிரூபிக்கப்பட்டுவிட்டதென பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னர்

06

## பாப்பரசரின் பிரதிநிதி நேற்று முள்ளிவாய்க்காலுக்கு விஜயம்!

### உயிர் நீத்தவர்களுக்காக சுடர் ஏற்றி வழிபாடு



பாப்பரசர் பிரதிநிதி கலாநிதி பிறாயன் உடக்வே முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்துக்கு விஜயம் செய்திருந்தார். யுத்தத்தில் உயிர்நீத்த மக்களுக்காக சுடர் ஏற்றி அவர், மலரஞ்சலி செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து அங்கு தெரிவு செய்யப்பட்ட விஷேட தேவையுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளை

06

## வேலை தேடி வெளிநாடு செல்லும் பெண்களுக்கு கட்டுப்பாடுகள்

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவிப்பு



வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்காகச் செல்ல விரும்பும், பிள்ளைகள் உள்ள குடும்பப் பெண்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி 2 முதல் 18 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் உள்ளோர், அந்தந்த பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் DS4 ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாவலர்கள், பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வி ஏற்பாடுகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும் வழங்க

06

## மலையக மக்களுக்கு காணி உரிமை விரைவில் கூட்டு அமைச்சரவை பத்திரம்

### அவசரமாக அனுமதியை பெறவும் நடவடிக்கை



பெருந்தோட்டத்துறை மக்களுக்கு காணி உரிமை பெற்றுக்கொடுப்பதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருடன்

06



## ஆகஸ்ட் முதல் நீர் கட்டணம் அதிகரிப்பு

03



## வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

03

அச்சுவேலி சனசமூக நிலைய

## மரங்களுக்கு மண்ணெண்ணெய் ஊற்றிய விஷமிகள்



யாழ். அச்சுவேலி செல்வநாயகபுரம் வீதியிலுள்ள வளர்மதி சனசமூக நிலைய வளாகத்திலுள்ள பூச்செடிகள் மற்றும் பயன் தரும் மரங்களுக்கு இனம் தெரியாத நபர்கள் மண்ணெண்ணெய் ஊற்றும் ஈனச் செயல் சிசிடிவி கமராவில் பதிவாகியது.

முகங்களை மறைத்துக் கொண்டு பரல் ஒன்றில் மண்ணெண்ணெய் எடுத்து வந்து

06

## வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு முதலில் அரசாங்கமே தீர்வை முன்வைக்க வேண்டும்

### சர்வ கட்சி மாநாட்டில் எதிர்க்கட்சி அறிவிப்பு



வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் தனது நிலைப்பாடு மற்றும் முன்மொழிவுகளை அறிவிக்காமல் எதிர்க்கட்சியிடம் கருத்துக்களைக் கேட்பது அர்த்தமற்றது. அரசாங்கம் முன்மொழிவுகளை முன்வைத்த பின்னர், எதிர்க்கட்சி தனது பொறுப்புகளை நிறைவேற்ற தயாராக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

06

## காட்டு யானைகளுக்கு உணவளித்தால் அபராதம்



காட்டுப்பகுதியிலுள்ள வீதி ஓரங்களில் சுற்றித்திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், இது குற்றமாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

காட்டுப்பகுதி வழியாக செல்லும் நெடுஞ்சாலைகளின் வீதி ஓரங்களில் சுற்றித்திரியும் காட்டு யானைகளுக்கு உணவு வழங்குவதால்,

06

## இறக்குமதி முட்டைகள் சுப்பர் மார்க்கட்டுகளில்

### நேற்று முதல் விற்பனைக்கு வந்தது



இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சூப்பர் மார்க்கட்டுகளூடாக கொள்வனவு செய்யும் வாய்ப்பு நேற்று (27) முதல் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில், 35 ரூபாவுக்கு முட்டைகளை கொள்வனவு செய்ய முடியுமென நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஷாந்த நிரியெல்ல தெரிவித்தார்.

அத்துடன் இறக்குமதி செய்யப்பட்ட

06

# வலம்புரி கவிதா வட்ட 90 ஆவது கவியரங்கு




வலம்புரி கவிதா வட்டத்தின் 90 ஆவது கவியரங்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் எதிர்வரும் (01) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

கவியரங்கிற்கு கவிஞர் தி. ஸ்ரீதரன் தலைமை தாங்குவார். நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர்,

நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழ கணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

## நகர்வலம்



### வட மத்திய மாகாணத்தில்

# ஆரம்ப கல்வியை விருத்தி செய்ய பல்வேறு திட்டங்கள் முன்னெடுப்பு


**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

வடமத்திய மாகாணத்தில் ஆரம்பக் கல்வியை விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை முன்னெடுத்து வருகிறது.

இதற்கமைய வடமத்திய மாகாண அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள அநுராதபுரம், தமுத்தேகம, கெகிராவ, கலென்பிந்துனுவெவ, கெப்பிதிகொல்லாவ ஆகிய ஐந்து கல்வி வலயங்களினதும் பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள திம்புலாகல, பொலன்னறுவை, ஹிங்குரன்கொட ஆகிய மூன்று கல்வி வலயங்களினதும் வடமத்திய மாகாணத்திலுள்ள எட்டு வலயங்களினதும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான செயலமர்வு கடந்த 24 ஆம் திகதி வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் ஆரம்பக் கல்வி மாணவர்களின் கல்வியை விருத்தி செய்வது பற்றிய வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன், வளவாளர்கள் அது சம்பந்தமான வேலைத்திட்டங்கள் பற்றிய விளக்க உரைகளும் வழங்கப்பட்டன.

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் மௌலவி இப்ழால் (பாரி)



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 01ஆம் திகதி இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகவுள்ள பாரம்பரியம் நிகழ்ச்சியில், முஸ்லிம் சேவைக்கு சன்மார்க்க ரீதியாக வளம் சேர்த்து புகழ்சேர்த்தோர் வரிசையில் வெலிகமையை பிறப்பிடமாக கொண்ட அல்ஹாஜ் மௌலவி எம்.ஏ.முஹம்மத் இப்ழால் (பாரி) அதிதியாக கலந்து கொள்கிறார்.

1985 களில் இஸ்லாமிய நற்சிந்தனை மூலம் முஸ்லிம் சேவையில் சன்மார்க்க பணியாற்றி தொடங்கி, பின்னாட்களில் பல்வேறு சன்மார்க்க நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார். முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர் அல்ஹாபிஸ் எஸ்.எம். ஹனிபாவால் அறிமுகப்படுத்தப்பட்ட "பிரார்த்தனை" நிகழ்ச்சியை தொடராக சுமார் நான்கு ஆண்டுகள் வழங்கி அதிக நேயர்களின் கவனத்தை தன தாக்கிக்கொண்டார்.

அரசாங்க ஆசிரியர், ஆசிரிய ஆலோசகராக பணியாற்றி ஓய்வு பெற்ற இப்ழால் மௌலவி, 1989 ஆம் ஆண்டு தொடக்கம், கொழும்பு பெரிய பள்ளி வாயலில் கதீபாக பணியாற்றி வருகிறார். நீண்டகாலமாக கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் ஹாஜிகளுக்கான, ஹஜ் உம்ரா பயண வழிகாட்டியாகவும் கடமையாற்றி வருகிறார்.

மேற்படி நிகழ்ச்சியை எம். எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம். ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.



இத்தாலி பலெர்மோ (Italy palermo) ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய பிரதம குருவும் அவ்வாலய அறங்காவலர் சபையின் பிரதான ஆலோசகருமான சிவஸ்ரீ கனக பாலசந்திர சிவாச்சாரியார், இலங்கை வந்திருந்த போது இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் யதுகுலசிங்க அனிருத்தனுக்கும் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்களுக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது எடுத்த படம்.

# ஆபாச படங்களை வைத்திருந்த யுவதிக்கு ரூ. 1500 தண்டம்


**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஆபாச படங்களை வைத்திருந்தமை மற்றும் படங்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக்கொண்ட யுவதி ஒருவருக்கு அநுராதபுரம் பிரதான நீதவான் நாலக்க சஞ்சீவ ஜயசூரிய தண்டனை விதித்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்க கட்டணமாக 1500 ரூபா வழங்குமாறு உத்தரவிட்ட பிரதான நீதவான், மீண்டும் அவ்வாறான தவறுகளை செய்ய வேண்டாம் என யுவதியை கடுமையாக எச்சரித்து விடுதலை செய்துள்ளதுடன் குறித்த யுவதியின் கையடக்க தொலைபேசியில் இருந்த ஆபாச படங்களை மீளப்பெறமுடியாதவாறு நீக்கவும் சிம் கார்ட் மற்றும் மெமரிகளில் உள்ளவற்றை நீக்கவும் அநுராதபுரம் பொலிஸ் தகவல் பிரிவு பொலிஸ் பரிசோதகர் ஐ.சீ.பீ. இலங்க சிங்கவுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

### பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வுபெறும்

# J.S.P சில்வாவுக்கு பிரியாவிடை நிகழ்வு



**பேருவளை விசேட நிருபர்**

பேருவளை பொலிஸ் பிரதேசத்தின் மக்கள் பாதுகாப்புப் பிரிவின் மாதாந்தக் கூட்டமும் பேருவளை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பொதுமக்கள் உறவு பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி சேவையிலிருந்து ஓய்வுபெறும் ஜே.எஸ்.பீ சில்வாவின் பிரியாவிடை நிகழ்வும் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமார மற்றும் பொலிஸ் நிலைய ஆலோசனை சபை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் முன்னாள் காதி நீதவான் மிர்ஸூக் பளீல் விசேட உரை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டை பௌண்டேஷன் ஏற்பாட்டில் இரு பெரும் விழா

பேருவளை, சீனன்கோட்டை பௌண்டேஷன் ஏற்பாட்டில் தையல் பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவிகளின் கைப்பணி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி சனிக்கிழமை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மாணவிகளின் கைப்பணி கண்காட்சியை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையின் முன்னாள் உப அதிபர் ஜனாபா மிஸ்பா அன்ஸார் வைபவரீதியாக திறந்து வைப்பார்.

இரண்டாவது அமர்வாக நிறுவனத் தலைவர் பஸால் சரீப் தலைமையில் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷாமிலா தாவூத் பிரதம அதிதியாகவும் முஸ்லிம் சேவை பணிப்பாளர் ஜனாபா பாத்திமா ரினூஸியா கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தையல் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 110 மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதுடன் கைப்பணி கண்காட்சியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவிகள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

## மலைச்சாரல்



# மலையகத்தில் தொடரும் குளவித் தாக்குதல்கள்

மலையக பகுதிகளில் தொடர்ந்து குளவித்தாக்குதல்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

இதுவரை பலர் குளவித் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன் பலர் உடல், உள ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேர்ஹாம் தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி ஐந்து தொழிலாளர்கள் சிகிச்சைக்காக லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேர்ஹாம் தோட்டப் பகுதியிலுள்ள 10 ஆம் இலக்க தேயிலை மலையில், கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களே இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். மரத்திலிருந்த குளவிக் கூட்டை கழுகு கலைத்ததால் இவ்அனர்த்தம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.



சம்பவத்தில் ஐந்து பெண் தொழிலாளர்கள் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர். பெருந்தோட்டங்கள் உரியமுறையில் பராமரிக்கப்படாமையால் அவை காடுகளாக மாறி வருவதால். அட்டைக்கடி, குளவிக்கொட்டு, சிறுத்தை, காட்டுப்பன்றி, பாம்பு போன்ற உயிரினங்களின் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதாகவும் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

அதுமட்டுமின்றி குளவிக் கூடுகளை முறையாக பாதுகாப்பாக அகற்றுவதற்கு தோட்டநிர்வாகங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் குளவிக் கொட்டுக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை வழங்கும் வசதிகளில் குறைபாடு நிலவுவதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது.

# பேராதனைப் பல்கலை பாதுகாப்புப் பிரிவு ஊழியர் நலன்புரிச் சங்கத்தில் நிதிமோசடி

**(எம்.ஏ. அமீனுல்லா)**

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பிரிவின் ஊழியர் நலன்புரி சங்கத்துக்குச் சொந்தமான பணக்கணக்குப் பதிவேட்டில் பல இலட்சம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்புப் பிரிவின் ஊழியர் நலன்புரி சங்கத்தைச் சேர்ந்த 43 பேரும், பொதுக்குழுவையோ அல்லது சிறப்பு பொதுக் குழுவையோ உடனடியாக கூட்ட வேண்டுமென செயலாளருக்கு கையெழுத்துடன் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இக்கடிதத்தின் பிரதிகள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பதில் பதிவாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் கண்டி சமூக சேவைகள் ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நிதி மோசடிகளை ஒடுக்கும் முயற்சியாக இரண்டு வருடங்களாக சங்கத்தின் வருடாந்த ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடத்தப்படாமல் இருப்பது சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளதாக உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த 2 வருட காலங்களில் பல்வேறு நிகழ்வுகளில் வரவு செலவு திட்டக்கணக்கறிக்கைகள் முன்வைக்கப்படவில்லை எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.


# எல்ல பிரதேச செயலகத்தில் சேவை பெறச் சென்றவர் மயங்கி விழுந்து உயிரிழப்பு

பதுளை எல்ல பிரதேச செயலகத்தில் சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்த நபரொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் நமுனுகுல தன்னக்கும்புர பகுதியைச் சேர்ந்த ராமையா குழந்தைவேலு என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்கான விண்ணப்பப்படிவம் பெறுவதற்காக பிரதேச செயலகத்தின் முன்னால் வரிசையில் காத்திருந்த போதே இவ்வாறு மயங்கி உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# கழிவு தேயிலை மீட்பு

**(கம்பளை நிருபர்)**



கம்பளை வெலம்பொட பிரதேசத்தில் கழிவு தேயிலையை பதுக்கி வைத்திருந்த இரு கட்டடங்களை தேயிலை அதிகார சபை அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த இரு கட்டடங்களுக்கும் தேயிலை அதிகார சபை அதிகாரிகள் சீல் வைத்துள்ளனர். நேற்று காலை கம்பளை வெலம்பொட நகரிலுள்ள வெவ்வேறு இடங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே கழிவு தேயிலையை பதுக்கி வைத்திருந்த இரு கட்டடங்களை முற்றுகையிட்டுள்ளனர். தேயிலை அதிகார சபை அதிகாரிகள் கம்பளை விசேட அதிரடிப்படையின் ஒத்துழைப்புடன் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். சுமார் 17000 கிலோ கழிவு தேயிலை இதன்போது மீட்கப்பட்டுள்ளது. கழிவு தேயிலை இருந்த இடத்தை தேயிலை அதிகார சபை காரியாலய அதிகாரிகள் சீல் வைத்தனர்.



இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை தேயிலை அதிகார சபை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# போலி ஆவணங்கள் பயன்படுத்தி பாடசாலையில் மாணவர் அனுமதி

### அதிபர் தலைமறைவு

கட்டுகஸ்தோட்டை பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையொன்றில் போலி ஆவணங்களை பயன்படுத்தி மாணவர்களை அனுமதித்ததாக குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அதிபர் தற்சமயம் தலைமறைவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் கண்டி பொலிஸ் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்ததையடுத்து இவர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே இதுதொடர்பான வழக்கு விசாரணைகளுக்காக கடந்த 5ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த முன்னாள் அதிபர், முன்பிணை கோரியிருந்தார். எனினும் கண்டி மேலதிக நீதவான் அதனை நிராகரித்ததுடன் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

இதனையடுத்து கம்பளையிலுள்ள அதிபரின் வீட்டிற்கும் மத்திய மாகாண கல்வி திணைக்களத்திற்கும் பொலிஸார் சென்று பார்த்த போது அவர் அங்கு இருக்கவில்லை.

பாடசாலை அதிபர் பதவியிலிருந்து அவர் நீக்கப்பட்டதையடுத்து ஒருநாள் மாத்திரம் மாகாணக் கல்வி அலுவலகத்தில் பணிபுரிந்துவிட்டு சுகயீன விடுப்பு கோரிய மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்துள்ளதாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்முறை போலி ஆவணங்களை தயாரித்து 18 மாணவிகளை சட்டவிரோதமான முறையில் பாடசாலையில் அனுமதித்துள்ளதாகவும் அதற்கு முன்னர் சட்டவிரோதமான முறையில் 180 மாணவிகளை பாடசாலையில் அனுமதித்துள்ளதாகவும் கணக்காய்வு அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

# எதிர்காலத்தில் சர்வதேச தரத்தில் மரண சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை

### அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கம்

**(உக்குவளை விசேட நிருபர்)**

திடீர் மரண விசாரணை அதிகாரிகளால் இதுவரை காலம் வழங்கப்பட்டு வந்த சான்றிதழ்களுக்கு பதிலாக சர்வதேச தரத்திலான மரண சான்றிதழ்களை வழங்கிட நீதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாக அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கத் தலைவர் அநுர ஹேரத் தெரிவித்தார்.

பேராதனை வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் மரணச்சான்றிதழ் பீ. 18 விண்ணப்பப்படிவத்தில் மரணத்திற்கான காரணத்தை மாத்திரம் குறிப்பிட்டு மரணச்சான்றிதல்கள் விநியோகிக்கப்பட்டன. எனவே எதிர்காலத்தில் இவற்றுக்கு பதிலாக வழங்கப்படவிருக்கும் புதிய மரணச்சான்றிதழில் மரணம் ஏற்பட்டமைக்கான நான்கு காரணிகளை முன்வைத்து 24 கருத்துக்கள் அடங்கவுள்ளதாக தெரியவருகின்றது. இதில் நோயாளர்களுக்கு வழங்கப்பட்ட வைத்திய சேவைகளின் விபரங்கள், நோயாளிகள் சம்பந்தமான விபரங்கள், உறவினர்கள் சம்பந்தமான விபரங்கள் இப்புதிய மரணச்சான்றிதழ் பத்திரத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவிக்கின்றது.

இது சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்ட மரணச்சான்றிதழ் பத்திரமாகும்.

நாட்டில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பழைய சட்டவிதிகளுக்கு அமைய நியமிக்கப்பட்ட போதிலும் மேற்படி நியமனங்கள் இக்காலத்துக்கு ஒவ்வாத நியமனங்கள் என கருதப்பட்டு வருவதால் அவற்றை ரத்து செய்து நாட்டில் இருக்கின்ற 331 பிரதேச செயலக பிரிவுகளுக்கும் தலா ஒரு மரண விசாரணை அதிகாரி வீதம் நியமிக்கப்படவுள்ளதாக அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சங்கம் தெரிவிக்கின்றது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 28 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.42 |
| லுஹர் | 12.18 |
| அஸர் | 03.42 |
| மஃரிப் | 06.31 |
| இஷா | 07.46 |

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் ஆடி 12

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# கப்பல்களிலிருந்து எரிபொருள் ஒழுக்கு: கண்காணிக்க செய்மதி தொழினுட்பம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டின் கடல் வழி மார்க்கமாக பயணிக்கும் கப்பல்கள் மூலம் ஏற்படும் எரிபொருள் ஒழுக்கை கண்காணிப்பதற்கு, செய்மதி தொழினுட்பம் பெற்றுக் கொள்ளப் படவுள்ளது. இதற்காக பிரான்ஸ் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்ப டவுள்ளதாக நகர அபிவிருத்தி வீட மைப்பு அமைச்சர் பிரசன்ன ரண துங்க தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டுடன் இது தொடர் பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற் கொள்வது தொடர்பில், அமைச்சரால் அமைச் சரவைக்கு அமைச்சர வைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



இதற்கிணங்க ஒரு வருட காலத்திற்கு நடை முறையில் இருக்கும் வகையில் இச்செய்மதி தொழினுட்பம் பயன் படுத்தப்படவுள்ளது.

பிரான்ஸின் கலெக் டட் லொகாலிசேஷன் செட்டடைல் நிறுவனத் துடன் இதற்கான புரிந்து ணர்வு ஒப்பந்தம் மேற் கொள்ளப்படவுள்ளது. இதற்கான அதிகாரம் சமுத்திரவியல் அதிகார சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள அமைச் சர், அமைச்சரவைக்கு சமர்ப்பிக் கப்பட்டுள்ள பத்திரத்தில் அது உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டத்தின் மொத்த பெறுமதி 601,810.00 யூரோ என்றும் அந்நிதியை மேற்படி நிறுவ னத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள் ளதாக வும் அமைச்சர் தெரிவித்துள் ளார்.

இத்திட்டத்தை முன்னெடுப்பதற் கான முழுமையான நிதிச் செலவை பிரான்ஸ் அரசாங்கம் ஏற்றுள்ளது. இலங்கை அரசாங்கத்துக்கு இந்நி தியை வழங்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

# 13 ஐ, நடைமுறைப்படுத்துவதில் என்ன பிரச்சினை? கூறுங்கள் பேசுவோம்

## சுதந்திர கட்சி ஜனாதிபதிக்கு தெரிவிப்பு



நாற்பது வருட காலமாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதில் நடைமுறை சிக்கல் என்ன இருக்கி றது? என்பதை தெளிவாக கூறினால், அது பற்றி பேசு வோமென ஸ்ரீலங்கா சுதந் திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனா கூறியதாக சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடை பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட பின் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செய்தி குறிப்பிலேயே, அங்கஜன் இராமநாதன் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறி சேனாவும் நானும் கலந்து கொண்டோம்.

இம்மாநாட்டில் பல்வேறு விட யங்களைப் பற்றி ஆராய்ந்தோம். இந்நிலையில் 13 ஆவது திருத் தத்தை அமுல்படுத்துவது தொடர் பில் விரிவாக பேசப்பட்டது.

பொலிஸ் அதிகாரத்தை தவிர ஏனைய அதிகாரங்களை வழங்க முடியுமென ஜனாதிபதி தெரிவித்ததுடன் பொலிஸ்

06

## பேலியகொடை மெனிங் சந்தை

# விற்பனை நிலையங்களை வழங்குவதில் முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லை



பேலியகொடை மெனிங் சந்தையில் விற்பனை நிலையங்கள் வழங்குவதில் எவ்வித முறைகேடும் நடைபெ றவில்லையென, நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. கடைகளை வழங்குவதில் முறைகேடு நடந்துள்ள தாக யாராவது உணர்ந்தால் மேன்முறையீடு செய்ய முடியும் என,நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சொத்து மற்றும் காணி அபி விருத்தி) ஈ.ஏ.சி. பிரியசாந்த தெரி வித்தார். அதுபற்றி பரிசீலிக்க தனது அதிகார சபை தயாராக இருப்பதாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பேலியகொடை மெனிங் சந்தை யின் செயற்பாடுகளை வழமை போன்று முன்னெடுப்பதற்கு இதுவரை ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபை யில் (26) நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதா வது:

“மெனிங் சந்தை திட்டம் 2020 டிசம்பரில் கொழும்பு பகுதியிலி ருந்து பேலியகொடைக்கு மாற்றப் பட்டது. இந்தச் சந்தை கொழும்பில் இருந்தபோது, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உருவாக் கப்பட்ட நகர அபிவிருத்தித் திட் டத்தின்படி, சகல போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளை யும் கணக்கில் கொண்டு மேற் கொள்ளப்பட்டது. அதற்கு முன் கொழும்பு மெனிங் மார்க்கெட்டில் இருந்த கடைகளை கணக்கெடுப் புச் செய்தோம். அங்கு 1,259 பேர் வியாபாரம் செய்து வருவது தெரி யவந்தது. இதில் 666 பேர் மொத்த வியாபாரம் செய்திருந்தனர். மற்றவர்கள் சில்லறை வியா பாரம் செய்து வந்தனர்.

இச்சந்தை பேலியகொ டைக்கு மாற்றப்பட்ட போது 1,288 கடைகள் வர்த்தகர் களுக்கு வழங்கப்பட்டன. அந்த மக்கள் அனைவரும் கொழும்பு மெனிங் சந்தை யில் வியாபாரம் செய்தவர் கள். கொழும்பில் இருந்த போது ஐந்து ஏக்கர் சந்தை இருந் தது. பேலியகொடைக்கு கொண்டு வந்த போது 13 ஏக்கராக மாறியது. எனவே, 1,259க்கும் மேற்பட்ட வர்த்தகர்களுக்கு தொழில் செய்ய வசதி செய்து கொடுத்தோம். இங்கு சுமார் 315 கடைகள் எஞ்சியுள்ளன. இந்தக் கடைகளை கையகப்படுத்த பல்வேறு சங்கங்களில் இருந்து கோரிக்கைகள் வந்தன. அதன்படி, இதற்காக ஒரு குழுவை நியமித் தோம்.

எமது அமைச்சு மற்றும் நகர அபி விருத்தி அதிகார சபையின் அதிகா ரிகள் அடங்கிய அந்தக் குழுவினூ டாகவே யாருக்கு இவ்விற்பனை நிலையங்களை வழங்குவது என்பது தீர்மானிக்கப்பட்டது என்றார்.

# சுகாதார அலுவலர்களின் வருகை, வெளியேறல் நேரங்களை பதிவிட கைவிரல் அடையாளம்

சுகாதார அமைச்சின் மருத்துவ நிர்வாக சேவை அதிகாரிகள் உள் ளிட்ட சில நிறைவேற்றுப்பிரிவு அதிகாரிகளின் அலுவலக வருகை மற்றும் வெளியேறும் தரவுகளை உறுதிப்படுத்திக்கொள்ள, கைவிரல் அடையாளம் கட்டாயமாக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் இந்த அதிகாரிகள் கைவிரல் அடையாளத் துக்கான இயந்திரத்தை கட்டாயம் பயன்படுத்த வேண்டுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் நிர்வாகப்பிரி வின் மேலதிக செயலாளர் கீதாமணி சீ கருணாரத்னவின் கையொப்பத்து டன் இதற்கான அறிவித்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலதிக செயலாளர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிதிப்பிரிவு அதிகாரிகளுக்கு இந்த அறிவித்தல் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

சுகாதார சேவையில் இதுவரை காலம் இவ்வாறான கைவிரல் அடை யாளம் பயன்படுத்தப்படவில்லை.

வருகை நேரம் மற்றும் வெளியே றும் நேரம் தொடர்பிலான தரவுக ளுக்கு கைவிரல் அடையாள இயந்திர பயன்பாட்டு முறையை அறிமுகப் படுத்துவதானது வைத்தியர்களின் சேவை யாப்புக்கு பாதிப்பை ஏற்ப டுத்துமென கொழும்பு தேசிய வைத் தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தெரிவித்தார்.

அத்துடன், சுகாதார அமைச்சின் மருத்துவ நிர்வாக சேவை அதிகாரி கள் உள்ளிட்ட சில நிறைவேற்றுப் பிரிவு அதிகாரிகளுக்கு, கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன் பாட்டில் கொண்டுவருவது நடை முறைக்கு சாத்தியமானதல்லதென அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஆகஸ்ட் முதல் நீர் கட்டணம் அதிகரிப்பு

நீர்க் கட்டணம் எதிர்வரும் ஆகஸ்ட் மாத முற்பகுதியிலி ருந்து அதிகரிக்கப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடி காலமைப்பு சபை தெரிவித்துள் ளது.

இதற்கான யோசனை அமைச் சரவையின் அனுமதிக்காக சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக சபையின் பொதுமுகாமையாளர் வசந்தா இலங்கசிங்ஹ குறிப்பிட்டுள்ளார்.

இந்த யோசனைக்கு அமைச் சரவை அனுமதி வழங்கினால், ஆகஸ்ட் மாத முற்பகுதியிலிருந்து நீர் கட்டணம் அதிகரிக்கப்படுமெ னவும் அவர் தெரிவித்தார்.

# சுகாதார நிறுவனங்களின் மின் கட்டண நிலுவை ரூ. 3000 மில்லியன்

நாடளாவிய ரீதியில் அமைந் துள்ள வைத்தியசாலைகள் உள் ளிட்ட சுகாதார நிறுவனங்களில் 3,000 மில்லியன் ரூபா அளவி லான மின் கட்டணம் நிலுவை யிலுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்நிலுவைத் தொகையை சுகாதார அமைச்சினூடாக இலங்கை மின்சார சபைக்கு செலுத்துமாறு அறிவிக்கப்பட் டுள்ளதாக மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரொஹான் செனெவிரத்ன குறிப்பிட் டுள்ளார்.

சுமார் ஐந்து மாதங்களில் கொழும்பு தேசிய வைத்தியசா லையினால் 339 மில்லியன் ரூபா வரையிலான தொகை செலுத் தப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு நாணயங்களை எடுத்துச்செல்லும் கட்டுப்பாடு

## ஆறு மாத காலங்களுக்கு தளர்வு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாட்டிலிருந்து வெளிநாட்டு நாண யங்களை எடுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. எதிர்வரும் ஆறு மாத காலங்களுக்கு இக்கட் டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதனைத் தவிர ஓய்வூதியக்கா ரர்களின் நடைமுறை கொடுக்கல் வாங்கல்களில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டுள்ள தாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதேவேளை, இலங்கைக்கு வெளி யேயுள்ள நிறுவனத்தின் சாதாரண பங்கை முதலீடு செய்வது இதுவரை காலமும் இடைநிறுத்தப்பட்டி ருந்தது.

அது கொழும்பு பங்கு பரிமாற்ற நிறுவனங்களின் பட்டியலில் உள் ளீர்க்கப்பட்டுள்ளதுடன் 2 இலட்சம் அமெரிக்கன் டொலர்களை முதலீடு செய்வதற்கு புதிய கட்டளை மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு முன்னால்,அமைச்சின் அதிகாரிகள் மற்றும் தொழில் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் நேற்று (27) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சட்டவிதிகளை சுதந்திரமாக அமுல்படுத்த அரச அதிகாரிக ளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சூழலை உருவாக்க வேண்டும் என்பதை வலியு றுத்தியே, இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மாதம்பே பகுதியில் விபத்து; இரு மாணவர்கள் மரணம்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

மாதம்பை பகுதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத் தொன்றில், 16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இம்மாணவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள், தம்பகல ஆற்றுப்பகுதியில்நேற் றுப் பிற்பகல் 2.30 மணியளவில் வீதியை விட்டு விலகியது.இந்த சைக்கிள் அருகிலிருந்த மின்கம் பத்தில் மோதுண்டதில் இரண்டு மாணவர்களும் உயிரிழந்துள்ள தாக மாதம்பை பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

மேற்படி விபத்தில் மாதம்பை தம்பகல்ல பிரதேசத்தைச் சேர்ந்த தருஷ சந்தீப மற்றும் ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சஷ்மித ஏஷான் ரணவீர ஆகியோரே உயிரிழந்துள்ளனர். இவர்கள் இருவரும் உறவினர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

# வடக்கு, கிழக்கில் இன்று பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

கொக்குத்தொடுவாய் மனித புதை குழிக்கு நீதிகோரி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் இன்று (28) பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

பூரண ஹர்த்தாலை மேற்கொள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாம லாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. அதேவேளை இன்று (28) வட்டுவா கல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்ப டவுள்ளது.

ஹர்த்தாலுக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக ஆசியர் சங்கம், தமிழரசுக் கட்சி, உள்ளிட்ட பல தரப்பினரும் ஆதரவு தெரிவித் துள்ளனர்.

# தங்கொல்லாகம குளத்தின் மதகுகள் புனரமைப்பு

**(கெக்கிராவ குறூப் நிருபர்)**



பலுகஸ்வெவ, கெலேவ தங்கொல்லாகம குளத்தின் மதகைப் புனரமைப்பு செய்வதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.அநுராதபுர மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான துமிந்த திசாநாயக்க இத்திட்டத்தை அண்மையில் ஆரம் பித்து வைத்தார்.

இக்குளத்தின் மதகு மற்றும் வான் என்பன சிதைவ டைந்த நிலையில் உள்ளன. இதை நிவர்த்தி செய்யு மாறு, பிரதேச விவசாய சங்கத்தினர் பாராளுமன்ற உறுப் பினரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இவ்வேண்டுகோளுக்கு இணங்கவே இவ்வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரோடு பிரதேச சபை வேட்பாளர் கயானி குமாரி, விவசாயச் சங்க உறுப்பினர்கள், கிராமவா சிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வசந்த முதலிகே நேற்று கைது

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் இணைப்புச் செயலாளர் வசந்த முதலிகே நேற்றுக் கைது செய்யப்பட் டுள்ளார். பொரளை கனத்தை மயா னத்திற்கு அருகாமையில் கறுவாத் தோட்டம் பொலிசார் இவரைக் கைது செய்துள்ளனர். கொழும்பு வோட் பிளேஸ் பகுதியில் உள்ள பல்கலைக்க ழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் கடந்த 2020 ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி அப்பகுதியில் மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்ப டுத்தியிருந்தார்.

அவருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது. இப் பிடியாணை உத்தரவுக்கு அமையவே அவர் கைதானார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு

தகாத செயல் புரிந்திட அஞ்சி நாணுவதும், எல்லோரிடமும் ஆணவமின்றிப் பணிவுடன் நடந்து கொள்வதும் ஒருவரின் நலத்தையும் அவர் பிறந்த குலத்தையும் உயர்த்தக் கூடியவைகளாகும்.

## பொருளாதார மறுமலர்ச்சியை துரிதப்படுத்த உதவும் அறிவிப்பு

இந்து சமுத்திரத்தின் தெற்காசியப் பிராந்தியத்தில் தனித்துவம் மிக்க விவசாயப் பொருளாதாரப் பாரம்பரியங்களுடன் கூடிய நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கும் இலங்கை, கடந்த வருடத்தின் ஆரம்ப காலப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. அந்நிய செலாவணி பற்றாக்குறையுடன் ஆரம்பமான இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக இரசாயனப் பசளை உட்பட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன.

இப்பொருளாதார நெருக்கடியினால் மக்கள் பலவிதமான அசௌகரியங்களையும் பாதிப்புக்களையும் எதிர்கொண்டனர். அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள், சேவைகளுக்கு தட்டுப்பாடும் பற்றாக்குறையும் ஏற்பட்டன. அவற்றின் விலைகளும் பெரிதும் அதிகரித்தன. இந்நெருக்கடியின் பின்புலத்தில் நிவாரணங்களையும் சலுகைகளையும் கோரி ஆர்ப்பாட்டகளும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் இப்பொருளாதார நெருக்கடியினால் தோற்றம் பெற்ற நெருக்கடிகளும் பாதிப்புகளும் தேசிய, சர்வதேச மட்டங்களது அவதானத்தைப் பெற்றன. அவற்றில் ஐக்கிய நாடுகள் சபையும் அவற்றின் துணை நிறுவனங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாவதற்குரிய சாதகமான சூழலைக் கொண்டிராத இலங்கை இந்நெருக்கடிக்கு உள்ளானமையானது, பல தரப்பினரதும் அவதானம் இலங்கை மீது குவிக்கப்பட வழிவகுத்தது. இது இலங்கையின் சமூக, பொருளாதார முன்னேற்றங்களுக்கு துணைபுரியும் வகையில் அமைந்துள்ளது.

அந்த வகையில் இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரியங்களும் இந்நாட்டு மக்களுக்கு சுமையாகவும் பாதிப்பாகவும் அமைவதைத் தவிர்க்க உதவும் வகையில் இந்தியா, சீனா உட்பட உலகின் பல நாடுகளும் ஐ.நா. வின் சர்வதேச நிறுவனங்கள் அடங்கலாக சர்வதேச நிதியுதவி வழங்கும் நிறுவனங்களும் இந்நாட்டுக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்க ஆரம்பித்தன.

இதே காலப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றதோடு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்ட பொருளாதார வேலைத்திட்டங்களையும் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலப்பகுதி முதல் பயனளிக்கத் தொடங்கியது.

அதன் விளைவாக நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் அசௌகரியங்களும் பாதிப்புக்களும் கட்டம் கட்டமாக நீங்கி வந்த நிலையில் தற்போது மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்துள்ளது. இதேவேளை, இந்நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாகக் கடமையாற்றிய ஹனா சிங்கர் ஹம்டியின் பதவிக்காலம் நிறைவுற்றதைத் தொடர்ந்து புதிய வதிவிடப் பிரதிநிதியை ஐ.நா. செயலாளர் நாயகம் குட்டரெஸ் அந்தோனி நியமித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய வதிவிடப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் மார்க் அன்ட்ரூ ப்ரான்ஸ் தமது கடமைகளைக் கொழும்பு அலுவலகத்தில் ஏற்றுக் கொண்ட பின்னர் முக்கியத்துவம் மிக்க அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், தற்போதைய நெருக்கடியில் இருந்து இலங்கை மீட்சியடைவதற்கு அவசியமான முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் முனைப்புடன் தனது பணிகளை ஆரம்பிக்கவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், நாட்டின் பொருளாதாரம் நிலைபேறான பாதையில் பயணிப்பதை முன்னிறுத்திய முதலீடுகளை ஊக்குவிப்பதில் அதிக அக்கறை செலுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் உண்மையில் இது ஒரு முக்கியத்துவம் மிக்க அறிவிப்பாகும். இந்நாட்டின் நிலைபேறான பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்த அறிவிப்பும் ஒத்துழைப்பும் நிச்சயம் உந்துசக்தியாக இருக்கும். இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் வகையிலும் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலும் பணிகளை முன்னெடுக்கப் போவதாக அவர் விடுத்துள்ள அறிவிப்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த அடிப்படையில் அவரது அறிவிப்பை பலரும் வரவேற்றுள்ளனர். இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அவர் கொண்டுள்ள அக்கறையை இவ்வறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது. அதனால் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் இவ்வறிவிப்பு அதிக செல்வாக்கு செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் இலங்கைக்கான ஐ.நா. வின் புதிய வதிவிடப் பிரதிநிதியின் இவ்வறிவிப்பு ஜனாதிபதி தலைமையிலான இலங்கை பெற்றுக் கொண்டுள்ள பாரிய வெற்றி என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# வி.ஜி.பி ஆண்டு விழாவில் சான்றோருக்கு கௌரவம்

வி.ஜி.பி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு விழா சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள டொக்டர் எம். ஜி. ஆர் ஜானகி மகளிர் கலைக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இதில், சிறப்பு விருந்தினர்களாக தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், வி.ஐ.டி பல்கலைக்கழக வேந்தர் கோ.விசுவநாதன், நீதியரசர் டி.என்.வள்ளிநாயகம், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவ்வை ந.அருள், வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் தலைவர் நாஞ்சில் பீட்டர், ம.தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் மல்லை சத்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அப்போது வி.ஜி.பி தமிழ்ச் சங்கத் நிறுவனத் தலைவர் வி.ஜி.சந்தோஷம் அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டி நினைவுப் பரிசுகளும் செங்கோலும் வழங்கப்பட்டன. விழாவில் இலக்கியப் பணியாற்றியதற்காக பல்வேறு கலைஞர்களுக்கு இலக்கிய நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. அதில் சிறப்பான கல்விப் பணி ஆற்றி வரும் டொக்டர் எம்.ஜி.ஆர். – ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தலைவர் வழக்கறிஞர் முனைவர் குமார் ராஜேந்திரன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதேபோல், வாழ்நாள் சாதனையாளருக்கான விருது சமூக செயற்பாட்டாளர் ‘பாலம்’ கல்யாண சுந்தரம் அவர்களுக்கும், கலைத்துறையில் சேவையாற்றியதற்காக நாட்டுப்புறப் பாடகர் வேல்முருகன் உள்ளிட்டோருக்கும் வழங்கி வைக்கப்பட்டது.





நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர், சபாநாயகர் உள்ளிட்ட ஆளுமைகள், தற்போதைய கால கட்டத்தில் இன்றைய தலைமுறையினருக்குத் தேவையான கல்வி பற்றியும் கல்வியினால் அடையும் முன்னேற்றத்தைப் பற்றியும் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். விழாவில் வி.ஜி.பி. சந்தோஷம் அவர்களின் பணியைப் போற்றும் வகையில், வி.ஜி.பி ஆண்டு மலர் உள்ளிட்ட பல்வேறு நூல்களும் வெளியிடப்பட்டன.

ராஜா தாஸ் எழுதிய ‘என் தந்தையாரின் அறிவுச் சிந்தனைகள்’ என்ற நூலை சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு வெளியிட, வி.ஐ.டி. பல்கலைக்கழக வேந்தர் விஸ்வநாதன் பெற்றுக் கொண்டார்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# மூதூர் நூராணியாநகரில் பல்கலைக்கழக மாணவர்கள் கௌரவிப்பு, கலைவிழா

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சாபிநகர் கிராம சேவகர் பிரிவில் இயங்கும் நூராணியா விளையாட்டுக் கழகம் மற்றும் தொழிலாளர் சங்கம் இணைந்து ‘மறைந்து போகும் விடயங்கள் நினைவில்’ எனும் கருப்பொருளில் நடத்திய மாபெரும் மாணவர் கௌரவிப்பு மற்றும் கலைவிழா நிகழ்வு என்பன அண்மையில் நூராணியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பி.றிகான் தலைமையில் நூராணியா வளாகத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றன.

மேலும் 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சாபிநகர் கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து பெருமளவிலான மாணவர்கள் 5 ஆம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.



இம்மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள், பிரதேச சமூக சேவையாளர் என பலரும் இவ்விழாவில் வெற்றிக் கிண்ணங்கள், பரிசில்கள், சான்றிதழ்கள் என வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்கால மாணவர் சமூகத்தினரையும் பாரம்பரிய கலாசாரங்களையும் பாதுகாக்கும் முகமாகவும் சமூகம் பிரதேச மட்டத்தில் கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றிக்கு அளிக்க வேண்டிய பங்களிப்புக்களை பாதுகாக்கும் முகமாகவும் இவ்விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளர் இஸ்ட்.எம்.எம்.நளீம் முன்வரா, மூதூர் பிரதேச சபை செயலாளர் வி.சத்தியசோதி, விளையாட்டு உத்தியோகத்தர் எம்.கரீஸ், கிராம சேவை உத்தியோகத்தர் வி.எம்.ஜரீஸ், சமுர்த்தி உத்தியோகத்தர் கே.எம்.பசீர் மற்றும் பிரதேச மக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

**எஸ்.கஸ்ஸாலி...**
(மூதூர் தினகரன் நிருபர்)

# காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரியின் அதிபராக 57 வருடங்கள் பணிபுரிந்த ஷைகுல் பலாஹ்

## ஏழாம் வருட நினைவுதினம் இன்று

காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரியின் அதிபராக 57 வருடங்கள் பணியாற்றிய காலஞ்சென்ற ஷைகுல் பலாஹ் அவர்களின் ஏழாண்டு நினைவுதினம் இன்று (28) ஆகும். மேற்படி அறபுக்கல்லூரியின் வரலாற்றில் மர்ஹூம் ஷைகுல் பலாஹ் அஷ்ஷெய்க் எம்.ஏ முகம்மது அப்துல்லாஹ் ஆலிம் ரஹ்மானி ஹஸ்ரத் அவர்களின் அர்ப்பணிப்பு போற்றத்தக்கது.

அவர் இந்தியாவின் அதிராம்பட்டினத்தில் ஆலிம் குடும்பதில் பிறந்து வளர்ந்து மார்க்கக் கல்வியை ரஹ்மானிய்யா அறபுக்கல்லூரியில் பயின்றார். மர்ஹூம் அப்துல்லாஹ் ஹஸ்ரத் 1959 ஆம் ஆண்டு காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரியில் அதிபராக இணைந்தார்.

மர்ஹூம் அப்துல்லாஹ் ஹஸ்ரத் அவர்கள் பலநூறு ஆலிம்கள் மற்றும் பட்டதாரி ஆலிம்களை உருவாக்கினார். சாதாரண ஒரு கட்டடத்தில் இயங்கிய கல்லூரியை இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய வகையில் விஸ்தரித்தார்.



வறிய மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்தி கல்வி, உணவு, மருத்துவம், தங்குமிடம் போன்ற வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பொருளாதார உதவிகள் பெற்று கலாசாலையை முன்னேற்றம் காணச் செய்ததில் பாரிய பங்களிப்பைச் வழங்கினார்.

தன்னுடைய சொந்த வாழ்க்கையைத் துறந்து மனைவி, பிள்ளைகள், குடும்பத்தாருக்கென எதுவுமே சேகரிக்காமல் இறைதிருப்தியை நோக்காகக் கொண்டு பணியாற்றினார். ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்ற மக்களுக்கு தனது கையினால் கஞ்சி காய்ச்சி வீடுவீடாகச் சென்று வழங்கினார்.

நாட்டில் யுத்தம் நிலவிய காலத்தில் அமைதி, சமாதானம், சகவாழ்வு, இனமதநல்லிணக்கத்தை தோற்றுவிக்க அயராது பாடுபட்டார்.

அவர் காத்தான்குடியில் ஐம்பத்தேழு வருடங்கள் பணியாற்றிய காலத்தினுள் உயிரோட்டம் உள்ள திட்டங்கள் வகுத்து வெற்றி கண்டிருக்கிறார். அவரை நினைவு கூரும் வைபவம் நாளை (29) சனிக்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அறபுக்கல்லூரி ஷைகுல் பலாஹ் நினைவு மண்டபத்தில் மஜ்லிஸுல் பலாஹிய்யீன் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி ஏ அப்துல் அஸீஸ் பலாஹி தலைமையில் நடைபெறும். கத்முல் குர்ஆன் நினைவுகள் பற்றிய சிறப்புரைகள் மற்றும் துஆ பிரார்த்தனை வைபவம் இடம்பெறவுள்ளதுடன் இப்தார் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

மௌலவி
**எஸ்எம்எம் முஸ்தபா...**
பலாஹி, (உறுப்பினர், மஜ்லிஸுல் பலாஹிய்யீன் பழைய மாணவர் சங்கம்)

# கோணாவத்தை அபிவிருத்தியை ஆராய்வதற்காக விசேட கூட்டம்

அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. எம்.ஷாபிர் தலைமையில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. ஒரு ஊரின் ஆரம்பத்தில் தொடங்கி ஊரின் முடிவில் நிறைவுறும் கோணாவத்தை ஆற்றினை எல்லைப்படுத்துவதுடன், அதன் இரு பக்கத்தினையும் அழகுபடுத்தும் பொருட்டு இந்தக் கலந்துரையாடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

கோணாவத்தை அபிவிருத்திக் குழுவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இக் கலந்துரையாடல் நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம். எஸ்.உதுமாலெப்பை கலந்து கொண்டார்.

பிரதேச செயலகம், பிரதேச சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து கோணாவத்தை அபிவிருத்திக் குழு மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் அடையாளம் கணப்பட்டன. குறித்த வேலைத் திட்டத்தில் அவசரமானதும், அவசியமானதுமான ஒரு சில வேலைத்திட்டங்களை அடையாளப்படுத்தியதுடன், அதனை மேற்கொள்ளத் தேவையான சாத்திய வளங்கள் தொடர்பிலும் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு ஆராயப் பட்டது.

அந்த வகையில், அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றை எல்லையிடும் பணிகள் ஏற்கனவே முதல்கட்டமாக பெரியபாலத்தடியில் இருந்து தைக்கா நகர் வரை முடிவுறுத்தப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டில் இருந்து கொட்டுப் பாலம் வரைக்கும் எல்லை இடப்பட்டது. எல்லையிடப் படாமல் நிறுத்தப்பட்டுள்ள கொட்டு பாலத்தில் இருந்து பெரிய பாலத்தடி வரை ஆற்றின் இரு கரையிலும் உள்ள காணி சொந்தக்காரர்களை அழைத்து எல்லையிடுவதற்கான பணிகளை அக்கரைப்பற்று நீர்ப்பாசன திணைக்களம் மேற்கொள்ளுதல் என்று தீர்மானிக்கப்பட்டது.





கோணாவத்தை ஆற்றில் நீர்த்தாவரங்கள் நிரம்பியுள்ளதால் வடிச்சல் நீர் ஓடுவதற்கு தடையாகவுள்ளது. அத்துடன் முதலைகளினால் இப்பிரதேச மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். எனவே இதனை துப்புரவு செய்வதற்கு அக்கரைப்பற்று நீர்பாசனத் திணைக்களம் அவசர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கோணாவத்தை ஆற்றில் நீரோடுவதற்கு தடையாக நிரம்பியுள்ள நீர்த்தாவரம் நிரம்பியுள்ள பகுதியையும்,கோணாவத்தை ஆற்றில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பாலத்தின் பணிகளையும் குழுவினர் பார்வையிட்டதோடு அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு பகுதியில் வடிச்சல் ஓடுவதற்கு தடையாக உள்ள பகுதியையும் குறித்த குழுவினர் பார்வையிட்டனர்.

இக்கலந்துரையாடல் நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விஷேட ஆணையாளர் எம்.ஐ.எம். பாயிஸ்,அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்கள், அட்டாளைச்சேனை நீர்ப்பாசனக் குழுவினர், விவசாய அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)
**எம்.எப். நவாஸ்...**
(திராய்க்கேணி தினகரன் நிருபர்)

# திட்டமிடலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் ஹிஜ்ரத்

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் இரண்டாவதாக ஆட்சிக்கு வந்த கலீபா உமர் (ரழி) அவர்களுடைய காலத்தில் உலகின் மூன்றிலிரண்டு பகுதிக்கு இஸ்லாம் பரவியிருந்தது. இந்நிலையில் உலகின் எந்தப் பாகத்துடனும் தொடர்புகளைப் பேணும் வகையில் ஒரு கலண்டரை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை கலீபா உமர் (ரலி) அவர்கள் உணர்ந்தார். இந் நிலையில் நபிகளாரின் பிறப்பையோ, நபித்துவத்தையோ, இறப்பையோ அன்றி நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணத்தை முற்படுத்தி வருடக் கணக்கை ஹிஜ்ரியில் ஆரம்பித்தார்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இறைத்தூதை ஏற்றுக்கொண்டவர்கள் அனைவருடனும் மக்காவை விட்டு வெளியேறி மதீனாவுக்கு இடம் பெயர்ந்ததே ஹிஜ்ரத் ஆகும். நபிகளார் கொண்டு வந்த தூதை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அதற்கு ஒரு சமூகக் கட்டமைப்பு அவசியமாக இருந்தது. அதற்கு மக்காவாசிகளின் அப்போதைய நிலை இடம் கொடுக்கவில்லை. நபிகளார் மக்காவில் இருந்து இடம் பெயர்வது என எடுத்த கடினமான தீர்மானத்தின் பின்னர் மதீனாவில் இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பு சிறந்த முறையில் உருவாக்கப்பட்டு வளர்ச்சி கண்டது. இதிலிருந்து இன்று வரையும் முழு உலகிலும் இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பு பரவி இருப்பதற்கு இந்த ஹிஜ்ரத்தே காரணமாக அமைந்தது.

எனவே மாற்றமொன்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஹிஜ்ரி வருடம் நம் ஒவ்வொருவரிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். ஒரு முஸ்லிமுடைய இரண்டு நாட்கள் சமமாக இருக்க மாட்டாது என்ற நபிகளாரின் பொன்மொழிக்கொப்ப, கடந்த வருடத்தை விட இந்த வருடம் சிறப்பானதாக அமைய வேண்டும். அதற்காக கடந்த வருடத்தில் தான் விட்ட தவறுகளை ஒருமுறை முஹாஸபா செய்து பார்க்க வேண்டும். அத்தோடு இவ்வருடத்தில் கடந்த வருடத்தின் தவறுகளை திருத்திக் கொண்டு எவ்வாறு முன்னேறுவது என்பது தொடர்பில் திட்டமிட வேண்டும். **'ஒரு சமுதாயம் தனக்குள் இருப்பவற்றை மாற்றிக் கொள்ளாதவரையிலும் அல்லாஹ்தஆலா அந்த சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டான்'.**

**(அல் குர்ஆன் 13:11)**

ஹிஜ்ரத்தின் ஒட்டுமொத்த நிகழ்வுமே திட்டமிடலின் அடிப்படையில் நிகழ்ந்ததாகும். படுக்கையில் சிறுவர் அலி (ரழி) அவர்களைக் கிடத்தி விட்டுச் செல்வது முதல், பயணப் பாதை, தங்குமிடங்கள், தங்குமிடத்தில் உணவுக்கான ஏற்பாடுகள், யாருடன் பயணிப்பது எனப் பல விடயங்களையும் இறைதூதர் (ஸல்) அவர்கள் ஆரம்பத்திலேயே திட்டமிட்டிருந்தார்கள்.

ஏனைய பல திட்டமிடல்கள் இருந்த போதிலும் ஒரு தனி மனிதன் தன்னிடம் இருப்பவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களைத் திட்டமிடுவதற்காக ஹிஜ்ரி வருடத்தின் முதலாம் மாதத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

முஸ்லிமின் அடிப்படைக் கடமைகளில் முக்கியமானது ஐங்காலத் தொழுகையாகும். தொழுகையில் மிகவும் சிறப்பானது அவ்வல் ஜமாஅத்துடன் முதல் ஸப்பில் தொழுவதாகும். வழமையாக பள்ளிக்குச் சென்று தொழுபவர்கள் அவ்வல் ஜமாஅத்தைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிட முடியும். வழமையாக பள்ளிக்குச் சென்று தொழுபவர்கள் ஜமாஅத் தொழுகைக்காக முயற்சிக்க முடியும். பள்ளிவாசலல்லாத இடங்களில் தொழுபவர்கள் தமது தொழுகைகளில் அதிகமானவற்றை பள்ளிவாசலை நோக்கி நகர்த்த முயற்சிக்கலாம். அத்துடன் நபிலான தொழுகைகளில் படிப்படியாக அதிகரிப்பை ஏற்படுத்திக் கொள்வதை திட்டமிட்டுச் செயற்படுத்தலாம். குறிப்பாக முஅக்கதாவான 12 ரக்அத்துகளையும் படிப்படியாக வழமைக்குக் கொண்டு வர முடியும். தஹஜ்ஜுத் தொழுகையை நாளாந்தம் தொழுவதற்காகவும் அப்படித் தொழக்கூடிய ஒருவர் அதனுடைய நேரத்தை அதிகரிப்பதற்காகவும் முயற்சிக்கலாம். ஜும்ஆத் தொழுகையைப் பொறுத்தவரையில் எவ்வளவு நேரகாலத்துடன் அதற்காக ஆஜராக முடியுமோ அந்தளவு வரை முயற்சிப்பதற்கு திட்டமிட முடியும்.

இஸ்லாத்தின் இரண்டாவது கடமையான தொழுகையை சிறப்பாக நிறைவேற்றுவது என்பதே சிறந்த திட்டமிடலின் வெளிப்பாடாக அமையலாம். அவ்வல் ஜமாஅத்துக்காக முயற்சிப்பவர்கள் அதான் சொன்னவுடன் பள்ளிவாசலுக்கு வர வேண்டியிருக்கிறது. அதற்காக அவர்கள் தமது அலுவல்களையெல்லாம் குறித்த தொழுகை நேரத்தை வைத்து ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. தொழுகைக்கு ஆயத்தமானவராக தன்னை எப்போதும் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதிகாலையில் எழுந்திருக்கவும் அதற்காக நேரத்துக்குத் தூங்கவும் வேண்டியிருக்கிறது. இவ்வாறான பல திட்டமிடல்கள் தொழுகை என்ற விடயத்தில் தேவைப்படுகிறது.

அடுத்ததாக ஒன்பதாவது மாதமான ரமழானுடைய காலத்தை இந்த ஹிஜ்ரி வருடத்தின் ஆரம்பத்தில் இருந்தே திட்டமிட்டுக்கொள்ள முடியும். கடந்த ஹிஜ்ரி வருடத்தில் ரமழானை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்வதில் தன்னால் முடியாமல் போன விடயங்களை இந்த ரமழானில் நடைமுறைப்படுத்துவதற்காக இப்போதே திட்டமுடியும். கியாமுல் லைல் தொழுகை நேரத்தை அதிகரிப்பது, எத்தனை முறை முழுக் குர்ஆனையும் ஓதி முடிப்பது, எத்தனை சூறாக்களை மனனமிடுவது, எத்தனை பேரை நோன்பு துறக்கச் செய்வது, ஸதகாக்களை அதிகரிப்பது என்பதில் இருந்து இறுதிப் பத்தில் இஃதிகாப் இருப்பது, அதற்காக மஸ்ஜிதுல் ஹரமுக்குச் செல்வது எனப் பல விடயங்களை நோன்பு காலத்தைப் பொறுத்தவரையில் திட்டமிடலாம்.

அதேபோல வசதி படைத்தவர்கள் தமது ஸகாத்தைப் பற்றித் திட்டமிடுவதோடு ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கும் ஹாஜத் வைக்க முடியும். இதனுடன் சேர்ந்து இதற்காக எப்படி வருமானமீட்டுவது, தனது தொழில் முயற்சிகளில் இதற்காக என்ன அபிவிருத்திகளை மேற்கொள்வது, தனது கடன்களில் இருந்து எப்படி மீள்வது எனப் பல திட்டமிடல்கள் இணைந்திருக்கின்றன.

மனிதனுடைய இறுதி இலக்கு மீண்டும் அல்லாஹ்விடமே மீண்டு செல்வதாகும். இதற்காக தான் செய்ய வேண்டிய விடயங்கள் என்ன, தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன என்பதையெல்லாம் இந்த ஹிஜ்ரி வருடத்தின் ஆரம்பத்தில் திட்டமிட்டுக் கொள்ள முடியும். தன்னை அல்லாஹ்வை விட்டும் தூரமாக்குகின்ற விடயங்களில் இந்த வருடம் என்னென்ன விடயங்களை முற்றாக ஒழிப்பது என்பதையும் திட்டமிடலாம்.

அதேபோல உங்களையும் உங்களது குடும்பத்தாரையும் நரக நெருப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹுத்தஆலா ஏவியதற்கேற்ப தனது குடும்பத்தில் வர வேண்டிய மாற்றங்களையும் இந்த வருடத்துக்காக திட்டமிடலாம். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சமூகத்தைப் பொறுத்தவரையிலும் தேசத்தைப் பொறுத்தவரையிலுமான தனிப்பட்ட பணிகள் இருக்கின்றன. இவற்றில் எதையெல்லாம் எந்தளவு நிறைவேற்றப் போகிறேன் என்ற திட்டமிடலும் இங்கு முக்கியமானது.

எனவே திட்டமிடலுக்கும் மாற்றத்துக்கும் அடிப்படையாக அமைந்த இந்த ஹிஜ்ரி வருடத்தின் ஆரம்பத்தில் இருந்து திட்டமிட்டுச் செயற்பட்டு வெற்றிபெற்ற அல்லாஹ்வின் நல்லடியானாக மாறுவதற்கு முயற்சி செய்வோம்.

பியாஸ் முஹம்மத்...

# ஒரு வருட பாவங்களுக்கான பரிகாரம்



இஸ்லாத்தின் இறுதித்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு சென்றிருந்த சமயம் அங்கிருந்த யூதர்கள் நோன்பு நோற்றவர்களாக இருந்தார்கள். அதற்கான காரணத்தை நபி (ஸல்) அவர்கள் வினவிய போது, இறைத்தூதரான மூஸா (அலை) அவர்களையும் அவர்களது சத்திய அழைப்பிற்கு செவிசாய்த்து, ஏக இறைவன் மீது நம்பிக்கைக் கொண்ட சமூகத்தினரையும் (பனூ இஸ்ரவேலர்) அழித்தொழிக்கப் புறப்பட்ட ஃபிர்அவ்னிடமிருந்து அவர்களை வல்ல இறைவன் பாதுகாத்த நாளே முஹர்ரம் மாதத்தின் 10ஆம் நாளாகும். அதற்கு நன்றி செலுத்தும் முகமாக மூஸா (அலை) அவர்கள் நோன்பு நோற்றார்கள். அதற்கு ஏற்ப நாமும் நோன்பு நோற்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், மூஸா (அலை) அவர்களுக்கு யூதர்களான உங்களை விட நான் அதிகம் நெருக்கமானவன் எனக் கூறி, அவ்வருடம் முஹர்ரம் 10 ஆம் நாளன்று தாமும் நோன்பு நோற்றதோடு தம் தோழர்களையும் நோன்பு நோற்கச் செய்தார்கள். அத்தோடு 'எதிர்வரும் வருடம் (உயிருடன்) இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்' என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

அதேநேரம் மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், ரமழான் நோன்பிற்குப் பிறகு சிறந்த நோன்பு அல்லாஹ்வுடைய மாதமாகிய முஹர்ரத்தின் நோன்பாகும்' என்றும் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

இந்நபிமொழிகள் இம்மாதம் 9 ஆம் (தாசூஆ) 10 ஆம் (ஆ{ரா) தினங்களில் நோற்கப்படும் நோன்புகள் ரமழான் மாத நோன்புகளுக்கு அடுத்தபடியான சிறந்த நோன்புகளாக விளங்குவதை எடுத்தியம்புகின்றன.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்களிடம் ஆஷூரா நோன்பு குறித்து வினவப்பட்ட போது, 'சென்ற வருடத்தின் பாவங்களுக்கு (அது) பரிகாரமாக அமையும்' என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்; முஸ்லிம்)

இதன்படி முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாள் நோற்கப்படும் நோன்பு கடந்த ஒரு வருட காலப் பாவங்களுக்குப் பரிகாரமாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது.

ஆகவே நபி (ஸல்) அவர்களின் போதனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஆஷூரா நோன்பு தாங்கியுள்ள சிறப்புக்களை அடைந்து கொள்வதில் அக்கரை கொள்வோம்.

அஷ்ஷெய்க்
ஏ.எச்.எம்.மின்ஹாஜ் முப்தி (காஷிபி)...

# நன்மையை ஏவி தீமையைத் தடுப்போம்!

'மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயத்தர்களில் எல்லாம் மிக்க மேலான சமுதாயமாக நீங்கள் இருக்கின்றீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள். தீமையை விட்டும் அவர்களை தடுக்கிறீர்கள்.' (ஆல இம்ரான்:110) என்று அல்லாஹ் அல்குர்ஆனில் கூறியுள்ளான்.

இதன்படி இஸ்லாத்தில் மிக முக்கியமான காரியமாக நன்மையை ஏவி தீமையை தடுத்தல் விளங்குகிறது. நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் உன்னத பணியைக் கற்றுத் தந்துள்ள இஸ்லாம், அப்பணியை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்றும் அதன் படித்தரங்கள் யாவை என்பதையும் சொல்லித் தரவும் தவறவில்லை.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் ஒருவர் ஏதாவதொரு வெறுக்கத்தக்க செயலைக் கண்டால் அதனைத் தனது கை மூலம் மாற்ற முயற்சிக்கட்டும். அதற்கவர் சக்தி பெறாவிட்டால் தனது நாவைக் கொண்டு மாற்ற முயற்சிக்கட்டும். அதற்குமவர் சக்தி பெறாவிட்டால் தனது உள்ளத்தால் அதை வெறுக்கட்டும். அதுவே ஈமானின் மிகத் தாழ்ந்த நிலையாகும்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

இந்நபிமொழியானது நன்மையை ஏவி தீமையை தடுப்பதன் படித்தரங்களை சுருக்கமாக எடுத்தியம்பியுள்ளது. என்றாலும் அறிவு இப்பணியில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அத்தோடு இப்பணியில் ஈடுபடுகின்றவர் இரக்க குணமுள்ளவராகவும் மென்மையான போக்கு கொண்டவராகவும், நீதியானவராகவும் பொறுமையுள்ளவராகவும், ஹிக்மத் எனப்படும் விவேகமான சிந்தனை கொண்டவராகவும் இருப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இந்த நிலையில் தான் அல்லாஹ் '(நபியே) நீர் விவேகத்தைக் கொண்டு மற்றும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டு உமதிரட்சகனின் வழியின் பக்கம் அழைப்பீராக' என்று குறிப்பிட்டிருக்கின்றான். (அந்நஹ்ல்:125)

அதேநேரம் தான் ஒரு நல்ல அமலை செய்யாமல் மற்றவர்களுக்கு அதனைப் பற்றி சொல்வதும் பாவமான காரியமாகவே விளங்குகிறது. இது தொடர்பில் அல்லாஹ், 'விசுவாசம் கொண்டோரே! நீங்கள் செய்யாததை ஏன் கூறுகின்றீர்கள். நீங்கள் செய்யாததை கூறுவது அல்லாஹ்விடத்தில் வெறுப்பால் மிக பெரிதாகி விட்டது. (அல் குர்ஆன்: 61:2,3)

இதேவேளை தாம் செய்யாத அமல்களை மற்றயவர்களுக்கு சொல்வதன் விபரீதம் குறித்தும் நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள்.

'கியாமத் நாளில் ஒரு மனிதன் கொண்டு வரப்பட்டு நரகில் போடப்படுவான். அவனது வயிற்றிலுள்ள குடல்கள் வெளியாகிவிடும். கழுதை திருகையை சுற்றுவது போன்று (வேதனையால்) அவன் தன் குடலைச் சுற்றுவான். நரகவாதிகள் அவனிடம் ஒன்று கூடி 'மனிதனே! உனக்கு என்ன ஆனது? நீ நன்மையை ஏவி தீமையை தடுத்துக் கொண்டிருக்கவில்லையா' எனக் கேட்பார்கள். அதற்கவன் 'ஆம்' நான் நன்மையை செய்யாமல் அதை ஏவக்கூடியவனாக இருந்தேன். தீமையை செய்து கொண்டு அதைத் தடுப்பவனாக இருந்தேன்' என விடையளித்தான். (ஆதாரம்: புஹாரி முஸ்லிம்)

எனவே இந்த உயரிய பணியை அல்லாஹ்வுக்காக அவனதும் அவனது தூதர் (ஸல்) அவர்களதும் கட்டளைகள், வழிகாட்டல்கள் படி மேற்கொள்வோம்.

அம்மார்...

# இஸ்லாம் வலியுறுத்தும் சகோதரத்துவம்



இஸ்லாம் ஏனைய மதங்களைப் போலல்லாமல் சகோதரத்துவத்தை அதிகமாக வலியுறுத்துகின்றது. அதற்கென இருக்கின்ற வழிகாட்டல்களை தெளிவாக விளக்குகின்றது. சகோதரத்துவத்தை இல்லாமல் ஆக்குகின்ற அல்லது அதற்கு களங்கம் ஏற்படுத்துகின்ற அனைத்து வழிகளையும் அது முற்றாக தடை செய்திருப்பதோடு அதை மீறி செயல்படுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் உண்டு எனவும் எச்சரிக்கையும் செய்கின்றது. இதன் மூலம் பலம் வாய்ந்த ஒரு ஈமானிய சமுதாயத்தையும் ஒற்றுமையையும் வளர்ப்பதுவுமே இதன் குறிக்கோளாகும். இது இஸ்லாத்தின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும்.

இஸ்லாமிய வரலாற்றைப் படிக்கின்ற போது இதன் உண்மையை அறிந்துக் கொள்ளலாம். நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் அருளப்படுவதற்கு முன்னிருந்த அக்கால அரேபியர்கள் எந்த முறையில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்? புனிதமான அந்நகரில் அவர்களுக்கு மத்தியில் கோத்திர வெறி தலைவிரித்தாடியது. கோத்திரங்களுக்கிடையில் வருடக்கணக்காக சண்டை சச்சரவுகள் நீடித்தன. அடிமை, எஜமான் என்ற பாகுபாடு அதிகமாக காணப்பட்டன. எஜமானர்களோ தங்களது அடிமைகளை தங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு நடத்தினார்கள். நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம், மொழிக்கு மொழி, கோத்திரத்திற்கு கோத்திரம், இனத்திற்கு இனம், நிறத்திற்கு நிறம் என்றெல்லாம் பலவிதமான பாகுபாடுகளுடன் வாழ்ந்து வந்தார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் அருளப்பட்ட பிறகு இஸ்லாம் இவை அனைத்திற்குமே முற்றுப் புள்ளி வைத்தது. அல் குர்ஆனின் வருகையோடு அவர்களில் ஈமானிய ஒளி பிரகாசித்தது. நபி (ஸல்) அவர்கள் அச்சமுதாய மக்களுக்கு சிறந்த அறிவைக்கொண்டு நேர்வழியை அடைவதற்குரிய வழியைக் காட்டினார்கள். அதனால் அவர்களது உள்ளங்கள் அமைதி பெற்றன. இறைவிசுவாசம் என்ற ஒரே கோட்பாட்டின் கீழ் அவர்கள் ஒன்றிணைந்தார்கள். வேற்றுமைகள் அனைத்தில் இருந்தும் அவர்கள் நீங்கிக்கொண்டார்கள். கோத்திர வெறி, உலக ஆசை போன்ற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பகரமாக ஈமானிய சகோதரத்துவத்தில் அவர்கள் உருவானார்கள். அதே கோட்பாட்டின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டார்கள்.

இஸ்லாம் சகோதரத்துவத்தை இறை விசுவாசத்துடன் இணைத்துக் கூறுகின்றது. இரண்டு சகோதரர்களுக்கு மத்தியில் பிணக்கு ஏற்பட்டால் அதனைத் தீர்த்து வைக்கவும் கட்டளையிடுகின்றது (அல் குர்ஆன் 49:10).

இவ்வசனத்தின் ஊடாக இறைவிசுவாசிகள் அனைவருமே சகோதரர்கள் என்பது தெளிவாகிறது. அத்தோடு சகோதரத்துவத்தைத் தூண்டக்கூடியதாகவும், சகோதரத்திற்கு களங்கம் ஏற்படுகின்ற விடயங்கள் நடந்துவிட்டாலும் அதைத் தீர்த்து வைக்கவும் ஏவுவதன் மூலம் சகோதரத்துவம் மென்மேலும் உருவாகும் என்பதையும் இவ்வசனம் எடுத்தியம்புகிறது.

நபித்தோழர்களது வாழ்க்கையும் இவ்வாறே அமைந்திருந்தது. நபி (ஸல்) அவர்களும் தனது தோழர்களுக்கு மத்தியில் பிரச்சினைகள் வருகின்ற போது அவ்வப்போது அவற்றை தீர்த்துவைத்து ஒற்றுமையாக்கி இருக்கின்றார்கள். இதனால் தான் மூன்று நாட்களுக்கு மேல் ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனுடன் பேசாமல் இருப்பதைக் கூட இஸ்லாம் தடை செய்திருக்கின்றது.

அதனால் தான் நபி (ஸல்) அவர்கள், 'ஒரு முஃமின் தான் விரும்புவதை இன்னொரு முஃமினுக்கு விரும்பாத வரை அவன் உண்மையான விசுவாசியாக மாட்டான்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

அதேநேரம் 'அல்லாஹ்வுக்காகவே நட்புக்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காகவே ஒருவனை வெறுத்து நடங்கள்' என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: அஹ்மத்)

இந்நபிமொழியானது, இருவர் ஒன்றாகப் பழகும் சந்தர்ப்பத்தில் ஒருவருக்கொருவர்அல்லாஹ்வின்கட்டளைகளை ஏற்று நடக்கக்கூடியவாறு நல்லுபதேசங்களைச் செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு நட்பாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் ஒருவர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்கின்றபோது வணக்க வழிபாடுகளைப் புறக்கணிக்கின்ற போது மற்றவர் அச்சகோதரனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவன் அவற்றை அலட்சியப்படுத்துகின்றபோது, நல்லுபதேசங்களைக் கேட்காதபோது, அவற்றை அவர் ஏற்று செயல்படுத்தும் வரை அவரை அல்லாஹ்வுக்காக வெறுத்து நடப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டுவதாக சில இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்"

(அல்குர்ஆன் 49:13)

அதேநேரம், 'அரபிக்கும் அஜமிக்கும், அஜமிக்கும் அரபிக்கும் மத்தியிலும் கருப்பனுக்கும் வெள்ளையனுக்கும் வெள்ளையனுக்கும் கருப்பனுக்கும் மத்தியிலும் வித்தியாசங்கள் கிடையாது. அனைவருமே ஆதமில் இருந்து வந்தவர்கள்; ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர்' என்றும் கூட நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: அஹ்மத்)

எனவே இஸ்லாம் சகோதரத்துவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் அளித்து வலியுறுத்தி போதித்துள்ளது என்பது தெளிவாகிறது. அதனால் இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு ஏற்ப சகோதரத்துவத்தை பேணிக்கொள்வோம்.

அபூ முஷ்ரா...

# ரூ.100 கோடி பெறுமதியான போதை பொருட்களுடன் 06 சந்தேக நபர்கள் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நூறு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களை கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு செயலக அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஆறு நபர்களை கைதுசெய்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி போதைப்பொருளில் ஒரு பகுதியுடன் முதலில் மூன்று சந்தேகநகர் கட்டுநாயக்க விமான நிலைய பகுதியிலிருந்து கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய சந்தேகநபர்களை கொழும்பு புறக்கோட்டை மற்றும் வெள்ளவத்தைப் பகுதிகளில் வைத்து வைதுசெய்துள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் ஹொங்கொங்கிலிருந்து துபாய் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த விமான பொருட்கள் ஒரு தொகை திறக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்து ஒரு தொகை கஞ்சாவையும் போதைப் பொருள்ஒழிப்புஅதிகாரிகள்கைப்பற்றியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பொருட்களை கொண்டுசெல்வதற்காக விமான நிலையத்திற்கு வருகைதந்திருந்த மூன்று சந்கே நபர்களை கைதுசெயது அவர்களிடம் மேற்கொ்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் கொழும்பு புறக்கோட்ட பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் அம்பிட்டமின் ரக போதைப்பொருள் ஒரு தொகை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி போதைப்பொருள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் நீதிமன்றததில் ஆஜர்செய்யப்பட்டதன் பின்னர் தடுத்து வைத்து விசாரணை செய்யும் உத்தரவின் பேரில் உத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் பொலிஸ் போதைப்பொருள் எதிர்ப்பு பிரிவுநினர் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் புதன்கிழமை (26) விநாயகர் ஊர்வலமும், வசந்த மண்டபப் பூஜையும் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படமாகும். உடப்பு குறூப் நிருபர்

## புதிய அரச மருத்துவ அதிகாரிகள்...

இந்நாட்டின் சுகாதார துறையில் மேற்கொள்ளப்படவேண்டிய உடனடி மறுசீரமைப்புக்கள் குறித்து இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அது தொடர்பாக ஆலோசனைகளை முன்வைக்குமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் கேட்டுக்கொண்டார்.

குறுகிய கால மற்றும் இடைக்கால திட்டங்களின் ஊடாக புதிய மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அத்திட்டங்களை வகுக்கும் போது, ஸ்கெண்டிநேவியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முன்னேற்றகரமான சுகாதார கட்டமைப்பு தொடர்பில் ஆராய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன, செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே, உப தலைவர்களான வைத்தியர் சந்திக எபிடகடுவ, வைத்தியர் ஹேமந்த ராஜபக்ஷ, வைத்தியர் போதிக்க சமரசேகர, வைத்தியர் எஸ். மதிவானன் உள்ளிட்ட புதிய அதிகாரிகள் குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## 13 ஐ, நடைமுறைப்...

03ஆம் பக்கத் தொடர்

அதிகார வழங்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் முடிவெடுப்பதாக தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மாத்திரிபால சிறிசேன, பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பில் நாம் பேசிக்கொண்டிருக்கின்ற நிலையில் ஏற்கனவே அது அரசியலமைப்பில் சட்டமாக்கப்பட்டுள்ளது.

13 ஆவது திருத்தத்தில் என்னென்ன விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட வேண்டுமென தெளிவானதும் இறுதியான விடயங்களை கட்சித் தலைவர்களுக்கு வழங்கினால் அது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க முடியும். இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டதாக அங்கஜன் மேலும் தெரிவித்தார்.

## தமிழர் அரசியல் தீர்வு...

எதிர்கட்சி அரசியல்வாதிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதுடன் இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் இவ்வாறு தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

சர்வகட்சி மாநாட்டின் பின்னர் தமிழ்க் கட்சிகள் மத்தியில் எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பில் ஒன்றிணைந்த தீர்மானம் இருக்கவில்லை. அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர்களாக சுமந்திரன் மற்றும் விக்னேஸ்வரன் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் இந்த கருத்து முரண்பாடுகள் காணப்பட்டன.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் போதுமானதா? அதற்கு மேலும் அதிகாரங்கள் அவசியமா? தேர்தல் நடத்தப்பட வேண்டுமா? போன்றவற்றில் கருத்து வேறுபாடுகள் நிலவின. அந்தப் பிரச்சினையை அவர்கள் தான் தீர்த்துக் கொள்ள வேண்டும். நாம் சகோதரத்துவத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் ஒன்றிணைப்பு அவசியமாகும்.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பில் வடக்கைப் போன்றே தெற்கிலும் பெருமளவு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்த வகையில் அடுத்த மாதமும் இவ்வாறான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

அந்த சமயத்தில் இதனைவிட தெளிவான மற்றும் ஒன்றிணைந்த நிலைப்பாட்டுடன் செயற்பட முடியும் என்பதே எனது நிலைப்பாடு. நான் வட மாகாண ஆளுநராக பதவி வகித்த போதும் பொலிஸ் அதிகாரம் தேவையில்லை என தெரிவித்திருந்தேன்.

தற்போது உள்ள பொலிஸ் துறையில் தமிழர்களையும் இணைத்துக் கொண்டால் போதுமானது என கூறியிருந்தேன்.

அதேவேளை 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அனைத்து தரப்புடனும் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வொன்றை பெற்றுக் கொள்வதே தனது நிலைப்பாடு என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாகாண சபைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதானல் அதிலுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு முதலில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் (26) நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பில் அழைப்பு விடுக்கப்பட்ட சர்வகட்சி மாநாடு ஜனாதிபதியின் வழமையான அரசியல் செயற்பாட்டின் ஒரு அங்கமேயன்றி வேறில்லை. இது மிகத்தெளிவாகும். இதில், ஜனாதிபதியின் வகிபாகம் அர்ப்பணிப்பு மற்றும் நேர்மையானதாக இருக்க வேண்டும்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினைகள் திடீரெனத் தோன்றியவையல்ல. பல தசாப்தங்களாக பல்வேறு அரசாங்கங்கள் இவ்வினப்பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும், இப்பிரச்சினைக்கு இதுவரை எவரும் நடைமுறை ரீதியான தீர்வை முன்வைக்க முடியவில்லை. இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் மிக முக்கியமான காரணி நல்லெண்ணத்துடன் செயற்படுவதே ஆகும்.

ஜனாதிபதியின் இந்த முயற்சி, குறுகிய கால அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்கான வேலைத் திட்டமே! உண்மையான விருப்பத்துடன் முன்வைக்கப்படும் நேர்மையான நடைமுறைப்படுத்தல் அல்ல என்பதை நாம் அவதானிக்கலாம்.

இதற்கு முன்னரும் தற்போதைய ஜனாதிபதிக்கு இப்பிரச்சினை தொடர்பில் தலையிட்டு தீர்வுகளை வழங்குவதற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்தமை இரகசியமல்ல. அத்துடன் ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருடமாகியும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகளை வழங்குவதற்கான நியாயமான அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய முயற்சிகளில் அவர் ஈடுபடவில்லை. கடந்த சுதந்திர தினத்திற்கு முன்னர் வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண தன்னிடம் தீர்வு இருப்பதாக நாட்டுக்கு உணர்த்திய ஜனாதிபதி, குறுகிய கால அரசியல் இலாபங்களை பெற்றுக்கொள்ள இப்பொழுது முயற்சிக்கின்றமை மிகவும் தெளிவாகிறது. இவ்வாறான சூழலில் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு வழங்க முடியுமா என்பது சந்தேகமே.

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு பதிலளிக்குமாறு எதிர்க்கட்சியிடம் ஜனாதிபதி கேட்கின்றார். ஆனால் நடக்க வேண்டியது என்னவெனில் அரசாங்கம் ஒரு பிரேரணையை சமர்ப்பித்து அதற்கான பதிலை பெற்றுக்கொள்வதே!. அவ்வாறான பிரேரணை இல்லாத நிலையில் அதற்கு எவ்வாறு பதிலளிப்பது? இப்பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதிக்கு உண்மையான விருப்பம் இருந்தால்,அவர் செய்ய வேண்டியது அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தரப்பினருடனும் சேர்ந்து பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டும்.

## ONLINE ஊடாக மக்களுக்கு...

வர்த்தமானியில் வெளியிடப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

36 வருடங்களின் பின்னர் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர், இதன்மூலம் வீதிகள் எந்தெந்த நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்பது அடையாளம் காணப்படும் என்றும் குறிப்பிட்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஒன்லைன் தொழினுட்பத்தின் (ONLINE) ஊடாக பொதுமக்களுக்கு சேவைகளை உத்தியோகபூர்வமாக வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், தற்போது 69 உள்ளூராட்சி மன்றங்கள் தமது சேவைகளை ஒன்லைன் தொழினுட்பத்தின் (ONLINE) ஊடாக செயற்படுத்துவதாக இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (27) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே, இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர,

“இன்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும், அவை பொது மக்களுக்கு பாரிய சேவைகளை ஆற்றுகின்றன. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் இந்நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளையும் மேம்படுத்தும் வகையில் தற்போது நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும், அதன்படி பொது மக்களுக்கு ஒன்லைன் (ONLINE) தொழினுட்பம் ஊடாக சேவைகளை வழங்க அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தற்போது 69 உள்ளூராட்சி மன்றங்களில் வெற்றிகரமாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வருட இறுதியில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஒன்லைன் தொழினுட்பம் ஊடாக பொது மக்களுக்கு சேவைகளை வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், இதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களில் இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகள் தவிர்க்கப்படும் என்றும் மக்களுக்கு சேவைகளை வழங்குவதில் ஏற்படும் கால தாமதம் நிவர்த்திசெய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், வீதி மின் விளக்குகள் உட்பட உள்ளூராட்சி மன்றங்களின் மின்சாரத் தேவைகளை நிவர்த்தி செய்ய சூரிய சக்தியைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளதாகவும், இதன்மூலம் உள்ளூராட்சி மன்றங்கள் மின்சாரத் தேவைக்கு செலவிடும் பாரியளவு நிதியை சேமிக்க முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## உண்மையைக் கண்டறியும்...

நிறைவேற்றுவதற்காக சர்வதேச மட்டத்தில் பல விரிவுரைகளை நடத்த திட்டமிட்டுள்ளோம். இடைக்கால செயலகம் அமைக்க ஏற்கனவே அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இதனூடாக ஆணைக்குழுவின் பணிகளை விரைவில் தொடங்குவதற்கான அடித்தளத்தைத் தயார்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்ததாவது: மூன்று தசாப்த கால யுத்தத்தால் இன, மத வேறுபாடின்றி அனைவரும் பாரிய சேதங்களை சந்திக்க நேரிட்டது. இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்பட வேண்டிய தேவை நாட்டுக்குள்ளும், சர்வதேச ரீதியிலும் எழுந்துள்ளது. இதற்காக ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்கள் முன்வைத்த யோசனைகள் அமுல்படுத்தப்படவில்லை.

"தென்னாபிரிக்கா போன்ற நாடுகளின் பொறிமுறைகளை ஆராய்ந்து இலங்கைக்குப் பொருத்தமான பொறிமுறையை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் நாடு மீண்டும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். எனவே, சமூகத்தை தெளிவுபடுத்தி இதனைச் செயற்படுத்துவதற்கான ஆதரவைப் பெற வேண்டும்" என்றும் தெரிவித்தார்.சுதந்திரம் பெற்று 20 வருடங்கள் நிறைவடையும் போது நல்லிணக்கத்தினூடாக சிங்கப்பூர் அபிவிருத்தியடைந்த நாடாக மாறியுள்ளது.

நாடு, அபிவிருத்தி இலக்குகளை அடைய வேண்டுமாயின் நல்லிணக்கம் மிக அவசியமென, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அசங்க குணவன்ச தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவை நிறுவுவதன் மூலம் துரதிர்ஷ்டவசமான யுகம் மீண்டும் ஏற்படாத சூழலை உருவாக்க முடியும் என சுட்டிக்காட்டிய அசங்க குணவன்ச, உள்நாட்டில் வெற்றிகரமான மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பொறிமுறையை உருவாக்கத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காகவே இடைக்கால செயலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய வண.தம்பர அமில தேரர், கடந்த தேர்தலில் மதவாதமும், இனவாதமும் பாரியளவில் தலைதூக்கியதால், அந்த அனுபவத்தை மக்கள் மறக்க முன் இச்செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

## தாமரை கோபுரத்தில்...

இலங்கையில் முதன்முறையாக Bungee Jumping ஐ, ஆரம்பிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் உலகின் மிக உயரமான Bungee Jumping ஆக இது மாறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், "ஸ்கை' வளைவில் சில மேம்படுத்தல்கள் செய்யப்பட வேண்டுமென நிர்வாகம் கண்டறிந்தது.இதனாலேயே, தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஐந்து முஸ்லிம் அமைப்புகளின் ...

CDJ என்ற சிலோன் தவ்ஹீத் ஜமாஅத், UDJஎன்ற ஐக்கிய தவ்ஹீத் ஜமாஅத், ACTJ என்ற அகில இலங்கை தவ்ஹீத் ஜமாஅத், SLTJ என்ற ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத் மற்றும் JASM என்ற ஜமாஅத் அன்சார் சுன்னதில் முஹம்மதிய்யா ஆகிய ஐந்து அமைப்புகளின் தடைகளே நீக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மருந்து தட்டுப்பாடு இரண்டு ...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்வனவு செய்யப்படும் மருந்துகள் நாட்டை வந்தடைய சுமார் ஆறு மாத காலங்கள் செல்கின்றன. அதனால்தான், மருந்துகளை அவசரமாக விலைக்கு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு இரண்டு மாதங்களில் நிவர்த்தி செய்யப்படும்.

புற்றுநோய்க்காக உபயோகப்படுத்தப்படும் 65 மருந்து வகைகள் ஏற்கனவே ஓடர் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டுபரிந்துரை செய்யப்பட்ட மருந்துகளை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது 350 வகை மருந்துகள் தேசிய உற்பத்தியாக சுகாதார அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகிறது. இவ்வருட இறுதியில் மேலும் நூறு மருந்துகளை தேசிய உற்பத்தி மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கனேடிய அமைச்சரவையில் ...

சிரேஸ்ட உறுப்பினர்களில் ஒருவராக கெரி ஆனந்தசங்கரி கடமையாற்றி வருகிறார். பழங்குடியின உறவுகளுக்கான அமைச்சராக கெரி ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்காப்ரோ தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக கடமையாற்றி வரும் கெரி ஆனந்தசங்கரி, கடந்த 2015 ம் ஆண்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு வருகிறார்.

மனித உரிமைகள் சட்டத்தரணியான ஆனந்தசங்கரி, சமூக ஆர்வலராகவும் தமிழர் விவகாரங்கள் மற்றும் மனித உரிமை விவகாரங்களுக்காக குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் ஜனாதிபதி...

நாட்டுக்கு வரும் பிரான்ஸ் ஜனாதிபதி நாளையே

நாடு திரும்புகிறார்.ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவை

சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இரு தரப்பு விடயங்களை ஆராயவுள்ளார்.

பெப்புவா நியூகினியா மற்றும் பிற நாடுகளுக்கு விஜயம் செய்திருந்த பிரான்ஸ் ஜனாதிபதி அவ்விஜயத்தை முடித்து பிரான்ஸ் திரும்புவதற்கு முன்பதாக இலங்கைக்கும் வருகிறார். இன்று இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் அவர், நாளைய தினம் மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையமூடாக சொந்த நாட்டுக்குத் திரும்பவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## சர்வகட்சி பேச்சுக்கள்...

செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி எங்களை இரண்டில் ஒன்றை தெரிவு செய்யச் சொல்கிறார். ஒன்று மாகாண சபைத் தேர்தலை நடத்த இணங்க வேண்டும் அல்லது 13 ஆவது திருத்தத்திலுள்ள அதிகாரங்கள் குறித்து பேச வேண்டுமென கூறுகிறார். இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியாதென்பதுதான், அவரின் நிலைப்பாடாக இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தலை நடத்தமுடியுமானால், அதன் அதிகாரங்கள் குறித்து ஏன் கலந்துரையாட முடியாதென எங்களுக்கு புரியவில்லை. எனவே, இந்த மாநாட்டை நிறுத்துவதற்கு நாங்கள் முடிவு செய்தோம். மாநாட்டின் ஊடாக எந்த பிரதிபலனும் கிடைக்கவில்லை. நாங்கள் சந்தேகத்துடன் வந்தது போன்றே அங்கு இடம்பெற்றது.

தேர்தல் குறித்து கதைக்கும் போது ஜனாதிபதி அச்சத்துடனேயே இருப்பது எங்களுக்கு தெரியவந்தது.இக் கலந்துரையாடல் முற்றிலும் அதிருப்தியாகவே அமைந்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

## பாப்பரசரின் பிரதிநிதி நேற்று...

வழங்கி வைத்தார்.

தொடர்ந்து முல்லை மறைக்கோட்ட இளையோர் ஒன்றியத்தின் மோட்டார் வாகன பேரணியில், அவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது.

வட்டுவாகல் பாலம் தொடக்கம் முல்லைப்பட்டினம் சுற்றுவளைவு வரை அவருக்கு விசேட வரவேற்பளிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து சுனாமி நினைவாலய தரிசிப்பிலும் புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்ற நற்கருணை ஆசீர்வாதத்திலும் அவர் ஈடுபட்டிருந்தார்.

பாப்பரசர் பிரான்ஸிஸின் பிரதிநிதி வணக்கத்திற்குரிய கலாநிதி பிறாயன் உடக்வே நேற்று முன்வைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேலை தேடி வெளிநாடு செல்லும் ...

வேண்டுமென் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிள்ளைகள் இல்லாமல் வேலைக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் பெண்கள், தங்களுக்கு பிள்ளைகள் இல்லை என்பதை சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலையக மக்களுக்கு...

இணைந்தே இந்த கூட்டு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படுமெனவும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

" மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் சுமார் 02 இலட்சத்து 35 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் தேவைப்படுகின்றன. இந்திய அரசால் 14,000 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை அரசால் வீடமைப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டாலும் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு காலம் எடுக்கலாம். எனவேதான், பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமையை பெற்றுக்கொடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் இது பற்றி வெளிப்படையாக அண்மையில் அறிவித்தார். எனவே, எனது அமைச்சு உட்பட நான்கு அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்துரையாடி, இவ்விவகாரம் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைப்பர் . அது கூட்டு அமைச்சரவைப் பத்திரமாக அமைச்சரவையில் முன்வைக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச ஆட்சிகாலத்திலேயே பெருந்தோட்ட நிறுவனங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டன. இது தொடர்பான குத்தகை ஒப்பந்தம் பலவீனமானது. லயன் வீடுகள் கூட தோட்டக் கம்பனிகளுக்குரிய சொத்துகளாக வழங்கப்பட்டுள்ளன.

கெஞ்சிக் கேட்டால் அது பிச்சை, துணிந்து கேட்டால் அது உரிமை. எனவே, காணி உரிமையை துணிந்து கேட்டுள்ளோம். அது நிச்சயம் கிடைக்குமென்றார்.

## மரங்களுக்கு மண்ணெண்ணெய்...

இவர்கள் இந்த ஈனச் செயலில் ஈடுபட்டுள்ளனர். சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகிய இரண்டு நபர்களும் பிரதேச மக்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்வதற்குரிய விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## காட்டு யானைகளுக்கு ...

விலங்குகள் சாலைக்கு வருவதை வழக்கமாக்குகிறது . இதனால், அவ்வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறாக யானைகள் உணவு பெறும் சம்பவங்கள் கடந்த காலங்களில் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

எனவே, காட்டுப்பகுதிகளை கடந்து செல்லும் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது, வன விலங்குகளுக்கு உணவளிப்பதை தவிர்க்குமாறு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## இறக்குமதி முட்டைகள்...

முட்டைகளை சூப்பர் மார்க்கட்டுகளில் 40 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முடியுமெனவும் அவர் கூறினார்.இதனிடையே, உள்நாட்டு முட்டை விலையும் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெள்ளை மற்றும் சிவப்பு முட்டைகளின் சில்லறை விலை 55 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# நடைமுறை வாழ்வில் பொருளாதார மக்கள் மன்றத்தின் செயற்பாடுகளும் அபிவிருத்தியும்



கிளிநொச்சி காவேரிக் கலாமன்றத்தின் இயக்குனர் வண பிதா யோசுவா அடிகளாரின் சிந்தனையிலிருந்து மக்களை பொருளதார ரீதியாக வலுவூட்டுவதற்காக கருக்கொண்டு பிறந்த அமைப்புத்தான் மக்கள் பொருளாதார மன்றமாகும். இந்த மன்றத்தின் மூலம் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் பின்தங்கிய வறிய மக்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுகின்ற திட்டத்தின் கீழ் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த வகையில் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுதல், இயற்கையோடு ஒன்றிணைந்த வாழ்வு முறை, உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தல், இயற்கை விவசாய வளர்ச்சி, கல்வி மற்றும் தொழில் முயற்சி, நாட்டுக்கோழி வளர்ப்பு, பண்பாடு கலாசார ஒருமைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் மக்கள் பொருளாதார மன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் அ. இன்பராசா தினகரனுக்கு வழங்கிய செவ்வி.

**நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடியானகால கட்டத்தில் வறிய மக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக உங்கள் அமைப்பு புதிய வளர்ச்சிக்கான உத்வேகத்தை வழங்கிக் கொண்டு இருக்கின்றன. அது தொடர்பில்,...**

குறிப்பாக குடும்பம் சார்ந்த பொருளாதாரத்தைக் கையாள்வது பெண்கள் ஆகும். அவர்களுடன் நேரடியாக பங்கெடுத்து பொருளாதார மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளையே மக்கள் பொருளாதார மன்றம் மேற்கொண்டு வருகின்றது. அதாவது பொருட்களின் விலையேற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறது. இது தொடர்பில் ஆண்கள் கவனத்தில் கொள்வது குறைவு.மக்கள் பொருளாதார மன்றத்தின் நோக்கம் என்னவென்றால் குடும்பத் தலைவிகளுக்கிடையே கலந்துரையாடி பொருளாதார சுமையைச் சீர்படுத்துகின்ற பணிகளை மேற்கொள்வதாகும். கிடைக்கின்ற வருமானத்தை வைத்துக் கொண்டு எவ்வாறு முகாமை செய்ய வேண்டும் என சொல்லப்படுகிறது.

இரவு 7.00 மணிக்குப் பின் தண்ணீர் மோட்டரைப் பயன்படுத்த வேண்டும் அல்லது இரவு எல்லோரும் தூங்கிய பின் தண்ணீர் மோட்டரைப் பயன்படுத்த வேண்டும். எந்தவொரு பொருளாக இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து ஒரே ஒரு பொருளுக்கு கேள்வியை உட்படுத்துகின்ற போது அதற்கு கிராக்கி அதிகமாகும். சோப் ஒன்றை எல்லோரும் சேர்ந்து வாங்கினால் அதற்கான கேள்வி அதிகரிக்கும். அதை விட விலை குறைந்த நல்ல சோப் சந்தையில் இருக்கும். ஆனால் அந்தச் சோப்பை நுகர்வோர் வாங்குவதில்லை. வாங்குவது அதிக விலை கூடிய சோப்பையே வாங்குவார்கள்.

இன்று வீட்டில் பயன்படுத்தப்படும் 'விம் கட்டி' விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இப்போது அதன் வடிவமைப்பு மாற்றப்பட்டுள்ளது. 40 ரூபாவுக்கு விற்பனை



செய்யப்பட்ட பெரிய விம்கட்டி 150 ரூபாவுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிழமை விம்கட்டி வாங்குவோமாயின் நான்கு கிழமைக்கும் விம்கட்டி கட்டாயம் வாங்கித்தான் ஆக வேண்டும். கிட்டத்தட்ட விம்கட்டிக்காக மாதாந்தம் 600 ரூபாய் காசு தனியாகச் செலவு செய்ய வேண்டி வரும். முன்னர் நாங்கள் சாம்பல் போட்டுத்தான் பாத்திரங்களை கழுவினோம். ஆனால் அதை யாரும் இப்பொழுது செய்வதில்லை. காசு கொடுத்து வாங்கி பாத்திரம் கழுவுகின்றோம்.

சாதாரணமாக விம்கட்டி போட்டு பாத்திரங்களைக் கழுவினால் ஏழு தடவை தண்ணீரில் கழுவ வேண்டும். அவ்வாறு கழிவினால் தான் அதிலுள்ள இரசாயனங்கள் இல்லாமற் போகும். ஆனால் எங்களது மக்கள் அவ்வாறு இல்லை. சும்மா இரண்டு தடவை கழுவினால் சாப்பிடும் போது அதிலுள்ள இரசாயனங்கள் உடலில் சென்று நோயை ஏற்படுத்தும்.

**இம்மன்றத்தின் நோக்கம் குறித்துக் கூறுவீர்களா? நீங்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றீர்கள்?**

இந்த மக்கள் பொருளாதார மன்றத்தின் நோக்கம் என்னவென்றால் பெண்களை வலுப்படுத்தி அவர்களை தற்கால பொருளாதார நடைமுறைக்கு ஏற்ப கொண்டு வருவது ஆகும்.

இந்த செயற்றிட்டத்தின் மூலம் தேவையற்ற செலவீனங்கள் குறைக்கப்பட்டுள்ளன. 10 வருடங்களுக்கு முன் எத்தகைய வேலைகளைச் செய்தார்களோ அத்தகைய வேலைகளைச் செய்வதற்கான வழிகாட்டல்களை செய்திருக்கின்றோம். வீட்டுத் தோட்டச் செய்கையை அதிகரித்துள்ளோம். வீட்டுத் தோட்டத்தில் வெண்டி, பூசணி, கத்தரி, கீரை வகைகள், வல்லாரை, பயிற்றங்காய் பல்வேறு பட்ட மரக்கறிச் செய்கை மேற்கொள்ள ஊக்குவித்து வருகின்றோம்.



அதே போன்று யாழ்ப்பாணத்தில் கம்பு பயிர்ச் செய்கை மேற்கொள்வது அருகிவிட்டது. அவற்றை நாங்கள் இவ்வருடம் தை மாதம் அறிமுகம் செய்துள்ளோம். அது பற்றிய விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம். தற்போது யாழ்ப்பாணத்தில் மக்கள் ஆர்வத்தோடு அதில் ஈடுபட்டு வருகிறார்கள். கம்பினை விதைத்த ஒருவர் சராசரி 30 கிலோ அறுவடைகளைப் பெற்றுள்ளார். அதன் விதையின் அளவு 50 கிராம் ஆகும். குரக்கனைப் போன்று மிகச் சிறியதாகத்தான் இருக்கும். அதற்கு தண்ணீர் தேவையில்லை. அதனை மேட்டு நிலைத்தில் செய்கை பண்ண வேண்டும். அது எள்ளு வளர்வதைப் போன்று புழுதியிலே போட்டு விட்டால் தானாகவே வளர்ந்து விடும். அதைப் பெரியளவில் பராமரிக்கத் தேவையில்லை. நான்கு மாதங்களில் அறுவடை செய்யலாம். ஒரு கிலோ 700 – 800 வரை விற்பனை ஆகின்றது. மாவாக அரைத்து கஞ்சி காய்ச்சலாம். பிட்டு அவிக்காலம், மிகுந்த புரதத் சக்தி அதிகம். அரசி மாவுடன் கலந்து பழகாரங்கள் செய்யலாம்.

விவசாயத் திணைக்களத்துடன் இணைந்து கம்பு உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகள் வழங்கி வருகின்றோம். இலவசமாக விதைகள் வழங்குகின்றோம். அதில் எவ்வாறான உணவுப் பண்டங்கள் தயாரிக்கலாம் என்பது பற்றி மூன்று நாள் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

நாங்கள் ஆரம்பத்தில் முதல் கட்டமாக ஐந்து நபர்களைத் தெரிவு செய்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வழிகாட்டல்களையும் விதைகளையும் வழங்கி



கம்பு செய்கையினை மேற்கொண்டோம். அந்த வகையில் ஒருவர் சராசரி 30 கிலோ கம்பு அறுவடைகளை பெற்றுக் கொண்டு நல்ல வருமானத்தைப் பெற்றனர். தற்போது அவற்றை மேலும் விஸ்தரிக்கும் வகையில் 20 நபர்களைத் தெரிவு செய்து கம்பு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருவருக்கு தலா 500 கிராம் விதைகள் இலவசமாக வழங்கி வருகின்றோம்.

அவை மட்டுமல்ல ஒரு கிலோ ரூபாய் 300 – 400 விற்பனை செய்யக் கூடிய விதைகளை நாங்கள் இலவசமாக வழங்கி வருகின்றோம். கம்பு உற்பத்தியை யாழ்ப்பாணத்தில் அதிகம் செய்கை பண்ண வேண்டும் என்பதுதான் எங்களுடைய அதிக எதிர்பார்ப்பாக இருக்கின்றது. கம்பு என்றால் அரைவாசிப்பேருக்குத் தெரியாது. ஆரம்பத்தில் இருந்தது. அது அருகிப் போய் இல்லாமற் போய் விட்டது. அதனை எல்லா மக்களும் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்கான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் உதவிகளையும் செய்து வருகின்றோம்.



**நீங்கள் எந்த அடிப்படையில் குடும்பப் பெண்களை தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றீர்கள் ?**

மக்கள் பொருளாதார மையம் என்பது சிறிய சிறிய குழுக்களாகவே இயங்குவார்கள். யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 16 குழுக்கள் உள்ளன. கிராமங்களில் மக்கள் வாழும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று அந்த குடும்பப் பெண்களுடன் கலந்துரையாடல் செய்வோம். அவர்களுக்கு தற்காலத்திற்கு தேவையான அறிவுரைகளை வழங்கி இயல்பான வாழ்க்கையினை முகாமைத்துவம் செய்வதற்காக எங்களுடைய குழுவில் இணைத்துக் கொள்கின்றோம். இந்த குழுக்கள் ஊடாகத்தான் தத்தம் வீடுகளிலும் பிரதேசத்திலும் முதலில் விவசாய உற்பத்திகளை உருவாக்குவதற்கான உத்வேகத்தை வழங்கி வருகின்றோம். அதனை ஏற்றுமதி செய்வதற்கான வழிகாட்டல்களை செய்து வருகின்றோம். கச்சான், சோளம், கம்பு, போன்ற உற்பத்திப் பொருட்களை உணவாக தயார்ப்படுத்தி அதற்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க முயற்சிகளையும் செய்து வருகின்றோம். அத்தகைய முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காய் இயற்கை வள உரங்கள் பற்றி அறிமுகப்படுத்தி அவற்றைக் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல் பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளோம். வீட்டுக் கழிவுகளைக் கொண்டு எவ்வாறு சேதனப் பசளைகளை உருவாக்கலாம் என்ற தொனிப்பொருளில் பல தரப்பட்ட பயிற்சிகளை வழங்கியுள்ளோம்.

**?.நீங்கள் குடும்பத் தலைவிகளிடத்தில் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்க எவ்வாறான ஆலோசனைகளை முன் வைக்கின்றீர்கள்?**

@.மக்கள் பொருளாதாரத்தின் பிரதான செயற்பாடானது ஒரு குடும்பத்தில் எவ்வாறு சேமிப்பு இருத்தல் வேண்டும் என்பதற்கான வழிகாட்டல்களைச் செய்வதாகும். எவ்வாறு சேமிப்புச் செய்யலாம். எதைச் செய்யக் கூடாது என்பதற்



கான வழிகாட்டல்களைச் செய்கின்றோம்.

உதாரணத்திற்கு வாகனம் ஒன்றுக்கு முதலீட்டைச் செய்யும் போது அதற்கு தேய்மானம் இருக்கிறது. அதன் மூலம் பெரியளவில் இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. அதன் பெறுமதி வளராது. ஒரு சங்கத்தில் அல்லது நிலத்தில் முதலீடு செய்தால் அது போகப் போக கூடிக் கொண்டுதான் போகும்.

பெண்களைப் பொறுத்தவரையில் அதிகளவில் சாரிகள் வாங்குவார்கள். ஒரு வீட்டு அலுமாரியில் இரண்டு மூன்று இலட்சத்துக்கு மேல் சாரிகளை வாங்கி அடுக்கி வைத்திருப்பார்கள். இதனுடைய முதலீட்டால் என்ன பயன் இருக்கிறது. அரச உத்தியோகஸ்தர்களுக்கு தேவையானளவு சாரி தேவைதான். ஆனால் சும்மா வீட்டில் இருப்பவர்கள் அலுமாரியில் கூரைச்சாரி என்று பல சாரி வகைகளை அடுக்கி வைத்திருக்கின்றார்கள். இவை அவசியமில்லை என்று நாங்கள் அவர்களுக்கு சொல்ல வரவில்லை. அவர்களது தேவைக்கு ஏற்றவாறு வாங்கி வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்கின்ற அறிவுரைகளைப் புகட்டி வருகின்றோம்.

நாட்டுக் கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்களுக்கு நாங்கள் தற்போது அதிக கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றோம். அவர்களுக்கு குஞ்சிக் கோழிகளை கொடுத்து வருகின்றோம். நாட்டுக் கோழி வளர்ப்புக்குத் தேவையானவற்றை நிறைவேற்றி வருகின்றோம். ஏனென்றால் இன்றைக்கு எமது நாட்டில் முட்டைக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் நாட்டுக் கோழி முட்டையின் இன்றைய கேள்வி கிட்டத்தட்ட ரூபா 100 வாகும். சாதாரண முட்டை 65 ரூபாய். ஒரு நாளைக்கு நாட்டுக் கோழி முட்டை 10 விற்பனை செய்வார்களாயின் ஒரு நாளைக்கு ரூபா 1000 வருமானத்தைப் பெறலாம். வேறு எங்கும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை. இப்படி வருமானம் ஈட்டக் கூடிய தொழிலை வைத்து விட்டு நாங்கள் எப்பொழுதும் பாம் கோழி முட்டைக்காக அலையவேண்டியதில்லை. நாட்டுக் கோழிகளுக்கு பெரியளவில் தீன்களைப் போட வேண்டிய அவசியமில்லை. அவை தானாகவே தீனியைப் பொறுக்கிக் கொள்ளும். இந்த வழிகாட்டலின் மூலம் அதிகளவு இலாபத்தைப் பெற்று வருவதாக பொருளாதார மையத்திலுள்ள குழுவினர்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்து வருகின்றார்கள்.

எங்களின் கீழ் 16 குழுக்கள் உள்ளன. அந்த குழுக்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் பெரு எண்ணிக்கையிலான மக்களைச் சந்தித்து பொருளாதார ரீதியில் அவர்களை வலுவூட்டும் நடவடிக்கைகளை நாங்கள் தினசரி மேற் கொண்டு வருகின்றோம். வீட்டுத் தலைவிகளுடைய வாழ்க்கையில் புதிய கலாசாரத்தை தோற்றுவித்து வருகின்றோம்.

அவை மட்டுமல்ல இன்றைய மக்களது உணவுப் பழக்கவழக்கம் அவசர உணவுச் சாப்பாட்டுப் பழக்கவழக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இரவு சாப்பாடு இல்லையெனில் உடன் கடைக்குச் சென்று கொத்து வாங்கிச் சாப்பிடுவோம். இதற்காக அதிகளவு பணத்தைச் செலவு செய்வதுடன் நோயையும் தேடிக் கொள்கின்றோம். இதனால் செமிப்பை பெற்றுக் கொள்ள முடியாது.

இயற்கையாக கிடைக்க வேண்டிய உணவு வகைகளை வைத்து விட்டு செயற்கையை மக்கள் நாடிச் செல்லுகின்றனர். எங்களுடைய உணவுக் கலாசாரத்தை மாற்ற வேண்டும். ஒரு வேளை பகல் சாப்பாட்டுக்கு ஒரு குடும்பம் சோறு, ஒரு மீன்கறி, குழம்பு, பிரட்டல், பருப்பு போன்றவற்றை சமைப்பார்கள். நான்கு ஐந்து வகையிலான கறிகள் இருக்கும். நாங்கள் ஒரு கறியோடு எல்லா வகையிலான சத்துணவுகளும் பெற்றுக் கொள்ளும் வகையிலான அறிவூட்டல்களை வழங்கி வருகின்றோம். ஒரு கறியின் மூலம் எப்படி சத்துணவைப் பெறலாம் என்ற வழிகாட்டலையும் செய்கின்றோம். இது மிக முக்கியமான விடயம்.



நான்கு கறி சமைக்க வேண்டும் எனில் நான்கு தடவை தேங்காய் துருவ வேண்டும். கொலொஸ்ட்ரோல் உடம்புக்கு அதிகம் பாதிப்பைச் செலுத்தும். உதாரணமாக இறைச்சிக் கறி என்று சொன்னால் இறைச்சிக்குள் கீரை வகைளைப் போட்டுச் சமைக்கலாம். ஒரே தடவையில் செய்து முடிக்கலாம். அதற்கு பாரிய செலவு தேவையில்லை. காய் கறிகள் புறம்பாக சமைக்க வேண்டியதில்லை. மேலதிகமான எண்ணெய் தேவையில்லை. உப்பு அவசியமில்லை. இப்படி ஒரு கறிக்குள் என்னென்ன போசாக்கு சத்துணவுகள் தேவையோ அவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும். உருளைக் கிழங்கு அதற்குள் போட வேண்டும். உணவுப் பழக்க வழக்கத்தில் கடைப்பிடிக்க புதிய ஒழுங்கு முறைகளை சொல்லி வருகின்றோம். இதன் மூலம் சேமிப்பை ஏற்படுத்த முடியும்.

அதே போன்று மக்கள் பொருளாதார மன்றத்தின் குழுக்களாகச் செயற்பட்டு குடும்பத் தலைவிகளுக்கு கைத்தொழில் பயிற்சிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து பொருளாதார ரீதியில் வலுசேர்க்கும் நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம். கம்பு உற்பத்தி, வீட்டுத் தோட்டச் செய்கைகளுக்கு நாங்கள் அதிகம் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவித்து வருகின்றோம்.

மக்கள் பொருளாதார மன்றத்தின் ஊடாக மக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு முன்னேற்றகரமான பயன்பாட்டினை அடைந்துள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**அப்படியாயின் நீங்கள் எங்கெங்கு இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

யாழ்ப்பாணத்தில் வேலணை. சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், புத்தூர், மூலாய், அராலி ஆகிய பிரதேசங்களில் எங்களது மக்கள் பொருளாதார மன்றம் செயற்படுவதுடன் கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள கிராமங்களிலும் இவ்வேலைத் திட்டம் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது என்று குறிப்பிடலாம்

காவேரிக் கலா மன்றத்தின் இயக்குனர் வணபிதா யோசுவா அடிகளார் அவர்களுடைய இதற்கான வழிகாட்டல்கள் பற்றிக் கூறுவதாயின் வார்த்தைகளால் விவரிக்க முடியாது. துருவ நட்சத்திரத்தைப் போன்று அடிக்கடி கடைசி வரை ஒவ்வொரு வழிகாட்டல்களையும் ஆலோசனையும் எந்தவொரு குறையுமில்லாமல் வெளிச்சம் போல் வழங்கிக் கொண்டே இருப்பார் என்று இறுதியாக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

**நேர்காணல் – இக்பால் அலி**


ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன்கிழமை 2023.07.26
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5187
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,041,504.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 9 8 1 5 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3429
சீட்டிழுப்பு திகதி 2023.07.26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 70,558,049.60
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 21 50 73 79
விசேட எழுத்து A
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 46831

லக்கி 7 Lucky 7
திகதி 26.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0013
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 4 8 8 2 7 3
L7 இலக்கம் 3 9
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,144,071.44

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1217
திகதி 2023-07-26
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,786,723.20
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 10 45 54 72
விசேட எழுத்து K

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 496
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,866,987.00
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 11 40 53 58
விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1535
54278
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,356,084.00
ஆங்கில எழுத்து G
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 44 45 49 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# கிழக்கின் குரல்



## அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு தெளிவூட்டல்



**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

தேசிய மத்தியஸ்த வாரத்தையொட்டி, அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட, மத்தியஸ்த சபை உறுப்பினர்களை தெளிவூட்டும் நிகழ்வு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் புதன்கிழமை (26) நடைபெற்றது.

அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபை தவிசாளர் ஐ.எல்.ஹாசிமின் தலைமையுரையுடன் ஆரம்பமான இந் நிகழ்வில், அக்கரைபற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஷா பிரதம அதிதியாக கலந்து கொண்டு, மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான விளக்கவுரையினை நிகழ்த்தினார். மத்திய சபையின் செயற்பாடுகளை மேலும் வலுவூட்டும் முகமாக மத்தியஸ்த சபையின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது பற்றியும் விளக்கினார். வன்முறையற்ற தொடர்பாடல் மூலமாக பிணக்குகளுக்கு தீர்வு காண்பதுபற்றி இங்கு விளக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு மத்தியஸ்த சபையின் தவிசாளர் வேலாயுதன் நடராசா மற்றும் உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மத்தியஸ்த சபை உறுப்பினர்களின் பலதரப்பட்ட கேள்விகளுக்கு நீதவான் ஹம்ஸாவினால் விடையளிக்கப்பட்டது.

## காத்தான்குடி பொலிசார் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள வீடுகளில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், பொதுமக்கள் இது குறித்து மிக அவதானமாக இருக்குமாறு பொலிசார் பொது மக்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

இதன் காரணமாக வீடுகளில் ஆட்கள் இல்லாத நேரங்களில், வீடுகளை உடைத்து பெறுமதியான பொருட்களை திருடிவருகின்றனர்.

வீதிகளில் நடமாடும் ஐஸ் மற்றும் போதைப் பாவனையாளர்கள் தொடர்பான தகவல்களை பொலிசாருக்கு அறியத்தரும்படியும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

திருட்டுச் சம்பவங்களையும், போதைப் பொருள் பாவனையையும் பொலிசாரினால் மாத்திரம் ஒழித்துவிட முடியாது, பொது மக்களின் ஒத்துழைப்புடனேயே இக் குற்றச் செயல்களை ஒழிக்க முடியும். எனவே பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பை பொலிசார் எதிர்பார்க்கின்றனர்,என காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## புள்ளிவிபர தகவல்கள் உண்மைத் தன்மையாக இருக்க வேண்டும்

### மட்டு. உதவித் தொகைமதிப்பு அத்தியட்சகர்

**(ஏறாவூர் சுழற்சி நிருபர்)**

புள்ளிவிபரத் தகவல்களின் உண்மைத் தன்மையிலேயே முழு நாட்டிற்கும் தேவையான அபிவிருத்தியை இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருக்கும் என, மட்டக்கப்பு மாவட்ட புள்ளி விபரவியலாளரும் உதவித் தொகைமதிப்பு அத்தியட்சகருமான ரீ. ஜெய்தனன் தெரிவித்தார்.

இலங்கையின் 15ஆவது குடிசன மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு பணிகளின் ஆரம்ப கட்ட செயற்பாடுகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறியினை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (26) நடைபெற்ற இந் நிகழ்வு, மாவட்ட செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், எந்த புள்ளிவிபரத் தகவல்களாக இருந்தாலும் அதில் நம்பகத்தன்மை காணப்பட வேண்டும். அப்போதுதான் அந்த தகவல்களினால் சிறந்த திட்டங்களையும் அபிவிருத்திகளையும் இனங்காண முடியும்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் புள்ளிவிபரத் தகவல்கள் மிகவும் இன்றியமையாத ஒன்றாக காணப்படுவதால், அந்தக் கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபடுகின்ற அனைவரும் சரியான நேரத்தில் உண்மையான தரவுகள் சேகரிக்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

மாவட்ட செயலக புள்ளிவிபரக் கிளை ஏற்பாடு செய்த இந்த பயிற்சி வகுப்பில் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தினேஷ், உட்பட கணக்கெடுப்பு பணிகளில் பிரதேச செயலக ரீதியாக ஈடுபடுத்தப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்ட வட்டார உத்தியோகத்தர்கள், புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தாகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிரான் மத்திய கல்லூரியில் மாணவர் சட்ட மன்றம் அங்குரார்ப்பணம்



**பாசிக்குடா நிருபர்**

கிரான் மத்திய கல்லூரியில், மாணவர் சட்ட மன்றம் அங்குரார்ப்பணம் செய்தல் மற்றும் அறிமுக பயிற்சி நிகழ்வு கல்லூரி அதிபர் மா.தவராஜா தலைமையில் புதன்கிழமை (26) நடைபெற்றது.

அதிதிகள் மலர் மாலை அணிவித்து மாணவர்களினால் வரவேற்கப்பட்டனர். மங்கள விளக்கேற்றல் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம அதிதி மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ்வினால் மாணவர் சட்ட மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர் சட்டத்தரணி திருமதி சுபாசினி ருமணன் சட்டம் தொடர்பான அறிமுகத்தை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினார். பிரதம அதிதி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து அவர் சட்டம் தொடர்பாக மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்களை உரையாற்றினார்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம். எம்.அப்துல்லாஹ், கௌரவ அதிதிகளாக கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் த.அனந்தரூபன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜெயவதனன், சிறப்பு அதிதியாக கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, சட்டத்தரணி திருமதி சுபாசினி ருமணன் மற்றும் கிரான் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். வரலாற்றில் முதன் முதலாக இந் நிகழ்வு கல்லூரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த மாணவன் கௌரவிப்பு

**(ஏறாவூர் சுழற்சி,கல்லடி குறூப்,புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விஷேட நிருபர்கள்)**



பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த மாணவன் மதுஷிகனை கௌரவிக்கும் நிகழ்வு, புதன்கிழமை (26) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவன் மதுஷிகன், மட்டு. வெபர் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் வைத்து மாலை அணிவிக்கப்பட்டு, மாவட்ட செயலக உயர் அதிகாரிகள் புடைசூழ பேண்ட் வாத்தியங்கள் முழங்க நடைபவனியாக மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

இதன் போது மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் வீதியோரத்தில் அணிவகுத்து நின்று சாதனை வீரன் மதுஷிகனை வரவேற்றதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைத் தொடந்து மாநாட்டு செயலக மாநாட்டு மண்டபத்தில் விஷேட நிகழ்வும் இடம்பெற்றது.

இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து பாக்கு நீரிணையைக் நீந்தி தலைமன்னாரை வந்தடைந்துடன், பிளாஸ்டிக் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்திய சாதனையாளரான மதுஷிகன் பாராட்டப்பட்டதுடன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா அவர்களினால் நினைவுச்சின்னம் மற்றும் நிதி அன்பளிப்பு என்பன வழங்கி கௌரவமளிக்கப்பட்டார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சனி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதைப் பொருள் பாவனையை ஒழிக்க விழிப்பூட்டல் நிகழ்வு

**(மூதூர் தினகரன் நிருபர்)**

சமூகத்தில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் சமூக சீர்கேடுகள், நோய்கள் மற்றும் அடிமையாகுதலில் இருந்து மக்களை பாதுகாக்கும் முகமான விழிப்பூட்டல்கள், மூதூர் பிரதேச பள்ளிவாசல்கள் மூலமாக செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து பிரதேச மக்களை பாதுகாக்கும் முகமாக பாவனையாளர்கள், இந் நடவடிக்கையில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கான வழிமுறைகள் பற்றியும் ஆலோசனைகளும் கூறப்பட்டு வருகின்றன.

## நெல் வயல்கள் யானைகளால் துவசம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் கமநல சேவை நிலையத்திற்கு உட்பட்ட, வெள்ளாலவெட்டை, ஒட்டுப்புல்வெட்டை மற்றும் பெரும்பத்து வயல் நில பிரதேசங்களில் அறுவடைக்கு தயார் நிலையில் காணப்படும், நெற் காணிகள் யானைகளால் இரவில் பெரும் அழிவுக்குள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்முறை மிக குறைந்த பிரதேசங்களில் மாத்திரமே சிறுபோக நெற் செய்கை பண்ணப்பட்டன.

இரவில் விவசாயிகள் யானைக்காவல் புரிந்து வரும் நிலையில், கங்கை மற்றும் நன்னிக்காடுகளில் இருந்து வரும் யானைகள் கூட்டம் கூட்டமாக வருவதாகவும், வயல் வெளிகளில் உலாவி இப்பயிர்களை அழிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

## வீதிகளில் விளம்பர பதாகைகளை காட்சிப்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை

**(சாய்ந்தமருது விசேட,கல்முனை விசேட நிருபர்கள்)**



கல்முனை மாநகர வீதிகளில், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக விளம்பரப் பதாகைகள் மற்றும் வியாபாரப் பொருட்களை காட்சிப்படுத்தும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும்,இவ்விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல் வியாழக்கிழமை (27) கல்முனை மாநகர சபை கேட்போர் கூடத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல். எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

கல்முனை அக்கரைப்பற்று, கல்முனை மட்டக்களப்பு நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பிரதான வீதியோரங்களில் வர்த்தக நிலையங்களின் விற்பனைப் பொருட்களும் அவற்றின் பெயர்ப் பலகைகள் மற்றும் விளம்பரப் பதாகைகளும் பெருமளவில் காட்சிப்படுத்தப்படுவதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இவை நடைபாதைகளையும் வடிகான்களையும் ஆக்கிரமித்திருப்பது மாத்திரமல்லாமல் அவற்றையும் தாண்டி வீதிகளில் கூட பொருட்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அனுமதிக்கப்படாத தெருவோர அங்காடி வியாபாரங்களும் நடைபெறுகின்றன. அத்துடன் வீதிகளில் வாகனங்களை நீண்ட நேரம் தரித்து வைப்பதும் நடமாடும் வியாபார வாகனங்களை நிறுத்தி வைத்து வியாபாரம் மேற்கொள்வதும் சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன.

வீதிகளை ஒழுங்குபடுத்தி, அழகுபடுத்தும் நோக்கிலும் மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸார் இணைந்து உரிய நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், மாநகர பொறியியலாளர் ஏ.ஜே. எச்.ஜௌஸி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் இஸட்.ஏ.எம். அஸ்மீர் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

## அக்கரைப்பற்றில் நடைபெற்ற விழிப்பூட்டும் செயலமர்வு



**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட காரியாலயத்தினால், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்றுத்தரும் பயிற்சி நெறி சம்பந்தமாக இளைஞர், யுவதிகளை விழிப்பூட்டும் செயலமர்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சாரின் வழிகாட்டலில், சமுர்த்தி தலைமையக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (26) நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி பயன்பெறும் குடும்பங்களில் உள்ள, வெளிநாட்டு வேலை வாய்ப்பு தேடும் இளைஞர் யுவதிகளுக்கு சமுர்த்தி பிரிவினரால் அது தொடர்பான தொழிற் பயிற்சியை வழங்கும் வேலைத் திட்டத்திற்கமைவாக இந்த விழிப்பூட்டல் செயலமர்வு இடம்பெற்றதாக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் வை.றாசீத் (நழீமி), தொழிற்பயிற்சி அதிகார சபை அதிகாரிகள், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

## கோணாவத்தை அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை கோணாவத்தை அபிவிருத்தி தொடர்பான விஷேட கூட்டம் பீச்ஹவுஸ் கூட்ட மண்டபத்தில் புதன்கிழமை (26) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.சாபீர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதேச சபையின் செயலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், மற்றும் கோணாவத்தை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றின் எல்லையிடும் பணிகளை துரிதப்படுத்துதல், கோணாவத்தை ஆற்றில் நீர் வடிந்தோட முடியாமல் காணப்படும் ஆற்று வாழையினை அகற்றுவதற்கு நடவடிக்கையெடுத்தல் போன்றன தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம் 15 நிமிடம்


**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.



2. காகிதம் ஒன்றினை படத்தில் காட்டியவாறு மடித்து வெட்டியபின் கிடைக்கும் உரு யாது?





i. ii. iii.

3. 5 புத்தகங்களின் விலை ரூபாய் 375.00 எனில் இரண்டு புத்தகங்களின் விலை யாது?
i. ரூபாய் 150.00 ii. ரூபாய் 250.00 iii. ரூபாய் 225.00


4. வருடமொன்றில் 30 நாட்களை மட்டும் கொண்ட மாதங்கள் எத்தனை?
i. 11 ii. 5 iii. 6

5. ஆறாயிரத்து எழுநூற்று முப்பத்தாறு இதனை பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது பெறப்படுவது
i. 6376 ii. 6736 iii. 6376

6. 1 தொடக்கம் 100 வரை எண்ணும் போது இலக்கம் '0' வரும் தடவைகள் எத்தனை?
i. 11 ii. 10 iii. 12

7. முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது எவ்வித மாற்றமுமின்றி தோன்றும் எழுத்துக்களின் தொகுதி
i. U Z W ii. U W T iii. U N T

**தொடர்பை அவதானித்து கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்குக.**




எனில்


8. வாழைப்பழத்தின் விலை யாது?
i. ரூபாய் 20.00 ii. ரூபாய் 15.00 iii. ரூபாய் 10.00

9. மாம்பழத்தினதும் அப்பிள் பழத்தினதும் விலை யாது?
i. ரூபாய் 40.00 ii. ரூபாய் 30.00 iii. ரூபாய் 25.00

10. ஒரு வாழைப்பழம் வாங்கும் பணத்துடன் மேலதிகமாக எவ்வளவு பணம் சேர்த்தால் ஒரு அப்பிள் பழம் வாங்கலாம்?
i. ரூபாய் 5.00 ii. ரூபாய். 10.00 iii. ரூபாய் 15.00

11. பின்வருவனவற்றுள் எப்போதாவது நிகழக்கூடிய ஒரு நிகழ்வானது
i. கிழக்கு வானில் சூரியன் தோன்றுதல்
ii. இரவு வானில் நட்சத்திரங்கள் தோன்றுதல்
iii. வானவில் தோன்றுதல்


12. கிழேயுள்ள உருக்களில் விளிம்புகளும் முகங்களும் சமமாகவுள்ள உரு எது?




i. ii. iii.

13. ஒரு தாங்கியில் 20*l* 350 ml நீர் இருந்தது. அதிலிருந்து 4*l* 250 ml நீர் வெளியேறினால் மிகுதியாக உள்ள நீரின் அளவு யாது?
i. 16*l* 150 ml ii. 16*l* 100 ml iii. 15*l* 100ml

14. சபரிக்கு மஞ்சள் தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும். சுதனுக்கு சிவப்பு தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும். சஸ்வினுக்கு நீலம் தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும் எனில் மூவர்க்கும் பிடித்த நிறமாக இருக்கக் கூடியது எது?
i. சிவப்பு ii. பச்சை iii. மஞ்சள்

15. 
இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையானது?
i. 12
ii. 14
iii. 16

16. 


i. 32 ii. 40 iii. 44

17. இவ்வுருவிலுள்ள சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கையானது?
i. 6
ii. 8
iii. 10




18. **3 9 15**
**9 15 21**
**15 21 ?**
கேள்விக்குறிக்கு வரவேண்டிய எண்ணானது?
i. 29 ii. 28 iii. 27


19. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் முதலாம் திகதி திங்கட்கிழமை எனில் அம்மாதத்திலுள்ள வெள்ளிக்கிழமைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 6 ii. 5 iii. 4

20. கண்டியிலிருந்து காலை 10 மணிக்கு புறப்பட்ட புகைவண்டி பி.ப. 3 மணிக்கு கொழும்பை அடைந்ததெனில் அதன் பிரயாண நேரத்தை நிமிடத்தில் தருக.
i. 300 நிமிடங்கள் ii. 360 நிமிடங்கள் iii. 400 நிமிடங்கள்

21. ஒரு கைக்கடிகாரத்தின் விலை ரூபா. 5000.00 எனில் இதுபோல 7 கைக்கடிகாரங்கள் வாங்க தேவையான பணம் எவ்வளவு?
i. 25,000 ii. 30,000 iii. 35,000


22. 


i. 32 ii. 30 iii. 16

23. 
படத்தில் நிறந்தீட்டப்பட்ட பகுதியை பின்னமாக காட்டினால்
i. 2/8 ii. 4/8 iii. 1/8

24. இரண்டு வருடங்களுக்கு முன் ரித்திக்கின் வயது 8, மிதுர்ஷனியின் வயது 9 தனுக்ஷனின் வயது 7 இன்னும் மூன்று வருடங்களின் பின் மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
i. 30 ii. 33 iii. 39

25. இவ்வுருவில் உள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?



i. 10 ii. 18 iii. 20

26. தேனீ - கூடு எனில் கறையான் -
i. வளை ii. பொந்து iii. புற்று

27. 1*l* பெற்றோலில் வாகனமொன்று 40 km செல்ல முடியும். 100 km செல்ல வேண்டுமாயின் தேவைப்படும் பெற்றோலின் அளவு யாது?
i. 2*l* ii. 25 *l* iii. 3 *l*

28. நட்டாற்றில் விடுதல் என்பதன் பொருள்
i. ஆற்றிலே நீராடுதல் ii. ஆபத்தில் உதவுதல்
iii. ஆபத்தில் கைவிடுதல்

29. A = 5, E = 2, G = 7, L = 3 எனில் EAGLE என்ற சொல்லின் கூட்டுத்தொகை யாது?
i. 19 ii. 18 iii. 17

30. ஒரு வியாபாரி ரூபாய் 20.00 வீதம் 20 தொப்பிகளை வாங்கி அவற்றை ரூபாய் 22.00 வீதம் விற்றான் எனில் அவன் பெற்ற லாபம் எவ்வளவு?
i. ரூபாய் 40.00 ii. ரூபாய் 30.00 iii. ரூபாய் 20.00

31. 4 மனிதர்கள் 5 நாட்களில் செய்யும் வேலையை 10 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்
i. 5 நாட்களில் ii. 2 நாட்களில் iii. 4 நாட்களில்

32. 150m நீளமுள்ள கயிற்றுத் துண்டொன்றில் 30 m நீளமும் 80 m நீளமும் உள்ள துண்டுகள் வெட்டி அகற்றப்பட்டால் மிஞ்சிய துண்டின் நீளம் யாது?
i. 20 m ii. 30 m iii. 40 m

33. 2015, 2016, 2017 ஆகிய மூன்று வருடங்களிலுள்ள மொத்த நாட்களின் கூட்டுத்தொகை யாது?
i. 1096 ii. 1095 iii. 1094

(10ஆம் பக்கம் பார்க்க)

(09 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

34. 8, 12, 17, 23, ………..., ………… அடுத்து வரும் எண்கள் எவை?
    i. 29, 37 ii. 30, 38 iii. 30, 37

35. 60 + 72 + 86 + - 49 = ?
    i. 169 ii. 167 iii. 158

36. 5kg மா ரூபாய் 700.00 எனில் 3 kg மா எவ்வளவு?
    i. ரூபாய் 500.00 ii. ரூபாய் 480.00 iii. ரூபாய் 420.00

37. இரண்டு ஒற்றை எண்களை கூட்டி அதிலிருந்து ஒரு இரட்டை எண்ணை கழித்தால் பெறப்படுவது?
    i. இரட்டை எண் ii. ஒற்றை எண் iii. கூறமுடியாது.

38. 1949 ஆம் ஆண்டு எத்தனையாம் தசாப்தம்
    i. நான்காம் தசாப்தம் ii. ஐந்தாம் தசாப்தம்
    iii. ஆறாம் தசாப்தம்

39. முகமே இல்லாத ஒரு திண்மவுரு
    i. கோளம் ii. உருளை iii. நான்முகி

40. வானவில் ஒன்று தோன்ற வேண்டுமாயின் கட்டாயமாக இருக்க வேண்டியது?
    i. சூரியன், மழைத்துளி ii. மழை, காற்று
    iii. சூரியன், காற்று

## கடந்த வார (21.07.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**

1. பச்சை பட்டாடை விரித்தாற் போல
2. மிகவும் அழகிய காட்சி
3. கண், பூக்கள்
4. i. பாரிலுள்ள ii. மகிழ்ச்சி
5. i. செயற்கை
6. காலைக்காட்சி

**II.**

7. i. கந்தன் ii. வெட்டினான் iii. மரத்தை
8. i. குமரன் ii. ஏறினான் iii. இல்லை
9. கோழிகள் குஞ்சுகளுக்கு இரை ஊட்டின.
10. i. பாற்சோறு ii. மலையருவி iii. குளக்கரை
11. i. சுளை ii. பிள்ளை
12. i. பேர்த்தி ii. இடைச்சி
13. நாளை காலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும்.
14. i. பேராசை பெருநட்டம்
    ii. ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு
15. i. கோகுல் கடைக்குச் சென்று புத்தகம், பென்சில், அழிறப்பர் வாங்கினான்.
16. i. தொழிற்சாலை ii. அனுகூலம்
17. சொல்லும்
18. மெய், வாய், கண், மூக்கு, செவி
19. i. பதாதா ii. ஹிரு iii. மிரிஸ் iv. சிங்கயா
20. i. Kite ii. Butterfly

**III.**

21. i. 3 ii. 5
22. A
23. 3/8
24. பன்னிரண்டு நட்சத்திரங்கள் நிழற்றப்பட வேண்டும்
25. கனவுரு
26. எழுபத்தேழாயிரத்து எழுபத்தேழு
27. உச்சிகள் இல்லை
28. ரூபாய் 400.00
29. 63

**IV.**

30. 3
31. 2
32. 1
33. 1
34. 2
35. 3
36. 2
37. 1
38. 2
39. 1
40. 3
41. 2
42. 1
43. 2
44. 2
45. 1
46. 3
47. 3
48. 3
49. 1
50. 3
51. 2
52. 1
53. 3
54. 1
55. 2
56. 3
57. 2
58. 3
59. 1

# வெளிநாட்டு அமைச்சில் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்கள்

## தகுதியானோரை விண்ணப்பிக்க கோரிக்கை

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

வெளிநாட்டு அமைச்சில் நிலவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்கு, சேவை மூப்பின் அடிப்படையில் ஒருங்கிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி பதவிகளுக்கு இடமாற்றம் பெற விரும்பும் ஒருங்கிணைந்த சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதிக்கு முன்னர் தமது சுய விபரக்கோவை உள்ளிட்ட விபரங்களை admin reports @mfa.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இந்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் குறிப்பிட்ட சேவையைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், நியமனக் கடித இலக்கம் மற்றும் பாவனையிலுள்ள தொலைபேசி இலக்கம் என்பவற்றை உள்ளடக்கிய சுய விபரக் கோவையுடன் பட்டம் மற்றும் பட்டப் பின்படிப்பு சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் தற்போது பணிபுரியும் திணைக்களத் தலைவரின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை குறிப்பிட்ட தினத்துக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணைந்த சேவைகள் பிரிவின் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ்.ஆலோக பண்டார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் தற்சமயம் பத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும், இந்த இடமாற்ற நியமனங்களுக்கு ஆங்கில மொழித் திறன் மற்றும் கணினி அறிவு என்பன அத்தியாவசியமான விஷேட தகைமைகளாக கருதப்படும் எனவும் பணிப்பாளர் நாயகத்தின அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயம் தொடர்பிலான மேலதிக தகவல்களுக்கு வெளிநாட்டு அமைச்சின் பொது நிர்வாக பிரிவின் 0112324119 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மாலைதீவு சுதந்திர தின நிகழ்வு கொழும்பில்



(அஷ்ரப் ஏ சமத்)

மாலைதீவு நாட்டின் 59ஆவது சுதந்திர தினம் கொழும்பிலுள்ள மாலைதீவு உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது.

மாலைதீவின் உயர்ஸ்தானிகர் அலி பாயி ஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாலைதீவின் தேசியக் கொ டி யை உயர்ஸ்தானிகர் ஏற்றி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் இல ங்கையில் வாழும் மாலைதீவு நாட்டைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

# தஞ்சாவூரில் திருவள்ளுவர் சிலை திறப்பு



தஞ்சாவூர், தொன் போஸ்கோ மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 154ஆவது திருவள்ளுவர் சிலையினை விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் மற்றும் விஜிபி குழுமத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் திறந்து வைத்தார். இவ்விழாவில் தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் முனைவர் அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.க.சரவணகுமார், திருச்சி சலேசிய மாநிலத் தலைவர் அருட்தந்தை ச.அகிலன், டி.என்.பி.எஸ்.சி உறுப்பினர் அருட்தந்தை எம்.ஆரோக்கிய ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மக்கொனை அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்களால் தொடர்ந்தும் 23ஆவது வருடமாக ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் புதுவருட நிகழ்வு அஹதிய்யா அதிபர் ஐ.எம்.எம். உவைஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது எடுத்த படம்.

# விழிப்புணர்வு செயலமர்வு

(புத்தளம் தினகரன் நிருபர்)

இலங்கையில் கடல்சார் மனித கடத்தல் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் திட்டம் தொடர்பான முழு நாள் செயலமர்வொன்று புத்தளம் தில்லையடியில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி அமைப்பின் (ஆர்.டி.எப்) கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (26) இடம்பெற்றது. சமூக மேம்பாட்டு அமைப்பு மற்றும் சீ.டி.எஸ்.நிறுவனம் ஆகியன இணைந்து இந்நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தன.

## அநுராதபுரம் மாவட்டத்தில்

# 'லீஸ்மேனிய சின்' நோய் தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

நாடளாவிய ரீதியில் வேகமாக பரவிவரும் "லீஸ்மேனியசின்'' நோய் தொடர்பில் பொது மக்களை விளக்கமூட்டும் நோக்கில் ரஜரட்ட பல்கலைக்கழக வைத்திய மற்றும் ஒப்பீட்டு அறிவியல் பீடத்தின் பிரஜா வைத்திய திணைக்களம் மற்றும் இக்லிப்ஸ் நிறுவனம் என்பன இணைந்து அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதிகளில் பல விளக்கமூட்டும் வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றது. நோய் தொற்றக்கூடிய நோய்க்கிருமி தொடர்பில் ஏற்பட்டுள்ள அறியாமை மற்றும் நோய் அறிகுறிகளை புறக்கணிப்பதன் மூலம் ஆரம்பத்தில் ஏற்படும் பல சிறிய கொப்புளங்கள் அல்லது புண்கள் உருவாகலாம்.

அதனை தடுப்பதற்கு ஆரம்பத்திலேயே அரச வைத்தியசாலைகளை நாடி தேவையான சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதால் லீஸ்மேனிய சின் நோயை தடுத்து நோயை குணப்படுத்த முடியும்.

# ஹம்பாந்தோட்டை இக்ரா மாணவர்கள் சாதனை



(படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்)

ஹம்பாந்தோட்டை கோட்டத்தில் இவ்வருடத்திற்காக நடைபெற்ற ஆங்கில மொழித்தின போட்டியில் ஆரம்ப பிரிவில் கலந்துகொண்ட ஹம்பாந்தோட்டை இக்ரா ஆரம்ப வித்தியாலய மாணவர்களில் கவிதைபோட்டியில் தரம் மூன்றில் அலிஸா பின்தி ரிஸ்மி முதலாவது இடத்தினையும் கையெழுத்து ஆக்கம் போட்டியில் தரம் நான்கில் எம்.ஐ.எப். செஸா முதலாவது இடத்தினையும் தரம் ஐந்தில் எஸ். என்.எம்.எப். நஸ்ஹா முதலாவது இடத்தினையும் தரம் மூன்றில் ஏ.எப். அமீரா இரண்டாவது இடத்தினையும் கவிதைப் போட்டியில் தரம் நான்கில் எம். ஐ. சுஹாமிஸால் இரண்டாவது இடத்தினையும் தரம் ஐந்தில் வீ. கம்ஸிதா மூன்றாவது இடத்தினையும் பெற்று வெற்றியீட்டி பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

# கெக்கிராவையில்; விவசாயிகளை தெளிவுபடுத்தும் கூட்டம்



கெக்கிராவ குறூப் நிருபர்

நிகழ்காலத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் என்பவற்றை தெளிவுபடுத்தும் வகையில் கெக்கிராவ பெஹெத்லேலிவெலயில் விழிப்புணர்வு கருத்தரங்கொன்று நேற்று (27) நடைபெற்றது.

சி.ஐ.சி. நிறுவனத்துடன் லங்கா ட்ரேடர்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இவ்விழிப்புணர்வு கருத்தரங்கில் சி.ஐ.சி நிறுவனத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், வளவாளர்களாக கலந்துகொண்டிருந்தனர். 150 இற்கும் அதிகமான விவசாயிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டதோடு விவசாயத்தில் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சந்தேகங்கள் என்பன அவ்விடத்தில் கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் எட்டடப்பட்டன.

# சீனா உதவியில் மல்வத்துஓயா திட்டம் முன்னெடுக்கப்படும்

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி.

வவுனியா விசேட நிருபர்



மல்வத்துஓயா திட்டம் சீனாவின் நிதி உதவியுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமென, பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று புதன்கிழமை (26) நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "வவுனியா, செட்டிகுளத்தை உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் மல்வத்துஓயா திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருடன் நான் உரையாடிய போது தெரிவித்திருந்தனர். இந்த திட்டத்துக்காக கடந்த அரசாங்கத்தால் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், நாட்டின் பொருளாதார நிலை காரணமாக நிதியை பெற முடியாத நிலை உள்ளது. அதனால், எதிர்காலத்தில் சீனாவின் உதவியில் அத்திட்டத்தை முன்னெடுக்க முடியும்" என்றார். ஆகையால், இந்த திட்டத்துக்கான நிதி எதிர்காலத்தில் சீனாவால் வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## தோணிக்கல்லில் வாள்வெட்டு இடம்பெற்ற வீட்டில் பொலிஸ் இராசாயன பகுப்பாய்வு

வவுனியா விசேட நிருபர்



தோணிக்கல்லில் வாள்வெட்டு மற்றும் வீட்டுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்த சம்பவங்கள் இடம்பெற்ற வீட்டில் கொழும்பிலிருந்து பொலிஸ் இராசாயன பகுப்பாய்வாளர்கள் சென்று, நேற்று முன்தினம் (26) இராசாயன பகுப்பாய்வை நடத்தியுள்ளனர்.

சம்பவ இடத்தை அவர்கள் பார்வையிட்டு, வீடு எரியூட்டப்பட்டமை மற்றும் அங்கு எரிந்த பொருட்களை இனங்கண்டு இரசாயன பகுப்பாய்வு நடத்தியுள்ளனர்.

தோணிக்கல்லிலுள்ள மேற்படி வீட்டில் 19 வயதுச் சிறுமியின் பிறந்ததின வைபவம் கடந்த சனிக்கிழமை (22) இரவு நடைபெற்றபோது, அவ்வீட்டுக்கு சென்ற இனந்தெரியாத சிலர், இந்த அசம்பாவிதத்தை புரிந்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று 21 வயதுடைய இளம் குடும்பப் பெண்ணொருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், இதில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இப்பெண்ணின் கணவர் (வயது 32) நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இதில் காயமடைந்த ஏனைய 9 பேரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் வவுனியா பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளதுடன், பல்வேறு கோணங்களிலும் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பரிசோதனை நிகழ்வு




சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை, அப்பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் உத்தியோகத்தர் பாலித செனவிரட்னவின் தலைமையில் நேற்று வியாழக்கிழமை (27) காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஏ.சனத் நிசாந்த கலந்து கொண்டு பரிசோதனையை முன்னெடுத்தார்.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தர்களின் அணிவகுப்பு பரிசோதனை, பொலிஸ் நிலைய வாகனப் பரிசோதனை மற்றும் விசேட வகுப்பு ஆகியனவும் நடைபெற்றன.

## 'லாலா சோப்' ஸ்தாபகரின் இழப்பு கவலையளிக்கிறது

### அமைச்சர் டக்ளஸ் அனுதாபம்



அச்சுவேலி 'லாலா சோப்' தொழிலக ஸ்தாபகர் பொன்னு வன்னியசிங்கத்தின் இழப்புச் செய்தி கவலையை ஏற்படுத்தியுள்ளதாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இவரது மறைவையிட்டு விடுத்துள்ள இரங்கல் செய்தியில் அமைச்சர் தெரிவித்துள்ளதாவது,

"பல்வேறு அவலங்களை சந்தித்த எமது சமூகத்தில் வாழ்ந்தவர்களில் 'லாலா ஐயா' என்று எம்மால் அழைக்கப்பட்ட அமரர் வன்னியசிங்கம் முக்கியமானவர். நடைமுறைச்சாத்தியமான வழியில் சிந்தித்து, அதன் வழியில் வர்த்தக நடவடிக்கைகளையும் ஏனைய செயற்பாடுகளையும் முன்னெடுத்த இவரை எமது சமூகம் இழந்துள்ளது. 90களின் இறுதிப்பகுதியில் மக்கள் நலன் சார்ந்த அரசியல் பணிகளை நாம் யாழ். குடாநாட்டில் மீண்டும் ஆரம்பித்த போது, எம்மோடு இணைந்து நின்றது மாத்திரமல்லாமல், எமது செயற்பாடுகளை உற்சாகப்படுத்திய முக்கியமானவர்களில் ஒருவராக அமரர் வன்னியசிங்கம் காணப்படுகிறார்.

இவரின் இழப்பு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு மாத்திரமன்றி எமது சமூகத்துக்கும் ஈடு செய்ய முடியாதாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்" எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பில் சிலுவையை உடைத்த இளைஞர் கைது

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலய வளாகத்தில் இருந்த இயேசு சிலுவையை உடைத்த குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவரை நேற்று முன்தினம் புதன்கிழமை (26) இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலை தொடர்ந்து, இந்த இளைஞரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மது போதையில் காணப்பட்ட நிலையிலேயே இந்த இளைஞர், சிலுவையை உடைத்துச் சேதப்படுத்தியமை தொடர்பாக தமது விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

### மட்டுவிலில் சடலம் மீட்பு

## வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தகவல்

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு ஜே/313 பிரதேசத்தில் சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் உடலில் பாரிய உடைவுகள் காணப்படுவதாக, பிரேத பரிசோதனை அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தலையில் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்ட அடையாளம் காணப்படுவதாகவும் கை எலும்பிலும் முறிவு காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள காணியில் குடிசை அமைத்து, அதில் தனிமையில் வசித்து வந்த 82 வயதுடைய தம்பையா சரோஜா என்பவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை (26) சடலமாக மீட்கப்பட்டார்.

தலையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட காயமும் கைகளில் வெட்டுக்காயங்களும் காணப்பட்டதை தொடர்ந்து, பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

ஆகையால், இவர் கொலை செய்யப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயினும், இந்தக் கொலைக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர். திருமணமாகாத நிலையில் வசித்து வந்த இவரது குடிசையில் பொருட்கள் ஆங்காங்கே வீசிக் காணப்பட்டதுடன், கடந்த 24ஆம் திகதி இரவு இந்த சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## வடமாகாண கராத்தே போட்டியில் இரு சகோதரர்களுக்கு தங்கப்பதக்கம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

வடக்கு மாகாண கராத்தே போட்டியில் கிளிநொச்சி, மருத நகர் கிராமத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் தங்கப்பதக்கங்களை பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த வாரம் நடைபெற்ற கராத்தே போட்டியில் சகோதரரும் அவரது இளைய சகோதரியுமே வெற்றி பெற்றுள்ளனர்.

21 வயதுக்குட்பட்டோருக்கான இப்போட்டியில் கலையமுதன் பரிதிகன் தங்கப்பதக்கம் மற்றும் வெண்கலப்பதக்கத்தை பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதேவேளை, 11 வயதுக்குட்பட்டோருக்கான கராத்தே போட்டியில் கலையமுதன் சௌபர்ணிகா தங்கப்பதக்கத்தை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.







## நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டுவிழா நேற்று ஆரம்பம்

நாகர்கோவில் விசேட நிருபர்

யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா நேற்று வியாழக்கிழமை (27) ஆரம்பமாகி மூன்று தினங்களுக்கு நடைபெறுகின்றது.

முதல் நாள் நிகழ்வான நேற்றையதினம் நூற்றாண்டு நினைவிட அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, விழிப்புணர்வு பேரணி மற்றும் தபால் தலை வெளியீடு நடைபெற்றன. விழிப்புணர்வு பேரணியின் போது சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், கார்கள், உழவு இயந்திரங்களில் மாணவர்கள் பவனி வந்தனர்.



## ஊர்காவற்றுறை - காரைநகர் படகுப்பாதையில் கைகலப்பு!

### படகுப்பாதை ஓட்டிக்கு விளக்கமறியல்

யாழ். விசேட நிருபர்

யாழ். ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வரும் படகுப்பாதையில் பயணித்தவர்களுடன் முரண்பட்டு, ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அப்படகுப்பாதை ஓட்டியை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை (26) உத்தரவிட்டுள்ளது. நிறை மதுபோதையில் மேலங்கி அணியாது கடமையில் இருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் படகுப்பாதை பணியாளரான இச்சந்தேகநபர், ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகருக்கு கடந்த செவ்வாய் (25) படகுப்பாதையில் பயணித்தவர்களுடன் முரண்பட்டு, தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதுடன், அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரையும் பொல்லால் தாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தனர்.

இந்த முறைப்பாட்டுக்கமைய விசாரணை நடத்திய பொலிஸார், படகுப்பாதை ஓட்டியை கைதுசெய்து, நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவு நிகழ்வு

### ஒக். 01இல் கலந்துரையாடல்

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவின் நிறைவு வைபவம் எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில், இது தொடர்பாக முன்னெடுக்கக்கூடிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆகையால், ஆர்வமுள்ள முன்னாள் ஆசிரிய மாணவர்கள் அல்லது கடந்த காலக் கற்கை அணி சார்ந்த பிரதிநிதிகளை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்துக்கு வருகை தருமாறு கலாசாலை அதிபர் அழைப்பு விடுத்துள்ளார்.

## மலையக இந்திய வம்சாவளியினர் வருகையின் இருநூற்றாண்டு நிறைவு

### தலைமன்னாரில் நிகழ்வு

தலைமன்னார் விசேட நிருபர்

இலங்கைக்கு மலையக மக்கள் வந்து 200 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை (29) முதல் எதிர்வரும் ஒகஸ்ட் 12ஆம் திகதிவரை தலைமன்னாரிலிருந்து மாத்தளைவரை நடைபயணமொன்று நடத்தப்படவுள்ளது.

இதன் தொடக்க நிகழ்வாக தலைமன்னாரின் கடற்கரை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியொன்று இன்று வெள்ளிக்கிழமை (28) மாலை 4.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. இதன் பின்னர், தலைமன்னார் புனித லோறன்சியார் தேவாலய வளாகத்தில் அன்றையதினம் மாலை 5.15 மணிக்கு இது தொடர்பான நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மனிதாபிமானத்தை பேணும் நோக்குடன் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தலைமன்னார் இந்து, இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

### தென்மராட்சி பிரதேச செயலகத்தில்

## பழுதடைந்த கடவுச்சீட்டு இயந்திரம் திருத்தம்

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ். தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டுக்கான கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரம் பழுதடைந்த நிலையில், அவ்வியந்திரம் திருத்தப்பட்டு மீண்டும் அதன் சேவை இடம்பெறுவதாக, அப்பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இணையவழியூடாக கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பித்து, கைவிரல் அடையாளத்தை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யும் முறை அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்த வகையில், யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகங்களில் இந்த நடைமுறை காணப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தென்மராட்சி பிரதேச செயலகத்திலுள்ள கைவிரல் அடையாள பதிவு இயந்திரம் பழுதடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பதவி வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்ட கம்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்காக மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இல. 06/2022 சுற்றுநிருபத்தின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உள்ளக கணக்காய்வாளர் 11-1 பதவிக்காக கண்டி மாவட்டத்திற்குள் நிரந்தர பதவி உள்ள 18-45 வயதிற்கிடைப்பட்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தற்போது கூட்டுறவு சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு இவ் வயதெல்லை பொருந்தாது)

சகல விண்ணப்பதாரிகளும் 2023.08.18 அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்குமாறு கௌரவ தலைவர், வ/ப கம்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், 1/78, கண்டி வீதி, கம்பளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்க முடியும் அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
அடிப்படைத் தகைமைகள் சகல விபரங்களையும் சங்க அலுவலகத்தில் அல்லது கிட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

1. உள்ளக கணக்காய்வு 1-1
   சம்பள அளவு இலக்கம்: EL-03-01
   சம்பள அளவு: 28500- 570x10-855x10-1140x10= 54150/-

இதற்கு மேலதிகமாக சகல பதவிகளுக்குமான மத்திய மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு சம்பள உரித்தும் வழங்கப்படும் சகல விண்ணப்பதாரிகளும் தகைமைகளை உறுதி செய்வதற்காக கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் ஏனைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் அத்துடன், தாமதமாகக் கிடைக்கும் மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் மறுஅறிவித்தல் இன்றி, நிராகரிக்கப்படும்.

**கூட்டுறவாளர்,**
**வ/ப கம்பளை ப.நோ. கூ. சங்கம்**
**1/78, கண்டி வீதி,**
**கம்பளை**

## நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தில்

குடியியல் நடவடிக்கை கோவையின் 554U இன் பிரிவின் கீழ் (1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு) Suffolk IP14 1LL, Stowmarket, Gainsborough Road, Chilton Court என்ற இடத்தில் வதிவாகவிருந்து காலஞ் சென்ற லற்றிஷியா லொரிண்டா டி சில்வா ஆகிய நபரின் இறுதி விருப்பாவணம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான மரணசாதன அதிகாரப் பத்திரம் மீள்முத்திரையிடப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்ப விடயம் தொடர்பானதாகும்.

**இறந்தவர்**

சொத்துக்கள் நியாயாதிக்க
இல.: T.1873/23
தன்மை: சொத்துக்கள்
நடைமுறை: கிரமமுறை
பெறுமதி: 11,197,388/88

**கனிஷ்க கெஹான் டி சில்வா**
**அல்லது கனிஷ்க கெஹான் விக்ரம ஆராய்ச்சி,**
**இல.: 25/53, குயீன்ஸ் பார்க் ரெசிடென்சீஸ்,**
**கொலொம்பொகே மாவத்தை, நாவல,**
**நுகேகொட.**

**மனுதாரர்**

இந்த அறிவித்தல் பிரசுரமாகி இருபத்தெட்டு நாட்கள் கழிந்த பின்னர், 2016 பெப்ரவரி 19 ஆம் திகதியன்று ஐக்கிய இராட்சியம், இப்ஸ்விச் மாவட்ட மரணசாதன பதிவகத்தின் மேல் நீதிமன்ற மரணசாதன அலுவலரினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட Suffolk IP14 ILL Stowmarket, Gainsborough Road, Chilton Court என்ற முகவரியைச் சேர்ந்த லற்றிஷியா லொரிண்டா டி சில்வா (இறந்தவர்) என்பவரின் தோட்டம் தொடர்பான இறுதி விருப்பாவணம் மற்றும் சொத்துக்களின் மரண சாதனத்தை மீள்முத்திரையிடுவதற்காக சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோளுக்கு அங்கீகாரம் பெறுவதற்காக, குடியியல் நடவடிக்கை கோவையின் 554U பிரிவின் கீழ் (1977 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு) நுகேகொட மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2023 ஜுலை 08 ஆம் நாளாகிய இன்று

**நாணயக்கார அஸோசியேட்ஸ்**
**மனுதாரரின் சட்டத்தரணி**

# அமெரிக்க – இந்திய உறவின் நெருக்கத்துக்கு சீனாவும் ஒரு காரணம்

## வெள்ளை மாளிகை அதிகாரி

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்க விஜயத்தின் பின்னர் இந்திய – அமெரிக்க உறவு முன்னெப்பொழுதுமே இல்லாத அளவுக்கு நெருங்கி வந்திருப்பதாகவும் அமெரிக்க அரசியல் அல்லது வர்த்தக பிரமுகர்கள் புதுடில்லிக்கு அடிக்கடி செல்வது தற்போது வழமையாகி வருவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத ஒரு பைடன் நிர்வாக அதிகாரி ஊடகமொன்றுடன் பேசும் போது தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் ஜூன் 21 முதல் 23 வரை வொஷிங்டனில் கழித்த பொழுதுகளில் ஜனாதிபதியை தினமும் சந்தித்ததாகவும் 22ஆம் திகதி மோடியுடன் பைடன் எட்டு மணித்தியாலங்களை செலவிட்டதாகவும் தமது கூற்றுக்கு ஆதாரம் காட்டும் வகையில் குறிப்பிட்ட அந்த அதிகாரி,

இரு நாடுகளுக்கும் இடையிலான இந்த நெருக்கத்துக்கு சீனா என்ற 'பசை'தான் காரணம் என்று கூற முடியாவிட்டாலும் சீனப் 'பசை'யும் ஒரு காரணம்தான் என்று ஒப்புக் கொண்ட அவர், அமெரிக்க இந்திய உறவென்பது நீடித்து நிலைக்க சீன எதிர்ப்புணர்வு என்பது முக்கிய பங்காற்றவே செய்யுமென்றார்.

'இந்தியாவும் அமெரிக்காவும் சீனாவை ஒரு தேசிய அச்சுறுத்தலாகவே கருதுகின்றன. எனினும் சீன அச்சுறுத்தல்களை சமாளிப்பத்தில் அமெரிக்காவை விட இந்தியாவே முன் நிற்கிறது. டிக்டொக்குக்கு தடை விதித்தமை, சீன தயாரிப்புகளை பயன்படுத்தாமல் கைபேசி வலையமைப்புகளை உருவாக்குதல் போன்ற விஷயங்களை அமெரிக்காவை விட இந்தியாவினால் எளிமையாகக் கையாள முடிகிறது. பொருளாதார வளர்ச்சியை எதிர்காலத்தையும் எடுத்துக் கொண்டால் இந்தியாவுடனான உறவு அமெரிக்காவுக்கு மிகவும் பிரதானமானது' என்று அவர் கூறியுள்ளார்.

# இந்திய – இங்கிலாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கை: அமைச்சர் மட்ட 11ஆவது சுற்று லண்டனில்

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்வதற்கான 11ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை கடந்த 18ஆம் திகதி நிறைவு பெற்றது. 12ஆம் கட்டப் பேச்சுவார்த்தை அடுத்த சில மாதங்களில் நடைபெறும் என்று பின்னர் உடன்பாடு எட்டப்பட்டது.

லண்டனில் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் இந்தியத் தரப்பில் வாணிப மற்றும் தொழில்துறை மத்திய அமைச்சர் பியுஸ் கோயல் மற்றும் வாணிப துறை உயர் அதிகாரிகளும் இங்கிலாந்து தரப்பில் அந்நாட்டுக்கான வர்த்தக தொழில்துறை செயலாளர் கெமி பேர்டனொக் மற்றும் சர்வதேச வர்த்தகத்துக்கான இராஜாங்க அமைச்சர் நிகல் ஹட்டல்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியாவிலும் இங்கிலாந்திலும் விலை வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவதில் மேலும் முயற்சிகளை இந்த உடன்படிக்கை ஊடாக ஏற்படுத்துவது பற்றி பேச்சுகள் அமைந்திருந்தன.

2022ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு வர்த்தகத்தின் பெறுமதி 34 பில்லியன் ஸ்டேர்லிங் பவுண்களாக காணப்பட்டதாகவும் ஓராண்டில் அதன் வளர்ச்சி 10 பில்லியன் பவுண்களாக அமைந்திருப்பதாகவும் இங்கிலாந்து அரசின் உத்தியோகபூர்வ கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

இச் சுற்றுப் பேச்சுவார்த்தை அமைச்சர் மட்டத்தில் நிகழ்ந்து வருவதில் இருந்து, சர்வதேச வர்த்தக பங்காளித்தன்மையில் இந்தியா எவ்வளவு அக்கறை கொண்டுள்ளது என்பதை உணரமுடிவதாக வர்த்தக வட்டாரங்கள் கோடிட்டுக் காட்டியுள்ளன.

## ஏல விற்பனை அறிவித்தல்
## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**கடன் தொடர்பு இலக்கம்: 76865121**

**"பெரக்கும் ஹாட்வெயா அன்ட் கெமிக்கல்ஸ்" பளுகஸ்வங்குவ, பதவி சிறிபுர எனும் முகவரியைச் சேர்ந்த திரு. சுது ஹெட்ட ஹேனலாகே பிரேம சுரங்க தர்மதிலக்க என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.**

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் **2023.05.04**ஆம் திகதி **2331**ஆம் இலக்க வர்த்தமானியிலும் **2023.05.10**ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களையும் நிலமனைகளையும் இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் உரிமம் பெற்ற ஏலதாரர் திரு. **எம்.எச்.ரி. கருணாரத்ன** அவர்கள் **2023.08.29**ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை **11.30** மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

உரிமம் பெற்ற நில அளவையாளர் **என். பி. ஏக்கநாயக்க** தயாரித்த **2012.04.11**ஆம் திகதி **801**ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 02 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி **கிழக்கு** மாகாணம், **திருகோணமலை** மாவட்டம், **பதவி சிறிபுர** பிரதேச செயலாளர் பிரிவின் **காட்டுக்குளம் பற்று கிழக்கு, இல.31 கே** கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள **சேவா ஜனபதய கிராமத்தில்** அமைந்துள்ளதோடு **வடக்கில்** இந்த வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 01ஐயும் **கிழக்கில்** F.C.P. திரி 47இல் குறிப்பிடப்பட்டுள்ள பாதை ஒதுக்கமான காணித்துண்டு இல. 144ஐயும் **தெற்கில்** F.C.P. திரி 47இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு இல. 146ஐயும் **மேற்கில்** F.C.P. திரி 47இல் குறிப்பிடப்பட்டுள்ள இல. 144ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணியானது அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் **இரண்டு றூட்கள் (ஏ0-றூ2-பே0)** அல்லது **பூச்சியம் தசம் இரண்டு பூச்சியம் இரண்டு மூன்று (0.2023)** ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு திருகோணமலைக் காணிப் பதிவகத்தில் LDO/L/01/111 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை**

**ஒதுக்கங்கள்**

1. இக்காணியில் அல்லது காணியின்மேல் காணப்படும் அனைத்துக் கனிமங்களுக்குமான (இவ்வுறுதியில் பெறுமதிமிக்க கல் எனக் குறிப்பிடப்படும்) உரிமையும் அத்தகைய கனிமங்களை அகழ்வதற்கான, தேடுவதற்கான, அங்கு வேலை செய்வதற்கான, எடுத்துச் செல்வதற்கான உரிமையும் அரசுக்கே உரியது.
2. காணி உரிமையாளருக்குக் காணி மீதுள்ள உரித்தானது இவ்வுறுதியின் திகதியில் இக்காணி மீது தற்போது காணப்படும் எந்தவொரு வழி வாய்க்கால் உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்**

1. உரிமையாளர், 1/4 ஏக்கர்கள் மேட்டுநிலம்,................ ஏக்கர்கள் நீர்ப்பாசனக் காணி என் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவின் அலகைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
2. உரிமையாளர், இங்கு 1/4 ஏக்கர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்தை கையுதிர்த்தலாகாது.
3. நிபந்தனை 01இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் உப பிரிவைவிடக் குறைவான பரப்பளவுடைய பிரிக்கப்பட்டவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
4. நிபந்தனை 02இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் ஆகக் குறைந்த அலகிலும் குறைவான பிரிக்கப்படாதவொரு பாகத்திற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக இருத்தலாகாது.
5. இக்காணியோ அதன் எந்தவொரு பகுதியோ கட்டுமானக் காலத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட அல்லது இதன்பிறகு கட்டப்படவுள்ள நீர்ப்பாசன வசதியின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக இருந்தால் அல்லது இதன்பிறகு நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடியதாக மாறினால் நீர்ப்பாசனம் செய்யப்படக்கூடிய பகுதி தொடர்பில் நீர்ப்பாசனக் கட்டளைச்சட்டத்தில் (அத்தியாயம் 453) கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் வரும் எந்தவொரு விதிக்கும் உரிமையாளர் இணங்க வேண்டும்.
6. உரிமையாளர், அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்துமூல அனுமதியையும் உரிய அதிகாரசபையிடமிருந்து உரிமம் ஒன்றையும் பெற்றுக்கொள்ளாது காணியில் அல்லது காணியின் மேல் காணப்படும் கனிமங்களை அகழவோ, தேடவோ, எடுக்கவோ, உரிமை கொண்டாடவோ, விற்கவோ, வேறு விதத்தில் கையுதிர்க்கவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூல முன்னனுமதி இன்றி காணியோ அதன் ஏதேனும் பாகமோ கையுதிர்க்கப்படலாகாது.

ஏலவிலை கூறுவோர் 025 2254118 என்ற தொலைபேசி எண் ஊடாக பதவி பராக்கிரமபுர கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்து தொடர்பான பிற ஆவணங்களை 2023.08.07 ஆந் திகதியிலிருந்து பரிசோதிக்கலாம்.

*இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி*

**திரு. டபிள்யு.எம்.எஸ்.எஸ்.பி. தொரனேகம**
**முகாமையாளர்**
**இலங்கை வங்கி**
**பதவி பராக்கிரமபுர**

திகதி.2023.07.25

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

**2022.12.27** அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு என்.ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2016.11.29ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கங்கள் 2992, 2993, பிரசித்த நொத்தாரிசு டீ. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2015.08.07ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கங்கள் 2923, 2924 பிரசித்த நொத்தாரிசு என்.ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2012.02.01ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 1613, பிரசித்த நொத்தாரிசு என்.ரி. பத்திநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2009.05.12ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 586 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீது 2022.10.19 வரையான வட்டியும் முதலுமாக 16,886,464.64 ரூபாயும் (பதினாறு மில்லியன் எண்ணூற்று எண்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து நான்கு ரூபாய் அறுபத்து நான்கு சதம்) அத்துடன் 2022.10.20ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினெட்டுத் தசம் ஏழு ஐந்து வீதப்படி (18.75%) 10,725,688.85 ரூபாய் (பத்து மில்லியன் எழுநூற்று இருபத்தைந்தாயிரத்து அறுநூற்று எண்பத்தெட்டு ரூபாய் எண்பத்தைந்து சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 74, இல்லான, கிரியுல்ல வீதி, மீரிகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. கருணாரத்ன ஹேரத் முதியன்சேலாகே அல்பிரட் பண்டார மற்றும் திருமதி. சந்திம பாலித்த லியனகே ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த 2016.11.29ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கங்கள் 2992, 2993, 2015.08.07ஆம் திகதிய ஈட்டுமுறி இலக்கங்கள் 2923, 2924, 2012.02.01ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 1613, 2009.05.12ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 586 என்பவற்றின்மீது பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதான மேற்குறித்த 16,886,464.64 ரூபாயையும் (பதினாறு மில்லியன் எண்ணூற்று எண்பத்தாறாயிரத்து நானூற்று அறுபத்து நான்கு ரூபாய் அறுபத்து நான்கு சதம்) அத்துடன் 2022.10.20ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மீரிகம கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

இல. 74, கிரியுல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தையுடைய 'கலேவத்த' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.ஏ.ஜி. அமரசிங்க தயாரித்த 1991.01.03ஆம் திகதிய 6041ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 மற்றும் 4 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹப்பிட்டிகம் கோரளை உடுகஹ புத்தவிலுள்ள மீரிகம நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட புராண மீரிகம கிராம சேவகர் பிரிவிலுள்ள கண்டலம கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அதே காணியின் மீதமுள்ள பாகத்தையும் (5713ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2) கிழக்கில் கிரியுல்ல தொடக்கம் மீரிகம வரையான வீதியையும் தெற்கில் அதே காணியின் மீதமுள்ள பாகத்தையும் மேற்கில் நிமல் சந்திரசிறியின் அதே காணியின் (5713ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1) மீதமுள்ள பாகத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 6041ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஒரு றூட் பதினைந்து தசம் மூன்று ஐந்து பேர்ச்சுகள் (ஏ0-றூ1-பே15.35) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பக்கம் H 182/94இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட காணித்துண்டு உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகே தயாரித்த 2005.12.11ஆம் திகதிய 7780ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

இல. 74, கிரியுல்ல வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தையுடைய 'கலேவத்த' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகே தயாரித்த 2005.12.11ஆம் திகதிய 7780ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு கண்டலம கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் அதே காணியின் மீதமுள்ள பாகத்தையும் (5713ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2) கிழக்கில் (வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான) வீதியையும் தெற்கில் அதே காணியின் மீதமுள்ள பாகத்தையும் மேற்கில் நிமல் சந்திரசிறியின் அதே காணியின் (5713ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1) மீதமுள்ள பாகத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 7780ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஒரு றூட் பதினைந்து தசம் மூன்று ஐந்து பேர்ச்சுகள் (ஏ0-றூ1-பே15.35) பரப்பளவைக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**இலங்கை வங்கி** — **திருமதி கே.பி.கே.ரி.என். அமரசேன**
**மீரிகம மேற்தரக் கிளை** — **சிரேஷ்ட முகாமையாளர்**

# புளத்சிங்கள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஆடித்தேர் திருவிழா!

*(காவத்தை தினகரன் விசேட நிருபர்)*

புளத்சிங்கள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் ஆடித்தேர் திருவிழா ஜூலை 29ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஜூலை 29ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 4ஆம் திகதிவரை அலங்கார பூஜை, சுவாமி உள்வீதி வலம் வருதல் விசேட பூஜைகள் மற்றும் கும்ப பூஜை, அம்மன் புகழ் மாலை, கும்பம் வீதி பிரதக்ஷனம், புஷ்பாஞ்சலி, 1009 நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம், மகேஸ்வர பூஜை, மஹா லக்ஷ்மி திருவிளக்கு பூஜை, சத்துரு சம்ஹார ஹோமம், அலங்கார பூஜை, விசேட வேட்டைத் திருவிழா பிராயச்சித்த அபிஷேகம், என்பன இடம்பெறும்.

அதனை தொடர்ந்து எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு புளத்சிங்கள வெள்ளமுனியன் ஆலயத்திலிருந்து பக்தர்களின் அரோகரா கோஷம் முழங்க மங்கள வாத்தியம் சகிதம் பக்தர்களின் பால்குட பவனி புளத்சிங்கள நகர் வழியாக ஆலயம் வந்தடைந்து தொடர்ந்து அம்பிகைக்கு பாலாபிஷேகம் நடைபெறும். அன்றையதினம் மாலை 7.00 மணிக்கு அம்பிகைக்கு விசேட வசந்த மண்டப பூஜை இடம்பெற்று அலங்கரிக்கப்பட்ட சித்திர தேரில் மங்கள வாத்தியம் முழங்க அம்மன் புளத்சிங்கள தோட்டப்புற, கிராமபுற மக்களுக்கு அருள்பாலித்து ஆலயத்தை சென்றடையும்.

மறுநாள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு புளத்சிங்கள மில்லகந்தை புதிய பிரிவில் (திப்பட்டா) அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து தேர் பவனி பக்தர்களின் பால்காவடி, பறவைக்காவடி சகிதம் புளத்சிங்கள இந்து மாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் மங்கள வாத்தியம் முழங்க புளத்சிங்கள நகர அடியார்களுக்கு அருள்பாலித்து புளத்சிங்கள அதுர நகர் வழியாக புளத்சிங்கள மில்லகந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை வந்தடையும்.

அதனைதொடர்ந்து அன்று பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை பிரயாசித்த அபிஷேகம் என்பன நடைபெறும்.

எதிர்வரும் 07ஆம் திகதி திங்கட்கிழமை பகல் மேற்படி ஆலய குளத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெற்று கொடியிறக்கம் (துவஜா அவரோகணம்) நடைபெற்று இரவு மாவிளக்கு பூஜையும் நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை விசேட பூஜைகள் நடைபெற்று அன்றையதினம் மாலை பூங்காவன திருவூஞ்சல் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அடியார்களின் பைரவர் பொங்கல் பூஜை மற்றும் எட்டியாந்தோட்டை ஆறுமுகம் குழுவினரின் மேளக்கச்சேரியும் நடைபெற்று விழா இனிதே நிறைவு பெறும்.

# வெற்றிடங்கள்

## இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை (சபை)

### மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு

கீழ்க்காணும் பதவிக்காக சபையின் இணையதளத்தில் தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) சட்ட அதிகாரி/ பணிப்பாளர் சபை செயலாளர்**
**தரம் II - (MM-1-1) 01 பதவி**

பதவியுடன் சம்பந்தப்பட்ட விபரங்கள் இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவையின் **www.aerc.gov.lk** இணையதளத்தில் உள்ள Careers இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் மேற்படி இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு 2023.08.10ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை அணுசக்தி ஒழுங்குபடுத்தல் பேரவை**
**977/18, கண்டி வீதி, புளுகஹ சந்தி, களனி.**
**தொ.பே.இல. 011-2987869, 011-2987859, 011-2987857**
**இணையதளம்: www.aerc.gov.lk**






Repeat Your ad For Better Offers

# தங்க நகைகளின் ஏல விற்பனை

**வரையறுக்கப்பட்ட பூஜாபிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்**

- **பூஜாபிட்டிய**
- **அங்கும்புர**
- **முல்லேகம**
- **உடகம**

ஆகிய கிராமிய வங்கிக் கிளைகளில் 2022.04.30ம் திகதி உட்பட அத்தினம் வரை அடகுவைத்து, 2023.08.19 வரை மீட்கப்படாத தங்க நகைகள் 2023.08.19 மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை பூஜாபிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அலுவலக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**கூட்டுறவாளர் பொது முகாமையாளர்**
**வ/ப பூஜாபிட்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
**பூஜாபிட்டிய**

**2023.07.17ம் திகதி**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

LSC

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெலவத்த சீனி தொழிற்சாலைக்கு இரண்டு (02) Complete New Mill Rollers with New Shafts வழங்குவதற்காக தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR - 12496)

இலங்கை, பெலவத்த சீனி தொழிற்சாலைக்கு இரண்டு (02) **Complete New Mill Rollers with New Shafts** வழங்குவதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழ்க் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் **US$ 25 அல்லது LKR 8,000.00** மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி 2023.09.06 ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி 9.00 **மணி முதல்** 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையத்தளத்தில் **(www.lankasugar.lk)** அல்லது பெருந்தோட்ட அமைச்சின் இணையத்தளத்தில் **(www.plantationindustries.gov.lk)** அல்லது **(www.mfa.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலும் விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

| விபரம் | LKR வங்கி கணக்கு |
|---|---|
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலாகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. **தேவையான உருப்படிகள்:**
   - இரண்டு (02) **Complete New Mill Rollers with New Shafts**

3. விலைமனுக்களை 2023.09.07 ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி 14.00 மணி தாமதிக்காது **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04, இலங்கை** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பதிவுசெய்யப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெலவத்த சீனி தொழிற்சாலைக்கு இரண்டு (02) Complete New Mill Rollers with New Shafts வழங்களுக்கான கேள்விமனு"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

4. அனைத்து விலைமனுக்களும் மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையின்றி பணமாக்கக்கூடிய **மனுப் பாதுகாப்பு தொகையுடன் US$ 805 அல்லது LKR 270,000.00** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 011 5 184 184** கைத்தொலைபேசி **: + 94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** மின்னஞ்சல்: **sapumal@lscl.lk).**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,
இலங்கை.

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்

### நீர்ப்பாசன அமைச்சு

CRIWMP

## (தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்)

**விலைக்கோரல் இல.: CRIWMP/PMU/PROC/2023/GOODS/05**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD- CBO), அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC - COLOMBO) மற்றும் குருநாகல், புத்தளம், அநுராதபுரம், வவுனியா, மன்னார், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட நாற்பத்தாறு (46) கமநல சேவை நிலையங்களுக்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை (கணனிகள், அச்சுப்பொறிகள், திறன் தொலைக்காட்சிப் பெட்டிகள் (Smart TV) போன்றன) வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்கான விலைமனுக் கோரல்**

01. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது UNDP இன் தர அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்துடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (GCF) காலநிலை மாற்றத்தினைத் தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட கிரயச் செலவிற்காக நிதியொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பகுதியொன்று மேலேயுள்ள வழங்கலுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.

02. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD- CBO), அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC - Colombo) மற்றும் குருநாகல், புத்தளம், அநுராதபுரம், வவுனியா, மன்னார், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட நாற்பத்தாறு (46) கமநல சேவை நிலையங்களுக்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை (கணனிகள், அச்சுப்பொறிகள், திறன் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றன) வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினைத் தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக செயற்றிட்ட பணிப்பாளர், முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**தகவல் தொழில்நுட்ப உபகரண விநியோகம் (மாவட்ட ரீதியாக)**

| தொ. இல. | அலுவலகம் மற்றும் மாவட்டம் | ALL IN ONE PRINTER | REFILL INK MULTIFUNCTIONAL PRINTER | MONO LASER PRINTERS | LAPTOP COMPUTER | DESKTOP COMPUTER | MINI PCS | SMART TV (INCLUDING INSTALLATION) | 65" SMART INTERACTIVE BOARD AND ACCESSORIES | UPS | POWER EXTENSTION CODES |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | DAD - COLOMBO | NIL | NIL | NIL | 05 | NIL | NIL | NIL | NIL | NIL | NIL |
| 2 | DAD — KURUNEGALA | 01 | NIL | NIL | 08 | 01 | NIL | 08 | NIL | NIL | NIL |
| 3 | DAD - PUTTALAM | 01 | NIL | NIL | 05 | 01 | NIL | 05 | NIL | NIL | NIL |
| 4 | DAD - ANURADHAPURA | 01 | NIL | NIL | 22 | 01 | NIL | 22 | NIL | NIL | NIL |
| 5 | DAD - TRINCOMALEE | 01 | NIL | NIL | 06 | 01 | NIL | 06 | NIL | NIL | NIL |
| 6 | DAD - VAVUNIA | 01 | NIL | NIL | 02 | 01 | NIL | 02 | NIL | NIL | NIL |
| 7 | DAD - MANNAR | 01 | NIL | NIL | 02 | 01 | NIL | 02 | NIL | NIL | NIL |
| 8 | DAD - POLONNARUWA | 01 | NIL | NIL | 01 | 01 | NIL | 01 | NIL | NIL | NIL |
| 9 | DMC -COLOMBO | NIL | 02 | 08 | NIL | 08 | 04 | NIL | 08 | 20 | 13 |
| மொத்தம் | | 07 | 02 | 08 | 51 | 15 | 04 | 46 | 08 | 20 | 13 |

03. ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு மூன்று (03) மாதங்களுக்குள் கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD- CBO), அனர்த்த முகாமைத்துவ நிலையம் (DMC - Colombo) மற்றும குருநாகல், புத்தளம், அநுராதபுரம், வவுனியா, மன்னார், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள சம்பந்தப்பட்ட நாற்பத்தாறு (46) கமநல சேவை நிலையங்களுக்கு தகவல் தொழில்நுட்ப உபகரணங்களை (கணனிகள், அச்சுப்பொறிகள், திறன் தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றன) வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்பன பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தகவுத்திறன் மற்றும் செயல்முறைத் திறனுக்கு அமைவாக கண்டிப்பாக முதலில் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவானது போதுமானளவு பதிலிறுக்கக்கூடிய ஆகக்குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட விலைமனுவை நிர்ணயிப்பதற்காக ஒப்பீடு செய்யப்படும்.

05. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 0112672223 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவும் tendercriwmp@gmail.com என்ற மின்னஞ்சலூடாகவும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

07. 2023-07-28ஆம் திகதி முதல் 2023-08-18ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை) 12,500.00 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமொன்றாக செலுத்திய பின்னர் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளருக்கு வழங்குநரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்து மூலமான கோரிக்கையையும் மற்றும் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்கத்திலுள்ள 12ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

08. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-08-11ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மேற்கூறிய 07ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் இடம்பெறும்.


09. விலைமனுக்கள் திறக்கப்பட்ட நாள் முதல் 60 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் (விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது 88 நாட்கள்) 950,000.00 ரூபா பெறுமதிக்கானதும் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP, செயற்றிட்ட பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டுள்ளதுமான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனு ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி / இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி / காப்புறுதி நிறுவனத்தினால் (வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் தவிர்ந்த) வழங்கப்பட்டுள்ளதுமான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாத விலைமனுப் பிணையொன்றாகவிருத்தல் வேண்டும்.

10. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் உள்ளிட்டு அவைகளின் மேல் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு அதன் பின்னர் அவ்விரு உறைகளையும் ஒரு வெளியக தபாலுறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023-08-21ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் மூடும் நேரத்தின் பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 7ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் உடன் திறக்கப்படும்.

12. கொள்வனவாளர் விலைமனுதாரர்களின் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் என்பவற்றுக்கான எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்பாகவிருக்கமாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**

# பொது அறிவித்தல்

## சன்ஷைன் டீ (பிறைவட்) லிமிட்டெட்

(Reg. No. PV 204)

திருத்தப்பட்டவாறு (கம்பனி சட்டம்) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 242(3)(b) பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட அந்த சட்டத்தின் 242(1) பிரிவின் விதிகளில் உள்ளவாறு இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு-03 இன் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் (Reg. No. PV 204) உடன் இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு-03 இன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (Reg. No. PB 1192) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

கம்பனி சட்டத்தின் 242(1) பிரிவின் கீழ் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் (SST) உடன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (கோர்டன்) இன் கூட்டிணைப்பு சபை தீர்மானத்தின்படி நிறைவேற்றப்பட்டதோடு, கோர்டனின் இருப்பு நிறுத்தப்பட்டு SST தொடர்ந்து இயங்கும் வகையில் SST மற்றும் கோர்டன் பணிப்பாளர்களினால் 2023 ஜூலை 25 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதோடு இதன் விளைவாக கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக இருக்கும்.

இந்த அறிவித்தலின் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக நிறுவனங்களின் நிறுவன பதிவாளர் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை SST மற்றும் கோர்டன் ஆகியன சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இந்த கூட்டிணைப்பானது சட்டத்தின் 244 (2) பிரிவின் விதிகளின்படி 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி செயற்படவுள்ளது.

**சன்ஷைன் டீ (பிறைவட்) லிமிட்டெட் இன்**

**பணிப்பாளர் சபை ஆணைப்படி**
**பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் (பிறைவெட்) லிமிடெட்,**
**நிறுவன செயலாளர்கள்.**
**இல 08 டிக்கேல் வீதி**
**கொழும்பு 08**
2023 ஜூலை 27

# பொது அறிவித்தல்

## கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட்

(Reg. No. PB 1192)

திருத்தப்பட்டவாறு (கம்பனி சட்டம்) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 242(3)(b) பிரிவின் பிரகாரம் கூறப்பட்ட அந்த சட்டத்தின் 242(1) பிரிவின் விதிகளில் உள்ளவாறு இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு-03 இன் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் (Reg. No. PV 204) உடன் இல. 60, தர்மபால மாவத்தை, கொழும்பு-03 இன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (Reg. No. PB 1192) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைப்பு தொடர்பாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

கம்பனி சட்டத்தின் 242(1) பிரிவின் கீழ் சன்ஷைன் டீ (பிறைவெட்) லிமிடெட் (SST) உடன் கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் (கோர்டன்) இன் கூட்டிணைப்பு சபை தீர்மானத்தின்படி நிறைவேற்றப்பட்டதோடு, கோர்டனின் இருப்பு நிறுத்தப்பட்டு SST தொடர்ந்து இயங்கும் வகையில் SST மற்றும் கோர்டன் பணிப்பாளர்களினால் 2023 ஜூலை 25 ஆம் திகதி கையொப்பமிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதோடு இதன் விளைவாக, கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமாக, இருக்கும்.

இந்த அறிவித்தலின் திகதியில் இருந்து 20 வேலை நாட்களின் பின் பதிவுக்காக நிறுவனங்களின் நிறுவன பதிவாளர் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை SST மற்றும் கோர்டன் ஆகியன சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இந்த கூட்டிணைப்பானது சட்டத்தின் 244 (2) பிரிவின் விதிகளின்படி 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி செயற்படவுள்ளது.

**கோர்டன் பிரேசர் போசன்கேட் அன்ட் ஸ்க்ரைன் லிமிடெட் இன்**

**பணிப்பாளர் சபை ஆணைப்படி**
**பிஸ்னஸ் இன்டெலிஜன்ஸ் (பிறைவெட்) லிமிடெட்,**
**நிறுவன செயலாளர்கள்.**
**இல 08 டிக்கேல் வீதி**
**கொழும்பு 08**
2023 ஜூலை 27

# கேள்விகோரல் அழைப்பு

## முதலமைச்சு - சப்ரகமுவ மாகாண சபை

சப்ரகமுவ மாகாண, வைத்தியசாலை மற்றும் நிறுவனங்களில் நிர்மாண மற்றும் பழுதுபார்த்தல் விடயங்களுக்கு தகைமை மற்றும் தகுதி உடைய கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன

- மேலதிக விபரங்கள் www.sg.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து Download இன் கீழ் உள்ள Tender Notice இற்கு பிரவேசித்து முதலமைச்சின் மூலம் பிரசுரிக்கப்பட்டுள்ள 'வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களில் நிர்மாண விடயங்கள் - 2023' மூலம் அல்லது
- www.sg.gov.lk/web/pages/chief-ministry இற்கு பிரவேசித்து Download இன் கீழ் உள்ள Tender Notice இற்கு பிரவேசித்து 'வைத்தியசாலை மற்றும் சுகாதார நிறுவனங்களின் நிர்மாணிப்பு விடயங்கள்- 2023' உடன் தொடர்புகொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.
- இக்கைத்தொழில் பற்றிய மேலதிக தகவல்களை முதலமைச்சிற்கு வருகைதந்து அல்லது கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்திலிருந்து அலுவலக கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படுவோருக்கு 2023.07.28 முதல் 2023.08.17 வரை இலவசமாக மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- 2023.07.28 முதல் 2023.08.17 பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.
- பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் குறிப்பிடப்படும் சப்ரகமுவ மாகாண சபையின் முதலமைச்சிற்கு 2023.08.18 பி.ப. 1.00 இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரநிதியொருவருக்கு சமுகளிக்கலாம்.
- மேற்படி பெறுகை சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை முதலமைச்சு பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**முலமைச்சு பெறகைக் குழு,**
**முதலமைச்சு,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம் - இரத்தினபுரி.**
**தொ.பே. 045-2223298/ 045-2222204**
**2023.07.28ம் திகதி**

பாதுகாப்பு அமைச்சு

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணிப்பாளர் பதவி (தொழில்நுட்பம்) - HM 1-3 (01 பதவி) (மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு)

**தகைமைகள்:**

ப.மா.ஆ. குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பல்கலைக்கழகத்தில் இருந்து பொறியியல்/ விஞ்ஞானம்/ தொழில்நுட்பத்தில் ஓர் பட்டம்

**மற்றும்**

சம்பந்தப்பட்ட துறையில் அல்லது சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் கூட்டு அங்கத்துவத்தின் ஓர் பட்டப்பின்படிப்பு தகைமை (முதுமாணி)

**மற்றும்**

ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை/ நிறுவனம் அல்லது ஓர் நம்பகமான தனியார் நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்தில்" குறைந்த பட்சம் 15 வருட அனுபவம்.

**அல்லது**

பதவியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்.

**மற்றும்**

ஓர் கூட்டுத்தாபனம், நியதிகள் சபை/ நிறுவனம் அல்லது ஓர் நம்பகமான தனியார் நிறுவனத்தில் "முகாமைத்துவ மட்டத்தில்" குறைந்த பட்சம் 15 வருட அனுபவம். (மண்சரிவு இடர் முகாமைத்துவத்தில் அனுபவம் மேலதிக தகைமையாகும்.)

**பொதுவான நிபந்தனைகள்:**

சம்பள அளவு - HM1-3 (ரூ. 86,865 - 15x2270 - 120,915)

சம்பள நிலை - ரூ. 86,865/=

வயதெல்லை - 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்.

உள்ளக தகைமைகளின் அடிப்படையில் உள்ளக விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏனைய அனுகூலங்கள்:**

- ➢ வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு
- ➢ 12% ஊ.சே.நி உள்ளடக்கம் மற்றும் 3% மற்றும் ஊ.ந.நி. நிறுவனத்தினால் பங்களிப்பு செய்யப்படும்.
- ➢ அரசாங்க மற்றும் நிறுவனத்தின் சபையினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய அனுகூலங்கள்
- ➢ தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்களுக்கு நிலையான அரசாங்க நடைமுறையின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் உள்ளடக்கப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சபையின் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் முறையே அவர்களது நிறுவனத்தின் தலைமையூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முழு சுயதரவுகளுடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடனான விண்ணப்பங்கள் 2023 ஒகஸ்ட் 10ம் திகதி அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள முகவரியை அடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு-05.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### 2023 க.பொ.த உயர்தரம், 2023 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கு மரத்தூள் அற்ற காகிதங்கள் (Wood Free Papers) அல்லது வெள்ளை அச்சிடும் காகிதங்களை வழங்கும் பெறுகைக்கான விலைமனு கோரல்

**ஒப்பந்த இல. 04/03/21/2023(G5&AL)**

1. இந்தோனேசிய மரத்தூள் அற்ற காகிதங்கள் அல்லது வெள்ளை அச்சிடும் காகிதங்களை வழங்கும் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய இதனையொத்த காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட கால அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் இல. 011 278 4393 அல்லது 011 278 5219) மற்றும் 2023-08-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-07-27ஆம் திகதி முதல் 2023-08-16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 34,600.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2023-11-15ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் பத்தொன்பது இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவிற்கான (1,970,000.00 இல. ரூபா) விலைமனுக்களை முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்கள் வரையில் (2023-12-15ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9 விலைமனுக்கள் 2023-08-17ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''மரத்தூள் அற்ற வெள்ளை அச்சிடும் காகிதங்கள் வழங்குதல் - ஒப்பந்த இல.: **04/03/21/2023(G5&AL)**" என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. எந்தவொரு விலைமனுவையும் ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் மற்றும் ஒப்பந்தத்திற்கு முன் எந்த நேரத்திலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கவும், அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தப் பொறுப்பையும் ஏற்படுத்தாமல் அல்லது திணைக்கள பெறுகைக் குழுவின் நடவடிக்கைக்கான காரணங்களை பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2023-07-28**

SUNDAY OBSERVER adz தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரு. 800/- (Except Thinakaran Varamanjari) | ரு.1,000/- (Except Thinakaran Varamanjari) | ரு.1,330/- |

- ISLANDWIDE -

SABARAGAMUWA PROVINCE
KEGALLE. 035-5677210, 035-2222427
M.M. Salgado & Sons, Salgado Bakery & Hotel
KEGALLE. 035-4926489, 035-2231716
Red Rose Book Shop, Royal Shopping Complex, Main St,
RATNAPURA. 045-2223883, 0777-221939
Lake House Advertising Centre, No. 88, Main Street,
RATNAPURA. 045-2230730
G.G. Karunaratne, No. 16, Church Road

SOUTHERN PROVINCE
AMBALANGODA. 091-2255744 / 4382034
H.D. Mendis, 96 B 1/1, Galle Road,
AMBALANGODA. 091-2258483, 0779639214
"Royal Book Shop", No. 152, Main Street,
BADDEGAMA. 091 2292263, 091 3926084
Gamage Book Shop,
BENTOTA 034-2270090, 034 2270572
Sumudu News Papers, No. 117, Galle Rd,
ELPITIYA. 091-2290746, 077-2609456
Chandima Groceries,
GALLE. 091-2232733, 091-5627646
New Aradhana Traders, 81, Maha Veediya,
GALLE. 0914-385548/0914-924261
Paranagama Traders, No. 28, P & J City, Gamini Mw,
HAMBANTOTA. 047-2220808, 0716-370337
Misiriya Stores, No. 37, Mahajana Pola,
HIKKADUWA. 091-2277792, 091-2277285
Gallage News Agencies, No. 270A, Galle Rd,
MATARA. 041-2222185, 0414921530
Nilmini Stores, 69, Dharmapala Mawatha,
TANGALLE 047-2240402
No. 158, Matara Road,
WALAHANDUWA 091-2222915
Madola Velendasela, Ihalagoda

UVA PROVINCE
BADULLA 055 2225616, 0777-444678
Lake House Advertising Office, No. 14, Opp. Muthiyangana Clock Tower,
BANDARAWELA. 057-2232145, 071 8269555
Nayana Book Shop, No. 34B,
MONARAGALA. 055-2276397, 055-2276108
No. 19, Siri Ramya Stores,

CENTRAL PROVINCE
KANDY 081-4476362, 081-2222780
Jayakody Agencies, No. 229/A, Peradeniya Road,
GAMPOLA 081-2352379, 081-4485628
No. 24, Nuwara Eliya Road,
GAMPOLA 081-2352346, 081-2354547
Dawasa Centre, No. 14, Station Road,
MATALE 066-2222126
Malaka Traders (Pvt) Ltd. 55-57, Main Street
RATTOTA 066-2255292
S.J. Enterprises, No. 6, T.D. Jayarathne Mw,
UKUWELA 066-2244225
Coranation Hotel & Bakery, No. 09, Kalpitiya Rd,

EASTERN PROVINCE
TRINCOMALEE. 026-2225558
Trincomalee Lake House, 447, Dockyard Road,
TRINCOMALEE. 026-2222962, 071-8175933
A.S. Abdul Hameed, No. 333, Kandy Rd, Andamkulam.
BATTICALOA 065-2226034
Priya Stores, No. 01, Market Road,
KATHTHANKUDY 065-2246983, 0777-435566
A.L.M. Uwais, Old Post Office Building

NORTH CENTRAL PROVINCE
ANURADHAPURA
Swarna Stores, No. 6, Kadapanaha, Anuradhapura.
KURUNDANKULAMA 025-2221411
Matale Junction, Mihintale Road,
POLONNARUWA 027-2222145, 077 1067968
Galle City Stores. Kaduruwela,

NORTH WESTERN PROVINCE
KURUNEGALA. 0372222133, 037-2223790
Sampath Advertising Office, No. 15/6, Mihindu Mw,
CHILAW. 032-2221400, 077 3539397
Sathara Book Shop, Aluthwatta Road,
WAIKKALA. 0714-878252
Kithsiri Stores, Walauwa Junction,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Gayani - 077 7 278 948 / 0112 429 343 / 342 | Piyumi- 0112 429 383 E-mail - classified@lakehouse.lk

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**113**

**சுசூகி கார்கள் விற்பனைக்கு**

CBA-3453 Suzuki Spacia, 2017, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714 5 42 958 . 046260

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAH-3210 Bajaj, 2013, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 0705 999163. 046262

AAH-7979 Bajaj , 2013, threewh ee l கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810 . 046261

---

### 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D எனும் பிரிவின் கீழான விற்பனை

# மக்கள் வங்கி

# பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை

## வெலிகம கிளை (077)

**காணித்துண்டம் :** தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தறை மாநகர சபை எல்லைகளினுள் மாத்தறையின் நான்கு பட்டணங்களினுள் வருகின்ற இல. 411A - மடிஹ-மேற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள மடிஹவில் அமைந்துள்ளதும், அநகாரிக தர்மபால மாவத்தையில் இல. 1004 எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், ராஜபக்ஷ லியத்த எனவழைக்கப்படுவதுமான காணிக்கு உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எம். விமலசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1980.11.14ஆந் தேதிய 2269ஆம் வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய இலக்கம் 05 என்ற காணித்துண்டுக்கு, உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். அபேசிங்ஹ என்பவரினால் மீண்டும் தயாரிக்கப்பட்ட 2011.10.11ஆந் தேதிய 92/2011ஆம் இலக்க வரைப்படத்திலுள்ள 5’ எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம் :** கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து பத்து தசம் பூச்சியம் ஐந்து பேர்ச்சுக்கள் (A-0, R-0, P-10.05), இது மாத்தறை காணிப் பதிவகத்தில் A905/89 எனும் இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அதே இடத்தில் 2023 ஆகஸ்ட் 18ஆந் தேதி மு.ப. 10.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.**

ஏலவிற்பனையானது, கொவிட்-19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:-** 2021.11.26ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.11.16ஆந் தேதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:-** மாத்தறை, காலி வீதியிலிருந்து சுமார் 3.3 கிலோமீற்றர் செல்லும்போது வல்கம சந்தியை அடைய முடியும். அங்கிருந்து சுமார் 600 மீற்றர்கள் பயணிக்கும்போது இந்த ஆதனம் வீதியின் தெற்குத் திசை நோக்கி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:-** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 215, அநகாரிக தர்மபால் மாவத்தை, நூபே, மாத்தறை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**தொலைபேசி: 041 2223437 / 041 4922605**

**தொலைநகல்: 041 2222601**

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286,**
**072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
நீதிமன்ற ஆணையாளரும்
உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,
மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

---

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
### முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

# ஆர்வ வெளிப்பாடு (EOI)

### ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூல இடமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு தேசிய ஏற்றுமதி வர்த்தகச் சின்னத்திற்காக ஒருங்கிணைந்த வர்த்தகச் சின்னத்தை உருவாக்குவதற்கு விளம்பர நிறுவனத்தை தேர்வு செய்தல்

சர்வதேச சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட மூல இடம் ஒன்றாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு தேசிய ஏற்றுமதி வர்த்தகச் சின்னம் மற்றும் விளம்பரத் திட்டம் ஒன்றை (2023 - 2027) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை (**SLEDB**) உருவாக்கியுள்ளது.

இந்த விளம்பரத் திட்டத்தை செயற்படுத்துவதில், தேசிய ஏற்றுமதி வர்த்தகச் சின்னத்திற்கான ஒருங்கிணைந்த வர்த்தகச் சின்னத்தை உருவாக்குவதற்கு விளம்பர நிறுவனம் ஒன்றின் சேவையை பெற ஏற்றுமதி அபிவிருத்தி சபை திட்டமிட்டுள்ளது.

இதன்படி, ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட மூல இடமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு தேசிய ஏற்றுமதி வர்த்தகச் சின்னத்திற்காக ஒருங்கிணைந்த வர்த்தகச் சின்னத்தை உருவாக்குவதற்கு வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டுக்கு (**EOI**) ஏற்றுமதி அபிவிருத்தி சபை அழைப்பு விடுக்கிறது.

**பணி நோக்கம்**

1. குறிப்பு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வர்த்தகச் சின்னத்தின் வர்த்தகச் சின்ன வழிகாட்டல்கள் முழுவதற்கும் உள்ளடக்கத்தை சீரமைக்கும் நிலையான தொகுதி ஒன்றின் ஆய்வு மற்றும் மேம்பாடு. காணொளிகளை மேம்படுத்தல், புகைப்படத் தொகுப்பு, 25 விடய ஆய்வு மற்றும் வெற்றிகரமான ஏற்றுமதியாளர்கள் மற்றும் சர்வதேச கொள்வனவாளர்களின் சாட்சியங்கள் கொண்ட அம்சம் இதில் உள்ளடங்கும்.
2. இந்த உள்ளடக்கத்தில் இலக்கு வைக்கப்படும் பார்வையாளர்களாக இலங்கையில் சொந்தமாக தமது ஆதார மையங்களை நிறுவுவதில் ஆர்வமுள்ள சாத்தியமுடைய முதலீட்டாளர்கள்/ கொள்வனவாளர்கள், சர்வதேச சந்தைகளில் முடிவுகளை எடுக்கும் மூத்த நிறுவன உறுப்பினர்கள் போன்ற சர்வதேச பார்வையாளர்கள் உள்ளனர்.
3. தேர்வு செய்யப்படும் நிறுவனம் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதற்கு ஏற்றுமதி நிறுவன விஜயங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

**தேவையான தகைமை மற்றும் அனுபவம்**

1. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றாக இருத்தல்.
2. இதனையொத்த திறனில் (உள்நாடு அல்லது சர்வதேசம்) குறைந்தது மூன்று (3) ஆண்டுகள் அனுபவம். (கடந்த 5 ஆண்டுகளில் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கடந்த காலத்தின் இதனையொத்த திட்டங்களின் விபரம் மற்றும் பணியில் வெற்றி/ அடைவுகளின் முடிவை சமர்ப்பித்தல் வேண்டும்.)
3. ரூபா 5 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதியில் மேற்கொண்ட இதனையொத்த ஒப்படைகள்.

**விண்ணப்ப நடைமுறை**

ஆர்வமுடைய விளம்பர நிறுவனங்கள் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பெயரில் ரொக்கப்பணம்/ காசோலை 1,500 ரூபா மீளளிக்கப்படாத வைப்பு ஒன்றை செலுத்தி ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவு (6ஆவது மாடி), தலைவரிடம் இருந்து **TOR** இனை வேலை நாட்களில் (மு.ப. 9.00 - பி.ப. 16.00) பெறலாம்.

விளம்பர நிறுவனங்கள் ஆர்வ வெளிப்பாடுகளை (**EOI**) 2023 ஓகஸ்ட் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர் மற்றும் தலைமை நிர்வாகி, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, **NDB-EDB** கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது ஏற்றுமதி அபிவிருத்தி சபை, பெறுகைப் பிரிவில் (6ஆவது மாடி) வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுவதற்கு கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், **“EOI -** தேசிய ஏற்றுமதி வர்த்தகச் சின்னத்திற்கான ஒருங்கிணைந்த வர்த்தகச் சின்னத்தை உருவாக்குவதற்கு விளம்பர நிறுவனம் ஒன்றின் சேவையை பெறல்**”** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

தாமதிக்கும் முன்மொழிவுகள் மற்றும் மின்னணு முறையில் அனுப்பப்படும் முன்மொழிவுகள் ஏற்கப்படமாட்டாது.

ஆர்வமுடைய விளம்பர நிறுவனங்கள் மேலதிக விபரங்களை பெற 0112300721 அல்லது 0112300705-9, 0112300711 நீடிப்பு 268 என்ற தொலைபேசி இலக்கத்தில் சந்தை அபிவிருத்தி பிரிவு/ உதவிப் பணிப்பாளர் யஷிகா மலவத்தையைத் தொடர்பு கொள்ளலாம்.

**தலைவர்**
**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD)**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB-EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 2.**
**தொலைபேசி: 0112300700 தொலைநகல்: 0112300715**
**Web: www.srilankabusiness.com**

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்: **பென்டிசி மார்கடிங் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV 71829

கூட்டிணைப்புத் திகதி: 05.04.2010

பதிவு முகவரி: **இல. 369/15, 6ம், லேன், ஜயமாலபுர, கம்பளை**

**செயலாளர்**

---

### பகிரங்க ஏல விற்பனை

செரட்லொஜிக் பினான்ஸ் பீஎல்சி. நிறுவனத்தில் அடகு வைக்கப்பட்டு, ஜுலை 31ம் திகதிக்கு காலாவதியாகும் மீட்கப்படாத தங்க நகைகள் எமது **இல. 1072, மருதானை வீதி, பொரளை** என்ற இலக்கத்தில் அமைந்துள்ள நிலையத்தில் **ஆகஸ்ட் மாதம் 24, 2023 அன்று காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை** ஏலத்தில் விற்கப்படும்.

#### எமது தங்கக் கடன் நிலையங்கள்

| | |
|---|---|
| பொரளை | ஹெட்டன் |
| காலி | கண்டி |
| கம்பஹா | பதுளை |
| கடவத்தை | மாவனல்ல |
| களுத்துறை | சிலாபம் |
| கொச்சிக்கடை | குருநாகல |
| கொட்டாஞ்சேனை | அனுராதபுரம் |
| கொட்டாவ | கல்னாவ |
| மாத்தறை | தம்புள்ள |
| நிகொழும்பு | எம்பிலிபிட்டிய |
| திஸ்ஸமஹாராம | யாழ்ப்பாணம் |
| இரத்தினபுரி | மாத்தளை |
| வெலிகம | நுவரெலிய |
| வத்தளை | பொலன்னறுவை |
| தமெட்டகொட | கிராண்ட்பாஸ் |

இவ் ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யும் அல்லது பிற்போடும் உரிமை இந்நிறுவனத்திற்கே உரியதாகும்.

---

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:

**நீட்மார்க் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்**

பதிவிலக்கம்: PV 00277432

கூட்டிணைப்பு திகதி: 31.05.2023

பதிவு முகவரி:

**இல. 442/7A, ஹிம்புட்டான லேன், அங்கொடை**

**செயலாளர்**

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

நாரம்மல கள்ளுத் தவறணையின் 2024 வருடத்திற்கான கேள்விப்பத்திரம் 2023 செப்டெம்பர் மாதம் 07ஆம் திகதி மு.ப.10.30 மணி வரையில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

மேலதிக விபரங்களுக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.06.23ம் திகதி 1356 இலக்க வர்த்தமானியை பார்க்கவும்.

**டப்.பீ.சீ.என்.பத்திரன**
**பிரதேச செயலாளர்**
**நாரம்மல**

**2023.07.20**
**பிரதேச செயலகம்**
**நாரம்மல**

---

# பகிரங்க அறிவித்தல்

## இலங்கை உள்ளூர் அலுவலகத்தை மூடுதல்

பாதுகாப்பு அமைச்சின் அரசு சாரா அமைப்புகள் செயலகத்தின் கீழ் பதிவீட்டு இல.L-153804 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் “COME SHARE FOUNDATION” அமைப்பு, சபை 21/08/2021ல் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் அதன் அலுவலகத்தை 30 செப்டெம்பர் 2023ம் திகதியிலிருந்து மூடவுள்ளது என்பதை இத்தால் அறியப்படுத்துகின்றோம்.

**டெ.ரோஸ் மெரடித்**
**இயக்குனர் - COME SHARE FOUNDATION**
**இல.2C, பியடோர்ஸ் இடம்,**
**கொஹுவல, நுகேகொட**
**28 ஜுலை 2023.**

---

# அறிவித்தல்

### வ/ப இலங்கை சுகாதாரத்துறை பணியாளர்களின் அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபையை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2023/2026

**வாக்களிக்கக்கூடிய அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளல்**

2023.07.31ஆம் திகதி முதல் 2023.08.14ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் சங்கத்தின் காரியாலயத்திலும் மற்றும் அங்கத்தவர் சேவை வழங்கும் நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படுவதுடன் பெயர்களில் ஏதாவது திருத்தமோ பட்டியலில் உள்ளடக்கப்பட்ட பெயர்கள் தொடர்பாக ஆட்சேபனைகள் காணப்படுமாயின் 2023.08.14ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் சங்கத்தின் செயலாளருக்கு நேரடியாக கையளிப்பதன் ஊடாகவோ அல்லது கீழ் காட்டப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்பட முடியும்.

**திருத்தப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தல்**

2023.08.17 ஆம் திகதி முதல் 2023.08.18 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியல் மட்டும் சங்கத்தின் பிரதான காரியாலயம் மற்றும் சம்பந்தப்பட்ட அங்கத்தவர் சேவை வழங்கும் நிலையங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

**வேட்புமனு பத்திரம் விநியோகித்தல்**

2023.08.18 ஆம் திகதி முதல் 2023.08.24ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை சங்கத்தின் வேலைநாட்களில் சங்கத்தின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளல்**

2023.08.25 ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரை சங்கத்தின் காரியாலயத்தில் பிரதான/ உதவி தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும். வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கும் போது வேட்பாளர் அல்லது முன்மொழிந்தவர் அல்லது உறுதிப்படுத்தியவர் ஆகியவர்களில் ஒருவரால் மட்டும் சமர்ப்பிக்க முடியும்.

வேட்புமனுக்களை காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்ளல், ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்கள் 2023.08.25. ஆம் திகதி மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை சங்கத்தின் பிரதான காரியாலயத்தில் காட்சிப்படுத்தப்படுவதுடன் வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகள் காணப்படுமாயின் இதே காலப்பகுதியில் பிரதான / உதவி தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**வேட்பாளர்களுக்கான இலக்கம் வழங்குதல்**

நிச்சயிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை காணப்படுமாயின் 2023.08.25 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு சங்கத்தின் காரியாலயத்தில் குலுக்கல்சீட்டு முறையில் வேட்பாளர்களுக்கு இலக்கம் வழங்கப்படும்.

**தேர்தல்**

நிச்சயிக்கப்பட்ட பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை காணப்படுமாயின் மட்டும் தேர்தல் நடைபெறும். இதன்போது கௌரவ தலைவர், உப தலைவர், பொருளாளர். 18-35 வயதுக்கு உட்பட்ட பணிப்பாளர்கள் இருவர். பெண் பணிப்பாளர் ஒருவர் கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து பணிப்பாளர்கள் 6 பேரும் ஏனைய பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்து பணிப்பாளர்கள் 3 பேருமாக பணிப்பாளர்கள் 15 பேரை தெரிவு செய்வதற்காக 2023.10.07.ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மகரகமையில் உள்ள ஜனாதிபதி வித்தியாலயத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் தேர்தல் நடைபெறும். தமது வாக்குகளை அளிக்க வரும் போது அங்கத்தவர்கள் பாஸ் புத்தகத்துடன் கட்டாயமாக தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களாகிய தேசிய அடையாள அட்டையையோ, செல்லுபடியாகக்கூடிய சாரதி அனுமதிப்பத்திரத்தையோ, செல்லுபடியாகக் கூடிய கடவுச்சீட்டையோ மற்றும் தொழிற்துறை சார்ந்த அலுவலக அடையாள அட்டையையோ ஏதாவது ஒன்றை எடுத்து வருமாறும் அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் குறித்த அங்கத்தவர்களுக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது ஏன்பதனையும் அறியத்தருகின்றோம்.

வாக்குரிமையுள்ள கடைசியான அங்கத்தவர் இலக்கமாக அமைவது 12778 ஆகும்.

அரச சட்ட திட்டங்களுக்கு அமையவும் சுகாதாரப் பிரிவின் ஆலோசனைகளுக்கு அமையவும் தேர்தலுக்கான தேவையான அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**செயலாளர். டீ.எம்.ஏஸ் திசாநாயக்க.**
**வ/ப இலங்கை சுகாதாரத்துறை பணியாளர்களின்**
**அபிவிருத்தி சேவை கூட்டுறவு சங்கம்,**
**இல.19. ஹேஜஸ் கோட், கொழும்பு-10.**
**011-2665607**

---

### நிதி அமைச்சு

# அபிவிருத்தி லொத்தர் சபை

# தற்போதுள்ள 100 லொத்தர் விற்பனை நிலையங்களில் மீள் வர்த்தகச் சின்னமிடல்

### விலைமனு இல:- DLB/PRO/2023/23

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள லொத்தர் விற்பனை நிலையங்களில் மீள் வர்த்தகச் சின்னமிடுவதற்காக ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் கனிஷ்ட பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறைக்கு அமைய விலைக்கேட்பு நடத்தப்படும்.

03. மீளளிக்கப்படாத ஆவண கட்டணமாக (15% வெட் உடன்) 2,300.00 ரூபாவை செலுத்தி 2023.07.28 ஆம் திகதி தொடக்கம் 2023.08.17 ஆம் திகதி வரை (வேலை நாட்களில்) மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இல் அபிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வழங்குநர் மூலம் கோரிக்கை கடிதத்தை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம் என்பதோடு அதனை கட்டணம் இன்றி பரீட்சிக்க முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

04. விலைமனுக்கள் விலைமனு ஆவணத்தின்படி விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணத்தில் கோரப்பட்டவாறு விலைமனுதாரர்கள் அனைத்து விரிவான விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.

06. விலைமனு நிபந்தனைகளின்படி விலைமனுக்களை 2023.08.18 ஆம் திகதி பி.ப. 02.30 தாமதிக்காது தலைவர், கனிஷ்ட பெறுகை குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 2 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் “தற்போதுள்ள 100 லொத்தர் விற்பனை நிலையங்களில் மீள் வர்த்தகச் சின்னமிடல்” என்று குறிப்பிட வேண்டும் என்பதோடு குறித்த திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

07. விலைமனுக்களை 2023.08.18 ஆம் திகதி பி.ப. 02.30 அல்லது அதற்கு முன்னர் தலைவர், கனிஷ்ட பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, இல 356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். விலைமனுக்களை ஏற்பது 2023.08.18 ஆம் திகதி பி.ப. 02.30க்கு நிறைவடையும் என்பதோடு விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

08. www.dlb.lk என்ற தேசிய லொத்தர் சபை இணையதள முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பார்க்க முடியும்.

**தலைவர்,**
**கனிஷ்ட பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 02.**
**தொ.: 011 4824824**
**www.dlb.lk**

**2023.07.28**

# சொந்த மண்ணில் மோசமான தோல்வியுடன் டெஸ்ட் தொடரை இழந்தது இலங்கை அணி




பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் மோசமான தோல்வியை சந்தித்த இலங்கை அணி தொடரையும் 0–2 என முழுமையாக இழந்தது.

கொழும்பு, எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியின் நான்காவது நாளான நேற்று (27) ஆரம்பத்திலேயே இலங்கை அணி 410 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்கும் நெருக்கடியோடு துடுப்பெடுத்தாட வந்த இலங்கை வீரர்கள் முக்கிய இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

குறிப்பாக இடது கை சுழற்பந்து வீச்சாளர் நோமன் அலி இலங்கை துடுப்பாட்ட வீரர்களை திக்குமுக்காடச் செய்தார்.

ஆரம்ப விக்கெட்டுக்காக 69 ஓட்ட இணைப்பாட்டத்தை பெற்ற நிலையில் நிஷான் மதுஷ்க 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நிதானமாக ஆடி வந்த திமுத் கருணாரத்னவும் 41 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

மத்திய வரிசையிலும் எவரும் நின்றுபிடித்து ஆடவில்லை. அஞ்சலோ மத்தியூஸ் மாத்திரம் ஒருமுனையில் விக்கெட்டை காத்து துடுப்பெடுத்தாட மறுமுனை விக்கெட்டுகள் மளமளவென்று பறிபோயின.

இதனால் இலங்கை அணி 67.4 ஓவர்களில் 188 ஓட்டங்களுக்கே சுருண்டது. மத்தியூஸ் 127 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 63 ஓட்டங்களை பெற்றார். எனினும் மத்திய வரிசையில் வேறு எவரும் 20 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை. அதிலும் கடைசி மூன்று விக்கெட்டுகளும் டக் அவுட் ஆகி வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது நோமன் அலி 23 ஓவர்களில் 70 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். நயீம் ஷா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 166 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி இலங்கை பந்துவீச்சாளர்களை முழுமையாக திக்குமுக்காடச் செய்தது.

அந்த அணி 134 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 576 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. ஆரம்ப வீரர் அப்துல் ஷபீக் இரட்டைச் சதம் (201) பெற்றதோடு அகா சல்மான ஆட்டமிழக்காது 132 ஓட்டங்களை பெற்றார்.

இது இலங்கை அணி சொந்த மண்ணில் பெற்ற மிக மோசமான தோல்வியாக அமைந்தது. இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 1993 ஆம் ஆண்டு இதே எஸ்.எஸ்.சி மைதானத்தில் இன்னிங்ஸ் மற்றும் 208 ஓட்டங்களால் தோல்வி அடைந்ததே மோசமாக இருந்தது.

# நடத்தை விதியை மீறிய அசித்தவுக்கு தண்டனை




பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தின்போது ஐ.சி.சி நடத்தை விதியை மீறியதற்காக இலங்கை வேகப் பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோவை ஐ.சி.சி கண்டித்துள்ளது.

“சர்வதேச போட்டி ஒன்றின்போது துடுப்பாட்ட வீரரை ஆட்டமிழக்கச் செய்த பின் அவமதிக்கும் அல்லது ஆத்திரத்தை தூண்டக் கூடிய மொழி, செயல் அல்லது செய்கைகளை பயன்படுத்துவது” தொடர்பான ஐ.சி.சி ஒழுக்க விதியின் நிலை 1 ஐ பெர்னாண்டோ மீறியதாக கண்டறியப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் சவூத் ஷகீலை ஆட்டமிழக்கச் செய்த பின் அசித்த பெர்னாண்டோ அவருக்கு அருகில் சென்று முறையற்ற வகையில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தனது தவறை ஒப்புக்கொண்டதை அடுத்து பெர்னாண்டோவுக்கு ஒரு தகுதி இழப்புப் புள்ளி வழங்கப்பட்டுள்ளது. 24 மாத காலத்திற்குள் வீரர் ஒருவர் நான்கு அல்லது அதற்கு மேல் தகுதி இழப்பு புள்ளிகளை பெற்றால் அது போட்டித் தடை விதிக்கப்படும் இடைநிறுத்தப் புள்ளியாக மாற்றப்படும்.

இரண்டு இடைநிறுத்தப் புள்ளிகள் வீரர் முதலில் எதிர்கொள்ளும் ஒரு டெஸ்ட் அல்லது இரண்டு ஒருநாள் அல்லது இரண்டு டி20 போட்டித் தடைக்கு சமமாகும்.

# ஆசிய விளையாட்டு போட்டி: இலங்கை ரக்பிக்கு அனுமதி



உலக ரக்பி நிறுவனத்தால் இலங்கைக்கு தடை நீடித்தபோதும் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு போட்டிக்கு இலங்கை ரக்பி செவன் அணி பங்கேற்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ரக்பி சம்மேளனம் அன்றி தேசிய ஒலிம்பிக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அணியுடன் தேசிய ஒலிம்பிக் குழு அல்லது ஆசிய ஒலிம்பிக் குழுவின் கொடியின் கீழ் இலங்கை பங்கேற்பதற்கு உலக ரக்பி நிறுவனம் அனுமதி அளித்துள்ளது.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு தலைவர் சுரேஷ் சுப்ரமணியமுக்கு உலக ரக்பியின் தலைமை சர்வதேச உறவுகள் மற்றும் பங்கேற்பு அதிகாரி டேவிட் கரிகி எழுதிய கடிதத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி சீனாவின் ஹாங்சூ நகரில் எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறவுள்ளது.

# ஆசிய விளையாட்டில் இலங்கையில் 96 பேர்



சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கையிலிருந்து 96 வீரர்கள் கொண்ட குழு பங்கேற்க உள்ளது. 62 வீரர்களும், 34 வீராங்கனைகளும் உள்ளடங்கிய இந்த அணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் 40 விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளதுடன் இதில் இலங்கை வீரர்கள் 20 விளையாட்டு நிகழ்ச்சிகளில் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர, அதிகாரிகள் உட்பட 57 பேருக்கு இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் பங்கேற்க விளையாட்டுத் துறை அமைச்சர் அனுமதி அளித்துள்ளார். அவர்களில் 20 முகாமையாளர்கள், 24 பயிற்சியாளர்கள் 6 பேர் கொண்ட மருத்துவக் குழு மற்றும் 7 தேசிய ஒலிம்பிக் குழு அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

### உலகக் கிண்ண தகுதிகாணில் பங்கேற்க

# இலங்கை அணிக்கு கண்டிப்பான நிபந்தனையுடன் பிஃபா அனுமதி




உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி யெமனை வரும் ஒக்டோபர் மாதம் எதிர்கொள்ளவுள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான அணிகளை பிரிக்கும் குலுக்கல் முறை நேற்று மலேசியாவில் இடம்பெற்றபோதே இலங்கை அணியின் போட்டி விபரம் உறுதியானது.

இதன்படி இலங்கை அணி வரும் ஒக்டோபர் 12 மற்றும் 17 ஆம் திகதிகளில் யெமன் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதன் முதல் போட்டி கட்டாரில் நடைபெறவிருப்பதோடு இரண்டாவது போட்டி இலங்கையில் நடைபெறவுள்ளது.

சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் (பிஃபா) தடைக்கு முகம்கொடுத்திருக்கும் இலங்கை உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் பங்கேற்க கண்டிப்பான நிபந்தனையுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை அணி வரும் ஒக்டோபர் 12 ஆம் திகதி தனது முதல் தகுதிகாண் போட்டியில் ஆடுவதற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னதாக இலங்கை கால்பந்து சம்மேளனம் புதிய நிர்வாகத்தை தேர்வு செய்வதற்கு தேர்தலை நடத்த வேண்டும் என்று பிஃபா நிபந்தனை விதித்துள்ளது.

இல்லாவிட்டால் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆட அனுமதி மறுக்கப்படும் என்று கண்டிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தேர்தலுக்காக விளையாட்டுத் துறை அமைச்சர் மூன்று பேர் கொண்ட குழுவை நியமித்துள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

மூன்றாம் தரப்பின் தலையீட்டை காரணம் காட்டி கடந்த ஜனவரி 21 ஆம் திகதி இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு பிஃபா தடை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# பத்து இடங்களில் பிரபாத் ஜயசூரிய



சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸிலின் டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இலங்கை அணியின் இடது கை சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய முதல் முறையாக முதல் 10 இடங்களுக்குள் முன்னேற்றம் கண்டுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவர் மொத்தம் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்திய நிலையில் தரவரிசையில் ஏழு இடங்கள் முன்னேறி ஏழாவது இடத்தை பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் மூலம் இலங்கை அணிக்காக டெஸ்ட் அறிமுகம் பெற்ற பிரபாத் ஜயசூரிய இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இருப்பதோடு மொத்தமாக 57 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். டெஸ்ட் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்தர் அஷ்வின் முதலிடத்தில் நீடிக்கிறார்.

# அப்பாஸ், ஹமாஸை சந்தித்தார் எர்துவான்



துருக்கி ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவான் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் மற்றும் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியேவை அங்காராவில் கடந்த புதன்கிழமை (26) சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பலஸ்தீனத்திற்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தமது அரசு முடிந்த அனைத்தையும் செய்யும் என்று எர்துவான் தெரிவித்துள்ளார்.

இரு தலைவர்களுடனும் அவர் மூடிய அறையிலேயே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கு இடையே ஒற்றுமை இல்லாதது அமைதியை குலைக்க நினைப்பவர்களுக்கே சாதகமாக அமையும் என்று எர்துவான் கூறியதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீன மக்களுக்கு எதிரான தாக்குதல்கள், குறிப்பாக கடும்போக்கு இஸ்ரேலிய அரசை எவ்வாறு எதிர்கொள்வது, பலஸ்தீன ஒற்றுமையை வலுப்படுத்துவது பற்றி இந்த சந்திப்பில் பேசப்பட்டதாக இந்த சந்திப்புடன் தொடர்புபட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியமானதாக கருதப்படுகிறது.

இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் காசா பகுதியை ஹமாஸ் அமைப்பு கைப்பற்றியதை அடுத்தே பலஸ்தீனர்களுக்கு இடையே உட்பிளவு ஏற்பட்டது.

அது தொடக்கம் ஜனாதிபதி அப்பாஸ் தரப்பு மற்றும் ஹமாஸ் இடையே இதுவரை நல்லிணக்கம் எட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மறுபுறம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் இந்த வாரம் துருக்கி விஜயம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்தபோதும் அவர் அவசர சத்திரசிகிச்சை மேற்கொண்டதால் அந்த விஜயம் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# நைகர் நாட்டில் ஆட்சியை கைப்பற்றியது இராணுவம்

## ஜனாதிபதி சிறைப்பிடிப்பு



மேற்கு ஆபிரிக்க நாடான நைகரில் இராணுவம் ஆட்சியை கைப்பற்றி அந்நாட்டு ஜனாதிபதி முஹமது பசூமை சிறைப்பிடித்துள்ளது.

தேசிய தொலைக்காட்சியில் கடந்த புதன்கிழமை இரவு தோன்றிய படையினர், அரசியலமைப்பு ரத்துச் செய்யப்பட்டதாகவும், அனைத்து நிறுவனங்களும் தற்காலிகமாக மூடப்படுவதாகவும், நாட்டின் எல்லைகள் மூடப்பட்டதாகவும் அறிவித்துள்ளனர்.

“பாதுகாப்பு நிலைமையில் ஏற்பட்டுள்ள சரிவு, மோசமான சமூக மற்றும் பொருளாதார நிர்வாகத்தை தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது” என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகள் இதில் தலையிட வேண்டாம் என்றும் இராணுவம் கேட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஜனாதிபதி பாதுகாப்புப் படையைச் சேர்ந்த துருப்புகளால் ஜனாதிபதி பசூம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆபிரிக்க ஒன்றியம், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா இச்செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.


மேற்கு ஆபிரிக்காவில் இஸ்லாமியவாத ஆயுததாரிகளுக்கு எதிரான போரில் மேற்குலகின் நெருங்கிய நண்பராக பசூம் உள்ளார். அண்மைய ஆண்டுகளில் ஜிஹாதிக்களின் எழுச்சி, அண்டை நாடுகளான மாலி மற்றும் புர்கினா பாசோவிலும் இராணுவ சதிப்புரட்சிக்கு காரணமானது.

இந்த இரு நாடுகளின் இராணுவத் தலைவர்களும் அந்த நாடுகளின் முன்னாள் காலனித்துவ சக்தியான பிரான்ஸுடன் உறவை துண்டித்திருப்பதோடு நைகரும் பிரான்ஸின் முன்னாள் காலனி நாடாகும்.

நைகரில் அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய அரசு குழுக்களுடன் தொடர்புபட்ட தரப்பினர் தொடர்ந்து இயங்கிவருகின்றனர். 2021 ஆம் ஆண்டு ஜனநாயக முறையில் தெரிவான ஜனாதிபதி பசூம், பிரான்ஸ் மற்றும் மேற்கு நாடுகளின் நெருங்கிய கூட்டாளியாக செயற்பட்டு வருகிறார்.

1960இல் பிரான்ஸிடம் இருந்து சுதந்திரம் பெற்றது தொடக்கம் நைகரில் நான்கு இராணுவ சதிப்புரட்சிகள் இடம்பெற்றிருப்பதோடு பல தடவைகள் இதற்கான முயற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

# குவைட் நாட்டில் ஐவருக்கு தூக்கு



குவைட்டில் நேற்று (27) ஐவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதில் 26 பேர் கொல்லப்பட்ட 2015 ஆம் ஆண்டின் இஸ்லாமிய அரசு குழுவின் தற்கொலை தாக்குதலுடன் தொடர்புபட்ட நபர் ஒருவரும் தூக்கிலிடப்பட்டுள்ளார்.

குவைட்டின் மத்திய சிறையில் ஐவருக்கு எதிராக மரண தண்டனை செயற்படுத்தப்பட்டதாகவும் பெரும்பாலானவர்கள் கொலை குற்றவாளிகள் என்றும் அரச வழக்கறிஞர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 2015 ஆம் ஆண்டு தலைநகரில் உள்ள ஷியா பள்ளிவாசல் ஒன்றில் வெள்ளிக்கிழமை தொழுகையின்போது நடத்தப்பட்ட தாக்குதலின் பிரதான குற்றவாளியான அப்துர்ரஹ்மான் ஷபா சவுத்தும் அடங்குகிறார். இது குவைட் வரலாற்றில் மிக மோசமான தாக்குதலாக இருந்தது.

இதில் போதை கடத்தல் குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவரும் தூக்கிலிடப்பட்டுள்ளார்.

குவைட்டில் கடந்த நவம்பரிலும் ஏழு பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட பின் மரண தண்டனை வழங்கப்படுவது இது முதல் முறையாகும். குவைட்டில் போதைக் கடத்தல் மற்றும் கொலை குற்றவாளிகளுக்கே பரவலாக மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 28ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D எனும் பிரிவின் கீழான விற்பனை**

# மக்கள் வங்கி

## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை

### வெலிகம கிளை (077)

**காணித்துண்டம்:** தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளேயில் வெலிப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் வெலிகம பிரதேச சபை எல்லைகளினுள் இல. 333 - வறக்காபிட்டிய - வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறக்காபிட்டிய அமைந்துள்ளதும், கமகேவத்த எனவழைக்கப்படும் காணித்துண்டு 5 மற்றும் காணித்துண்டு 4 என்பவற்றை அடுத்தடுத்துள்ள "B" எனும் காணித்துண்டின் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ.எச். கொடிப்பிலி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2021/01/24ஆந் தேதிய 2/12ஆம் இலக்க வரைபடத்தின் குறித்துரைக்கப்பட்டதுமான இல. 4A எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்:** கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் பாதை வழியுரிமையுடன் சேர்த்து முப்பத்தெட்டு தசம் ஆறு பேர்ச்சுக்கள் (A-0, R-0, P-38.6), இது மாத்தறை காணிப் பதிவகத்தில் N115/80 எனும் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், அதே இடத்தில் 2023 ஆகஸ்ட் 18ஆந் தேதி பி.ப. 1.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.**

ஏலவிற்பனையானது, கொவிட்-19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டு நெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:-** 2021.11.26ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியையும் 2021.11.16ஆந் தேதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:-** மாத்தறை, அக்குரஸ்ஸ வீதியிலிருந்து தெலிஜ்ஜவில சந்திக்குச் செல்லும் போது சொல்லப்பட்ட சந்தியிலிருந்து சுமார் 6.3 கிலோமீற்றர் தூரத்தில் வெலிகம வீதியில் வெலிஹிந்த சந்தியை அடைய முடியும். அச்சந்தியின் இடப்பக்கமாகச் செல்லும் வறக்காப்பிட்டிய வீதியில் சொல்லப்பட்ட சந்தியிலிருந்து சுமார் 1.9 கிலோமீற்றர் பயணித்து, தர்மதாச மாவத்தையை நோக்கித் திரும்பி, அங்கிருந்து சுமார் 300 மீற்றர்கள் சென்று வீதியின் இடப்பக்கமாகத் திரும்பி அங்கிருந்து சுமார் 50 மீற்றர்கள் செல்லும்போது அவ்வீதியில் 12 அடி வீதியொன்று காணப்படும். அந்த வீதியில் சுமார் 25 மீற்றர்கள் சென்றதும் அவ்விடத்தில் உரிய ஆதனத்தை நீங்கள் காண முடியும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:-** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுபடுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இல. 215, அநகாரிக தர்மபால மாவத்தை, நூபே, மாத்தறை எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**தொலைபேசி: 041 2223437/ 041 4922605** **தொலைநகல்: 041 2222601**

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286,**
**072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
நீதிமன்ற ஆணையாளரும் உரிமம்பெற்ற
ஏலவிற்பனையாளரும், மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

# இலங்கை புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவைக்கு 60 எண்ணிக்கையிலான 10 டன் கொள்ளளவு டிராக் இணைப்புகள் (RATCHET TYPE & PINION MANUALLY OPERATED) வழங்குவதற்கான கொள்முதல்**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்முதல் குழு (மேஜர்) தலைவரினால் சர்வதேச போட்டி விலைகோரலின் அடிபடையில் இலங்கை புகையிரத சேவைக்கு, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10. 60 டன் திறன் கொண்ட ட்ராக் இணைப்புகளை (Ratchet Type & Pinion Manually இயக்கப்படும்) கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் 2023.09.12 ஆம் திகதி பி.ப.02.00 (இலங்கை நேரப்படி) மணிக்கு மூடப்படும்.

03. மீள்ச் செலுத்தப்படாத ரூ.6,875/- ஆவணக் கட்டணத்தினை செலுத்தி பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே 2023.09.11 ஆம் திகதி பி.ப.3.00 மணி வரை (இலங்கை நேரப்படி) மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04. மனுதாரர்கள் அவர்களின் விலைமனுவின் ஒரு பகுதியாக ரூ.250,000/- (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்) மனுப் பாதுகாப்பு பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிந்தவுடன் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம்.

06. மூடப்பட்ட மனுக்கள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (பெறுகை),**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**

07. மனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10. அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்ய முடியும்.

பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை)
உப பெறுகை திணைக்களம்,
ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.

| | | |
|---|---|---|
| தொலைபேசி இல | : | **94(11) 2438078** அல்லது **94(11) 2436818** |
| தொலைநகல் இல | : | **94(11) 2432044** |
| மின்னஞ்சல் | : | **tender2@railway.gov.lk,** |
| இணையத்தளம் | : | **www.railway.gov.lk** |

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்,
பெறுகை இல.: SRS/F. 7927

# இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6476(MP) | Two ( 02 ) Nos. Prime Movers (Auto Transmission Model) | 600,000.00 | 12,500.00 | 24-08-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/23/PT/14/034 | 08 Nos. Laptop Computers | 39,000.00 | 1,000.00 | 17-08-2023 மு.ப. 10.00 மணி |
| CES/LP/23/PT/10/023 | 200 Nos. of Single Line Telephone Instrument | 20,000.00 | 1,000.00 | 17-08-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/04/057 | Two Types of Bilge Pumps Engine – Driven and Motor – Driven | 60,000.00 | 1,000.00 | 17-08-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜுலை 28ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்கள்: 2381652, 2470443**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**

# சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி செயற்றிட்டம்

**கிழக்குக் கொள்கலன் முனையத்தில் (ECT) (J-17, J-18 and J-19) ஜயா கொள்கலன் முனையத்திற்கு (JCT –V) மூன்று எண்ணிக்கையான கப்பலிலிருந்து கரைக்கு (STS) மாற்றும் பாரந்தூக்கிகளின் பெறுகை**


1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள சேவைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்வி கோரல் முறை | கேள்விப் பிணைத் தொகை | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள் ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| EW/08/ PT/235/A/2023/1 | Procurement of Transferring of three (03) Nos. Ship to Shore (STS) Cranes at East Container Terminal (ECT) (J-17, J-18 and J-19) to Jaya Container Terminal (JCT –V) | சர்வதேச போட்டி ரீதியிலான விலைக் கோரல் | 8.5 மில்லியன் இல. ரூபா | 100,000.00 இல. ரூபா | 2023-09-11 பி.ப. 2.00 மணி |

**விலைமனுதாரர்களுக்கான அறிவுரைகள்:**

| | |
|---|---|
| 1. | 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 2. | குறைந்தபட்சம் கப்பலிலிருந்து கரைக்கு (STS) ஒவ்வொரு கப்பலினதும் 650 மெ. தொன்னுக்குக் குறையாத கிரென்றி பாரந்தூக்கி மற்றும் அதில் குறைந்தபட்சம் 05 எண்ணிக்கையான கப்பலிலிருந்து கரைக்கு (STS) 1300 மெ.தொன்னுக்குக் குறையாத கிரென்றி பாரந்தூக்கி சகிதம் உலகளாவிய ரீதியில் கடந்த ஐந்து (05) வருடங்களில் கனரக பாரந்தூக்கி (STS பாரந்தூக்கி) கப்பல்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு கப்பல்களுக்கும் குறைவான பாரத்துடன் கிரென்றி பாரந்தூக்கிகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக, குறைந்தபட்சம் 25 கப்பல்களை கரைக்குக் கொண்டுவருவதில் விலைமனுதாரர் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| 3. | ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, பணிப்பாளர் (தொழில்நுட்பம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0094 11-2326523/ தொலைநகல்: 0094 11-2440754 மின்னஞ்சல்: chandra@slpa.lk என்பதுடன் விலைமனு ஆவணங்களை 2023-08-02ஆம் திகதி முதல் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இதே முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று கொழும்பு-01, இல. 45. லேடன் பஸ்தியன் மாவத்தை, இலங்கை துறைமுக அதிகார சபை, மத்திய நூலகத்தில் 2023-08-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும். |
| 4. | ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-09-11ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00) மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை 100,000.00 ரூபா (ரொக்கப் பணமாக) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி மற்றும் மேற்கூறப்பட்ட முகவரியில் உள்ள பொறியியல் வேலை கிளைக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். |
| 5. | முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியுடனான விலைமனுக்களை விலைக்கோரல் முடிவுறுத்தப்படும் நேரமான 2023-09-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிந்தாமல் தலைவர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC), துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு விலைமனுதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தலின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். |

**தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
Gayani - 077 7 278 948 / 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

MINISTRY OF TRANSPORT & HIGHWAYS

## ROAD DEVELOPMENT AUTHORITY

### INVITATION FOR BIDS

| Contract Name |
|---|
| Improvements to Palathoppur - Seruwila Road (B347) Section (0 + 330 - 1 + 050) km |

Bids are hereby invited for above works under the National Competitive Bidding procedure. Interested bidders are requested to refer the RDA and Ministry of Highways web page on **www.rda.gov.lk** from 26.07.2023 to 02.08.2023.

---

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

**விலைமனு ஏற்றுக்கொள்ளும் காலத்தை நீடிப்பதற்கான அறிவித்தல்**

## குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு ஒரு வருட காலத்திற்கு 'VX Rail Cluster server system' 04 தொகுதிகளின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் வழங்குவதற்காக சேவை வழங்குநர் ஒருவரை தெரிவு செய்தல்

**ஒப்பந்த இல.: (IFB) : DIE/PRO/07/2017/36 – VOL - III**

1. மேற்படி கொள்முதலுடன் தொடர்புடைய 2023.07.07ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் விலைமனு ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2023 ஆகஸ்ட் மாதம் 07ஆம் திகதி (திங்கட்கிழமை) (2023.08.07) வரை நீடிக்கப்பட்டுள்ளது. முன்னர் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் ஏனைய தகவல்கள் எமது உத்தியோகபூர்வ இணைய தளத்தில் **(www. immigration.gov.lk)** பெற்றுக்கொள்ள முடியும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2023.08.07 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

   தலைவர்
   திணைக்கள கொள்முதல் குழு,
   05 ஆம் மாடி,
   குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,
   "சுஹுறுபாய", 05 ஆம் மாடி,
   ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.

3. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு மீளளிக்கப்படாத ஐந்தாயிரம் (ரூ. 5000.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, "சுஹுறுபாய", 5ஆம் மாடி, "B" பகுதியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2023.08.04ஆம் திகதி வரை திங்கள் முதல் வெள்ளி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழி மூலமான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**05 ஆம் மாடி,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**"சுஹுறுபாய",**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

---

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

## கேள்வி அழைப்பு

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான பொருட்கள், தொழிலாளர்கள் மற்றும் இயந்திரங்களை வழங்குதல்

1. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) இரத்தினபுரி பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டம்) பிரிவின் பெறுகைக் குழுவின் தலைவரால் பிரதம பொறியியலாளர் (செயற்றிட்டம்) அலுவலகத்தின் மூலம் மேம்படுத்தப்படும்.
   - ❖ அயகம குருலேகம வீதிக்கான ABC கொள்வனவு செய்தல்
   - ❖ இடங்கொட அயகம வீதிக்காக 6"x9" கல் கொள்வனவு செய்தல்
   - ❖ குருகம்மோதர உடோவிட்ட வீதிக்கான ABC கொள்வனவு செய்தல்
   - ❖ நேரடி தொழிலாளர் செயற்றிட்டத்திற்காக, வாடகை அடிப்படையில் பெகோலோடர் (JCB), 10 தொன் ரோலர் (10 Ton Roller), மோட்டர் கிரேடர் (Motor Grader), வெகர் (Vacker), 01 தொன் ரோலர் (01 Ton Roller) ஆகிய இயந்திரங்களை பெற்றுக் கொள்ளல்.
   - ❖ அயகம குருலேகம வீதி திட்டத்தின் நிர்மாணங்களுக்கு தடையாக உள்ள கல், கட்டுப்பாட்டு நிலையின் கீழ் வெடிக்கவைத்து 6" 9" அளவில் உடைத்தல்.
   - ❖ நேரடி தொழிலாளர் செயற்றிட்டத்திற்காக, வாடகை அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக் கொள்ளல்.
   - ❖ நேரடி தொழிலாளர் செயற்றிட்டத்திற்காக, CSS-1 மற்றும் CRS-1 கொள்வனவு செய்தல்
   - ❖ பல்லேபெத்த மெதகங்ஓய வெலிகெபொல வீதிக்காக Shoulder Material கொள்வனவு செய்தல்
   - ❖ முல்லெதியாவல கமகந்த வீதி மற்றும் ஏனைய நேரடி தொழிலாளர் செயற்றிட்டத்திற்காக வாடகை அடிப்படையில் பெகோ, லோடர் (JCB), 10 தொன் ரோலர் (10 Tone Roller), மோட்டர் கிரேடர் (Motorgrader) டிரக்டர் பவுசர் (Tractor bowser), Air Compressor, 01 கியூப் வாகனம் (01 Cube Tipper) ஆகிய இயந்திரங்களை பெற்றுக் கொள்ளல்.
   - ❖ முல்லெதியாவல கமகந்த வீதிக்கான ABC, மணல், எஸ்போட் (Asphalt) கொள்வனவு செய்தல்.
   - ❖ முல்லேதியாவல கமகந்த வீதிக்கான எஸ்போல்ட் (Asphalt) பதித்தல் மற்றும் கெட்டிப்படுத்தல்.

   இற்கான தகைமை கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

2. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கீழ்க்காணும் இணையதளத்திற்கு பிரவேசியுங்கள்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk
   வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk

**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு, பிரதம பொறியியலாளர் (செயற்றிட்ட) அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரச சபை - இரத்தினபுரி**

---


**Applicable Rates for Obituary Notices of Sunday Observer**

For 15 Words - Rs. 500
* Each additional word Rs. **20/-**
N. B. - Death Certificate is essential

**011 2 429 342 / 011 2 429 343**
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk

Wherever you are..,
**The best way to Fulfil your Future Dreams...**
Gather with,



SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377

E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343



**Repeat Your Ad For Better Offers**


---

## இலங்கை வங்கி

**1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.03.09 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு S.A.D.P. ரேணுகா குணவர்தன அத்தாட்சிப்படுத்திய 2021.11.15 திகதியிட்ட ஈட்டுமுறி இல.1798 ன் பேரில் பலகத்துறை, கொச்சிக்கடை இல.84/1ல் அமைந்த லங்கா பீச் ஹோட்டல் பிரைவேற் லிமிட்டெட்டின் பணிப்பாளர்களாகிய (1) திருமதி வர்ணகுலசூரிய பட்டபந்திகே லுசி ஜசிந்தா பொன்சேகா அல்லது வர்ணகுலசூரிய பட்டபந்திகே ஜெசிந்தா பொன்சேகா அல்லது வர்ணகுலசூரிய பட்டபந்திகே லுசி ஜெசிந்தா பொன்சேகா, (2) திரு வர்ணகுலசூரிய தரிந்து ஹேஷான் மாதவ பெர்ணான்டோ (3) வர்ணகுலசூரிய திசித்த நிமாஷ மதுஷான் பெர்ணாண்டோ (4) திருமதி ஷவிந்தி திவங்கி பெர்ணான்டோ அல்லது வர்ணகுலசூரிய 'ஷவிந்தி திவங்கி பெர்ணான்டோ ஆகியோரிடமிருந்து கடன் மீது 2022.12.12 வரை முதலும் வட்டியும் எழுபத்தேழு மில்லியன் இருநூற்று முப்பத்துமூன்று ஆயிரத்து ஐந்நூற்று எண்பத்திரெண்டு ரூபாய்களும் பதினேழு சதங்களும் (ரூபா 77,233,582.17) அத்துடன் அறுபத்தேழு மில்லியன் எண்ணூற்று இருபத்தொன்பது ஆயிரம் ரூபாய்கள் மீது (ரூ 67,829,000.00) ஆண்டுக்கு பதினெட்டு தசம் ஏழு ஐந்து (18.75%) வீதத்தில் 2022.12.13 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

   மேற்குறிப்பிட்ட 2021.11.15 திகதியிட்ட ஈட்டு முறி இல.1798ன் பேரில் கடன் மீது எழுபத்தேழு மில்லியன் இருநூற்று முப்பத்து மூன்று ஆயிரத்து ஐநூற்று எண்பத்திரெண்டு ரூபாய்களும் பதினேழு சதங்களும் (ரூபா 77.233.582.17) அத்துடன் 2022.12.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்னவுக்கும் மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21க்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி நீர்கொழும்பு மேற்தரக்கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

மேல் மாகாணம் கம்பஹா மாட்டம் நீர்கொழும்பு பதிவுப்பிரிவில் அலுத்குரு கோரளை துனுகஹபற்றுவில் நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள், பலகத்துறை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. 75/A ல் பலகத்துறையில் அமைந்த போருதோட்ட வீதி, வரி மதிப்பு இல. 181/B ஜக் கொண்டதும் தல்கஹவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.J.M.G டயஸ் தயாரித்த 1997 ஜுலை 07 திகதியிட்ட வரைபடம் இல. 2380A/97ல் காணித்துண்டு இல.07 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்டதும் விபரிக்கப்படுவதுமான காணித்துண்டு வடக்கில் வரைபடம் இல. 2380A/97 ல் காணித்துண்டு இல. 06 உம் கிழக்கில் பாதையும், (பெருந்தெரு) தெற்கில் வரைபடம் இல. 2380A/97ல் காணித்துண்டு இல. 08 உம், மேற்கில் கடற்கரையும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2380A/97 ன் பிரகாரம் பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் (ஏ.0 றூ.0 பே.15.50) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண் மரங்கள் பயிர்கள் கட்டடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் G 32/141 ல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய வரைபடம் இல. 2380A/97ல் காணித்துண்டு இல. 07, அண்மைய மீளளவை வரைபடம் இல. 3858A ல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறு பலகத்துறையில் அமைந்ததும் தல்கஹவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.J.M.G டயஸ் தயாரித்த 2006 ஜனவரி 18 திகதியிட்ட வரைபடம் இல. 3858A ல் விபரித்த காணித்துண்டு 02 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட காணித்துண்டு வடக்கில் வரைபடம் இல. 2380A/97 ல் காணித்துணடு இல.06 உம்.கிழக்கில் பாதையும் (பெருந்தெரு) தெற்கில் வரைபடம் இல. 2380A/97 ல் காணித்துண்டு இல 08 உம், மேற்கில் கடற்கரையும், எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.3858A ன் பிரகாரம் பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் (ஏ.0 றூ.0 பே.15.50) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.

**திருமதி D.K.V.K திசாநாயக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்.**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**நீர்கொழும்பு.**

---


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.





---

# இலங்கை புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

**சுங்க நுழைவுகளை வடிவமைத்தல், சுங்க மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆவணப்படுத்தல், கொழும்புத் துறைமுகம் / கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து மருதானை / ராகம / இரத்மலான / தெமட்டகொடயில் அமைந்துள்ள இரயில்வே களஞ்சியசாலைக்கு இரண்டு வருடங்களுக்கு பொருட்களை அப்புறப்படுத்தல் மற்றும் விநியோகிப்பற்கான கொள்முதல்**

01. இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களக் கொள்முதல் குழு (மேஜர்) தவைரினால் சர்வதேச போட்டி விலைகோரலின் அடிபடையில் the Preparation, Framing of Entries, Customs and Sri Lanka Ports Authority Documentations, Clearance and Delivery of Railway Cargo சேவைக்கு குறைந்தது 10 ஆண்டுகளுக்கு பொருட்கள் விநியோகம் உட்பட வார்ஃப் அனுமதியைக் கையாளும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்கள் **2023.08.23** ஆம் திகதி **பி.ப.02.00** (இலங்கை நேரப்படி) மணிக்கு மூடப்படும்.

03. மீள்ச் செலுத்தப்படாத **ரூ.10,000/- (பத்தாயிரம் ரூபாய் மட்டும்)** ஆவணக் கட்டணத்தினை செலுத்தி பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திலிருந்து, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. பெறக்கூடிய படிவங்களில் மட்டுமே **2023.08.22** ஆம் திகதி **பி.ப.3.00** மணி வரை (இலங்கை நேரப்படி) மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04. மனுதாரர்கள் அவர்களின் விலைமனுவின் ஒரு பகுதியாக **ரூ.200,000/- (இரண்டு இலட்சம் ரூபாய்)** மனுப் பாதுகாப்பு பிணையாக சமர்ப்பிக்க வேண்டும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிந்தவுடன் பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில், ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை. உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம்.

06. மூடப்பட்ட மனுக்கள் பதிவு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்பட வேண்டும்.

    **தலைவர்,**
    **திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
    **இலங்கை புகையிரத சேவைகள்,**
    **பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (பெறுகை),**
    **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**

07. மனு ஆவணங்களை பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை) ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10. அலுவலகத்தில் இலவசமாகப் பரிசீலனை செய்ய முடியும்.

| | | |
|---|---|---|
| தொலைபேசி இல | : | **94(11) 2438078** அல்லது **94(11) 2436818** |
| தொலைநகல் இல | : | **94(11) 2432044** |
| மின்னஞ்சல் | : | **tender2@railway.gov.lk,** |
| இணையத்தளம் | : | **www.railway.gov.lk** |

தலைவர்,

திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),

**இலங்கை புகையிரத சேவைகள்,**

பெறுகை இல.: **SRS/F.7915**

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின் கீழான விற்பனை**

# மக்கள் வங்கி

## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை

### படல்கும்புற கிளை

**காணித்துண்டம்:** ஊவா மாகாணம், மொணறாகல மாவட்டம், மொனறாகல பிரிவு என்று முன்னர் அழைக்கப்பட்ட தற்போதைய படல்கும்புற பிரதேச செயலாளர் பிரிவின் கந்துக்கரயிலுள்ள வாசிப்பன கிராம அலுவலர் பிரிவின் அல்பொத்த கிராமத்தில் அமைந்துள்ளதும், "கந்தலந்த ஹேனே வத்த" எனவழைக்கப்படும் திரு. டீ.எம். விமலதிலக்க என்பவரினால் 2014.02.24ஆந் தேதியன்று மீள் நில அளவையிடப்பட்ட பின்னர் தயாரிக்கப்பட்ட 1974ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துரைக்கப்பட்டதுமான இல. 03 எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்:** கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றுடனும் வழியுரிமையையும் சேர்த்து ஒறு றூட் இருப்பத்தெட்டு பேர்ச்சுக்கள் (A-0, R-1, P-28)

**மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மக்கள் வங்கி படல்கும்புற கிளையில் 2023 ஆகஸ்ட் 15ஆந் தேதி மு.ப. 11.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.**

ஏலவிற்பனையானது, கொவிட்-19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டு நெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக:-** 2019.03.05ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.04.22ஆந் தேதிய தினமின, டெய்லி நியூஸ் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி:-** படல்கும்புற நகரத்திலிருந்து பதுளை வீதியில் சுமார் 100 மீற்றர் சென்று, உங்கள் இடது புறத்திலுள்ள போகஹபெல்லஸ்ஸ வீதியில் சுமார் 200 மீற்றர் பயணிக்கும் போது வீதியின் இடது புறத்தில் இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை:-** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 01%
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1000/-
5. விற்பனையின் மொத்தச் செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையின் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், மொனறாகல இல. 199, வெல்லவாய வீதி, மொனறாகல எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**தொலைபேசி: 055 2276347/ 055 2276351**

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள் விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286,**
**072 3207533, 076 9217329**

**ஈ.எஸ். ராமநாயக்க,**
நீதிமன்ற ஆணையாளரும் உரிமம்பெற்ற
ஏலவிற்பனையாளரும், மதிப்பீட்டாளர் மற்றும்
(அகில இலங்கை சமாதான நீதவான்)




# இலங்கை அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கும் மற்றும் சேமிப்பு சங்கம்

## 2023.08.05 புலமைப்பரிசில் வழங்கல் மற்றும் விசேட மகா சபைக் கூட்டம்

**நிகழ்ச்சி நிரல்**

* புலமைப் பரிசில் உற்சவ வருகையை பதிவு செய்தல்
* மத அனுஷ்டானங்கள்
* சம்பிரதாயபூர்வ விளக்கேற்றுதல்
* காலஞ்சென்ற அங்கத்தவர்கள் மற்றும் படையினரை நினைவு கூருதல்
* கூட்டுறவு கீதத்தை இசைத்தல்
* புலமைப் பரிசில் வழங்கல் நிகழ்வை நடத்துதல்
* அங்கத்தவர் வரவைப் பதிவு செய்தல்
* சபையினரை வரவேற்றல்
* கூட்டத்தை கோரும் அறிவித்தலை சமர்ப்பித்தல்
* 2022.07.23 மகா சபை அறிக்கையைச் சமர்ப்பித்தல்
* 2022/2023இல் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய அங்கத்தவர்களை அனுமதித்தல்
* 2024 அபிவிருத்தி திட்டமிடல், வரவு செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் வெளிக் கடன் எல்லைக்கு அனுமதி வழங்கல்
* 2018 கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்தல்
* இடைக்கால யாப்பின் குறித்த பிரிவுகளின் திருத்தத்தை நிறைவேற்றுல் (18.I, 19.IV, 31.V, 31,VI)
* செயற்குழு கட்டளை தொகுதியின் குறித்த பிரிவுகளின் திருத்தத்தை நிவேற்றிக் கொள்ளல் (கடன் செயற்குழு கட்டளை 3, 4, 5, 18)
* ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை சமர்ப்பித்தல்
* விசேட அதிதிகளின் நல்வாழ்த்துக்களைச் சமர்ப்பித்தல்
* நன்றியுரை
* நிகழ்ச்சி நிறைவு

Replies to Classifieds & Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# பெறுகை அறிவித்தல்

## கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக் கழகம்

### தேசிய போட்டி விலைமனுக்களின் கீழ் கேள்வி கோரல் (NCB)

2023/2024ஆம் ஆண்டிற்காக கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் கீழ்க்காணும் சேவைகளை வழங்குவதற்கு தகைமைகள் கொண்ட நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை முறி | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|
| GWUIM/GA/PROC/2023/05/CLN | சுத்திகரிப்பு சேவை வழங்குதல் | ரூ. 150,000.00 | 2023.11.30 வரை அல்லது அதற்கு மேல் |

**கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

1. வியாபார பதிவு சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
2. 2022ஆம் ஆண்டுடன் முடிவடையும் முன்னைய 05 வருடங்களுக்குள் ரூபா 10 மில்லியனுக்கு குறையாத வருடாந்த பெறுமதியுடன் சுத்திகரிப்பு சேவை ஒப்பந்தங்கள் 03 ஆவது குறைந்த பட்சம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாத (Blacklist) நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

சகல கேள்விப் பத்திரத்துடனும் மேலே தரப்பட்டுள்ளபெறுமதியுடைய செல்லுபடியாகம் காலத்துடனான மீளளிக்கப்படாத கேள்விப் பிணை முறியொன்றை இலங்கையில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியில் இருந்து 'உப பீடாதிபதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்' பெயரில் பெற்றுக்கொண்டு அல்லது பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் காசாகச் செலத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இணைத்து இருத்தல் வேண்டும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை பிரதிப் பதிவாளர் - பொது நிர்வாகம் (033-2223784 அல்லது 033-2222748/740 சேவை நீடிப்பு இல. 136) மூலம் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்விப் பத்திரங்களை இப் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

மேற்படி சேவையை வழங்குவதற்கு குறித்த தள பரிசீலனை, 2023.07.31 முதல் 2023.08.15 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இடம்பெறலாம். இதனோடு சம்பந்தப்பட்ட பெறுகைக்கு முன்னரான கூட்டம் (Pre-Bid Meting) 2023.08.08 மு.ப. 10.00 இற்கு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் கமிட்டி கூட்ட மண்டபத்தில் நடைபெறுவதுடன் அதற்கு கேள்வி வைப்பதற்கு எதிர்பார்க்கின்ற சகல கேள்விதாரர்களினதும் வருகை எதிர்பார்க்கப்படுகின்றது.

சகல கேள்விப் பத்திரங்களையும் சிங்கள மொழியில் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும். இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் தமது நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வரையப்பட்ட எழுத்து மூல வேண்டுதலை, மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகையை பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் 2023.07.31 முதல் 2023.08.16 வரை அலுவலக நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 2.00 வரை பிரதிப் பதிவாளர் - பொது நிர்வாகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக குறிப்பிட்டு கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் அக் கடித உறைகள் 2ஐ தனி கடித உறையில் இட்டு பொறியிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் 'கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் - 2023/2024' என்று தெளிவாகக் குறிப்பிட்டு 2023.08.17 பி.ப. 2.00 இற்கு முன் நிர்வாகக் கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் பதிவாளர் பணிமனைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு சேவையை வழங்குதல் 2023/ 2024 உடன் சம்பந்தப்பட்ட கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரிடமிருந்து முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். இதனோடு குறித்த மேலதிக தகவல்கள் கேள்வி விண்ணப்பங்களில் தரப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**2023.07.27**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் திணைக்கள இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான பெறுகை"

### ஒப்பந்த இலக்கம்: ID/HO/CT/Janitorial/NCB/2023/02

1. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சேவைக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| ஒப்பந்த இல. | வேலையின் பெயர் | விலைக்கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | பிணை முறி (இல. ரூபா) | பிணை முறி செல்லுபடியாக வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ID/HO/CT/Janitorial/ NCB/2023/02 | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் திணைக்கள இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான பெறுகை | 2023-11-03 | 180,000.00 | 2023-12-01 |

2. மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை 2023-07-27ஆம் திகதி முதல் 2023-08-17ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் செலுத்தியும் மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-07, இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களம், 02ஆம் தளம், அறை இல. 216, நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னராக, அவைகளை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவலை நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 011-2582897/011-2583305
4. பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயங்கள் இடம்பெறும். வளமுள்ள விவைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அட்டவணை இல. 02**

| வேலையின் பெயர் | வேலைத்தள விஜயத்திற்கு உதவும் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் | வேலைத்தள விஜயத்திற்கான திகதி மற்றும் நேரம் | விலைகோரல் முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் திணைக்கள இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான பெறுகை | பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (கட்டிடங்கள் மற்றும் கட்டிட சேவைகள்) தொ.பே. 011 2581802 | 2023-08-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு, பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (கட்டிடங்கள் மற்றும் கட்டிட சேவைகள்) அலுவலகத்தில் | 2023-08-03ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களம், 318ஆம் இலக்க அறை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் (WG & BS) அலுவலகத்தில் |

5. விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திலேயே விலைமனுப் பிணை முறிகள் இருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் பதிலளிக்கப்படாதவையாகக் கருதப்படும் என்பதுடன் அவைகள் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவரின் முத்திரைக்குறி பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2023-08-18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2023-08-18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் **(IFB No)** ஆகியவற்றை தயவு செய்து எழுதவும்.
8. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதியானதும் மற்றும் தீர்க்கமானதாகும். எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் சுய தீர்மானத்தின் பேரில் நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**

**27.06.2023 ஆம் திகதி.**

# மினுவாங்கொட நகர சபை

## மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்கி, பொருத்தி, செயற்படவைத்தலுக்காக விலைமனு கோரல்

மினுவாங்கொட நகர சபை தகனச்சாலைக்கு 12kva - 15kva கொள்ளளவுடைய மூன்று முதன்நிலை மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்கி, பொருத்தி, செயற்படவைத்தலுக்காக உள்நாட்டு வழங்குநர்கள் / முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் படிவங்கள் மூலமாக மட்டும் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைக்கோரல் பிணை முறிக்கு இயைபான கட்டணத்தை நகர சபை அலுவலகத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றின் பிணை முறியுடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2023-08-16ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை விலைக்கோரல் படிவங்கள் வழங்கப்படும். 2023-08-17ஆம் திகதி பி.ப. 02.00 மணி வரை மட்டுமே விலைக்கோரல் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு இரு உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் சமர்ப்பிக்கப்படும் உறையில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு "செயலாளர் மற்றும் சபையின் அதிகாரமிக்க வேலைகளை செயற்படுத்தும் அதிகாரி, மினுவாங்கொட நகர சபை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை மினுவாங்கொட நகர சபையின் கொள்கைகள் குழுவின் சிபாரிசின் பிரகாரம் மினுவாங்கொட நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை 011 2295275 எனும் தொலைபேசியின் ஊடாக மினுவாங்கொட நகர சபையின் செயலாளர் மற்றும் சபையின் அதிகாரமிக்க வேலைகளை செயற்படுத்தும் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| | செயற்றிட்டத்தின் பெயர் | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் படிவக் கட்டணம் (ரூபா) | விலைமனுதாரர் களுடனான முன்னோடிக் கூட்டம் |
|---|---|---|---|---|
| 01 | மினுவாங்கொட நகர சபை தகனச்சாலைக்கு 12kva - 15kva கொள்ளளவுடைய மூன்று முதன்நிலை மின்பிறப்பாக்கி இயந்திரமொன்றை வழங்கி, பொருத்தி, செயற்படவைத்தல் | 55,000.00 | 3000.00 | 2023-08-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

**செயலாளர் மற்றும் சபையின்**
**அதிகாரமிக்க வேலைகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**மினுவாங்கொட நகர சபை.**
**2023-07-28.**

PMF FINANCE PLC
PUBLIC AUCTION

## PMF பினான்ஸ் பீஎல்சி
## மீட்கப்படாத தங்கப் பொருட்களை
### பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

PMF பினான்ஸ் பீஎல்சி நிறுவனத்தின் தங்கக் கடன் திட்டத்தின் கீழ் பிணையாக கீழ் குறிப்பிடப்பட்ட கிளைகளுக்கு 2023.01.31 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு காலம் கடந்து இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள் கீழுள்ள திகதிகளில் மு.ப. 09.30 தொடக்கம் பி.ப. 12.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| கிளை மற்றும் அடகு நிலையங்கள் | ஏலம் இடம்பெறும் திகதி மற்றும் இடம் |
|---|---|
| திருகோணமலை, அல்பிட்டி, வெள்ளவத்தை, மஹரகம, மாத்தறை, அநுராதபுரம், மத்துகம, கம்பஹா, மாத்தளை, நீர்கொழும்பு, ஹோமாகம மற்றும் குருநாகல் | 2023 ஓகஸ்ட் 15 இல.: 47, தர்மபால மாவத்தை, கொழும்பு 03 |

- முன்னறிவித்தல் இன்றி ஏலத்திற்கு முன்வைக்கப்படும் பொருட்களை பகுதியாக அல்லது அனைத்தையும் அகற்றிக்கொள்ளல் மற்றும் இந்த ஏல விற்பனையை ரத்துச் செய்தல் அல்லது ஒத்திவைத்தல் தொடர்பிலான உரிமை PMF பினான்ஸ் பீஎல்சி நிறுவனம் வசமானதாகும்.
- ஏலத்திற்கு வருகின்ற அனைவரும் தேசிய அடையாள அட்டையை எடுத்து வர வேண்டும்.
- ஏலத்திற்கு உள்நுழைவதற்கு கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

**முகாமையாளர் - தங்கக் கடன்**
**PMF பினான்ஸ் பீஎல்சி**
**இலக்கம் 47, தர்மபால மாவத்தை, கொழும்பு 03**
**தொலைபேசி: 011-7 733 600/ 0719 342 413**

## அறிவித்தல்
## சதர்லாண்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்
**கம்பனி பதிவு இலக்கம்: PV 15642**

**குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்பு**

சதர்லாண்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தின் இரண்டு மில்லியனே தொன்னூற்று ஓராயிரத்து அறுநூற்று இருபத்து ஒன்பது (2,091,629) சாதாரண பங்குகள் மற்றும் நான்கு மில்லியனே எண்ணூறு ஆயிரம் (4,800,00) முன்னுரிமை பங்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா அறுபத்து எட்டு மில்லியனே தொல்லாயிரத்து பதினாறாயிரத்து இரு நூற்று தொன்னூறு (ரூ. 68,916,290) குறிப்பிடப்பட்ட மூலதனத்தை 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 59 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ரூபா இருபது மில்லியனே தொல்லாயிரத்து பதினாறாயிரத்து இருநூற்று தொன்னூறு (ரூ. 20,916,290) குறிப்பிடப்பட்ட மூலதனம் ஒன்றுக்கு குறைப்பதற்கு தமது பங்குதாரர்களுக்கு பரிந்துரைக்க சுற்று தீர்மானம் மூலம் தீர்க்கப்பட்டது என்பதை சதர்லாண்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட் ("நிறுவனம்") இன் பணிப்பாளர் சபை இத்தால் அறியத்தருகிறது.

கூறப்பட்ட பங்குகளை வைத்திருப்பவர்களின் ரொக்கப்பணத்தை திரும்பச் செலுத்துவது மற்றும் P01 முதல் P4800000 வரையிலான தனித்துவமான எண்களைக் கொண்ட நிறுவனத்தில் உள்ள நான்கு மில்லியனே எண்ணூறு ஆயிரம் (4,800,00) முன்னுரிமைப் பங்குகளை ரத்துச் செய்வதன் மூலம் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் குறைப்பு செயல்படுத்தப்படும். கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் இரண்டு மில்லியனே தொன்னூற்று ஓராயிரத்து அறுநூற்று இருபத்து ஒன்பது (2,091,629) சாதாரண பங்குகளை உள்ளடக்கியதாக ரூபா இருபது மில்லியனே தொல்லாயிரத்து பதினாறாயிரத்து இருநூற்று தொன்னூறு (ரூ. 20,916,290) ஆக இருக்கும்.

கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக சிறப்பு தீர்மானம் ஒன்றின் மூலம் பங்குதாரர்களின் ஒப்புதலை பெறும் நோக்கில் 2023 செப்டெம்பர் 27 ஆம் திகதி நிறுவனத்தின் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்படும்.

சதர்லாண்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்
சபையின் ஆணை மூலம்
செக்ரடேரியஸ் (பிரைவட்) லிமிடெட்
செயலாளர்கள்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 ஓகத்து 02ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 180,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123K032 | LKA18224B028 | LKA36424H029 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 80,000 | 55,000 | 45,000 | 180,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 ஓகத்து 02 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 ஓகத்து 04 |
| வழங்கப்படும் திகதி | : 2023 ஓகத்து 04 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 ஓகத்து 02, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

**For classified advertisements and for replies**
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
**+94 112429341**
**Hotline 1949**

## அறிவித்தல்
### வடமேல் மாகாண சபை
## தகுதிச்சான்றிதழ்களை வழங்குவதற்காக கராஜ்களுக்கு அனுமதி அளித்தல் – 2024

பஸ், லொறிகள் உட்பட தகுதிச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வாகனங்களுக்கு அவற்றை வழங்குவதற்காக, தகுதியுள்ள கராஜ்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, வடமேல் மாகாணத்திலுள்ள வியாபாரப் பெயர் பதிவு செய்யப்பெற்றுள்ள தனியார் மற்றும் அரச கராஜ் உரிமையாளர்களிடமிருந்து (இ.போ.ச. டிப்போக்கள் உட்பட) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர்களிடம் இருக்க வேண்டிய வசதிகள் மற்றும் தகைமைகள்:-

i. வசதிகள்:

அ. 20 அடி நீளம். 2 1/2 அடி அகலம், 4 1/2 அடி ஆழம் கொண்ட குழியொன்று அல்லது வாகனங்களைப் பரீட்சிப்பதற்காக அதற்குச் சமமான வசதிகளைக் கொண்டுள்ள பரீட்சை மேடையொன்று அல்லது உயர்த்தி ஒன்று,

ஆ. டப்லி பிரேக் பரிசோதிக்கும் உபகரணம்

இ. பிரதான விளக்குப் பரிசோதனை உபகரணம்

ஈ. வாகனத்தின் அடிப்பாகம், சுக்கான் சந்தி, பிரேக், குழாய்கள், கேபல்கள், போன்றவை மற்றும் துருப்பிடித்துள்ள பகுதிகளைப் பரீட்சிப்பதற்காக குருப்பு உளிகள், சம்மட்டி போன்ற எந்திரவியல் கருவிகள்

உ. மேற்படி தேவைப்பாடுகள் தம்வசம் இல்லாத, எனினும் அவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வியாபார நிறுவனங்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

ii. பணிக்குழாம்:-
சான்று பகரும் அலுவலர்களாக, குறைந்தபட்சம் கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூரணப்படுத்தும் நபர்கள், விண்ணப்பிக்கும் கராஜ்களில் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர் என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அ. மோட்டார் வாகன எந்திரவியல் விஞ்ஞானம் தொடர்பாக 05 ஆண்டுகால அனுபவத்துடன், இயந்திரவியல் பொறியியல் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பான தேசிய டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஷ்ட தொழில்நுட்பவியல் அலுவலர் சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான வேறு தகைமையொன்று

ஆ. மோட்டார் வாகன எந்திரவியல் விஞ்ஞானம் தொடர்பான வெளிநாட்டுப் பயிற்சி பெற்றுள்ள நபர்களின் சான்றிதழ்களைப் பரீசீலனை செய்ததன் பின்னர், மேற்படி தேவைப்பாடுகளிலிருந்து விதிவிலக்கு அளிப்பதற்கு கவனத்திற் கொள்ளப்படும்.

02. விண்ணப்பிக்கும் முறை:-

வடமேல் மாகாண சபையின் பிரதான செயலாளர் அலுவலக சிறாப்பரிடம் ரூபா 2,000/- இற்கான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்துடன், அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில்' தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்காக கராஜ்களைப் பதிவு செய்து கொள்ளல் - 2024' எனக் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பங்கள் 2023.08.31 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் சேர்த்தல் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் மேற்கொள்ளல் வேண்டும்.

**ரன்ஜித் ஆரியரத்ன**
**பிரதான செயலாளர்**
**வடமேல் மாகாணம்**
**2023.07.19**

**முகவரி: பிரதிப் பிரதான செயலாளர்**
**(நிதி முகாமைத்துவம்)**
**பிரதான செயலாளர் பணியகம்**
**வடமேல் மாகாணம்**
**குருநாகல்.**

**The Housewives' companion**
**Classifieds on**
Daily News

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
### இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்
### 2ஆம் விடைத்தாள்கள் வழங்குவதற்கான (2nd Answer Paper) பெறுகை - 2023
**ஒப்பந்த இல. 04/03/14/2023**

1. 2ஆம் விடைத்தாள்களின் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய இதனையொத்த காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட கால அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் இல. 0112785219) மற்றும் 2023-08-16ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-07-27ஆம் திகதி முதல் 2023-08-16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 19,600.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் பத்தரமுல்ல, பெலவத்த, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2023-11-15ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் ஒன்பது இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவிற்கான (970,000.00 இல. ரூபா) விலைமனுக்களை முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்கள் வரையில் (2023-12-15ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.

9 விலைமனுக்கள் 2023-08-17ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2ஆம் விடைத்தாள்கள் வழங்குதல் - ஒப்பந்த இல.: 4/03/14/2023" என குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
11. எந்தவொரு விலைமனுவையும் ஏற்கவும் அல்லது நிராகரிக்கவும் மற்றும் ஒப்பந்தத்திற்கு முன் எந்த நேரத்திலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கவும், அதன் மூலம் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தப் பொறுப்பையும் ஏற்படுத்தாமல் அல்லது திணைக்கள பெறுகைக் குழுவின் நடவடிக்கைக்கான காரணங்களை பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**மேல்நிலை பெறுகைக் குழு,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2023-07-28**

## இலங்கைச் சுங்கம்
## பொது மக்களுக்கான அறிவித்தல்

எங்களுடைய அவதானிப்பின் படி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக விமானப் போக்குவரத்து பயணிகள் மூலம் தங்கம் கடத்தப்படுகின்ற போக்கு அதிகரித்துள்ளதை அவதானித்துள்ளோம்.

முன்னர் இத்தகைய கடத்தல்கள், பயிற்சி பெற்ற கடத்தல் காரர்களினல் அல்லது அவர்களின் முகவர்களினால் இனங்காணப்பட்ட வெளிநாட்டு விமான நிலையங்கள் ஊடாக இடம் பெற்றதோடு, தற்போது இது தொடர்பில் எத்தகைய சம்பந்தமும் அற்ற புலம் பெயர் தொழிலாளர்கள், அவர்களது சம்மதம் இன்றி இந்த நோக்கத்திற்காக உபயோகிக்கப்படுகின்றார்கள் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே, வெளிநாட்டில் வசிக்கின்ற அல்லது வெளிநாட்டிற்குச் செல்லவுள்ள அனைத்து விமானப் பயணிகளுக்கும், அறிமுகமற்ற நபர்களிடம் கையளிக்குமாறு உங்களிடம் வழங்கப்படுகின்ற எந்தவொரு பொதியையோ அல்லது பொருளையோ ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் அவ்வாறு குறித்த பொதியையோ அல்லது பொருளையோ நீங்கள் எடுத்துச் செல்ல நேர்ந்தால் அவற்றில் சந்தேகத்திற்குரிய அல்லது சட்ட விரோதமான பொருள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் இலங்கைச் சுங்கம் உங்களிடம் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றது.

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் மேற்படி கடத்தல் செயற்பாடுகளுக்கான சுங்கத்தின் தண்டனைகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறைத்தண்டனை விதிக்கப்படும் அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளதால் இத்தகைய சூழ் நிலைகளைத் தவிர்க்கும் நோக்கில் கடத்தல்காரர்களின் சூழ்ச்சிகளுக்கு இலக்காக வேண்டாமென இலங்கைச் சுங்கமானது அனைத்து விமானப் பயணிகளையும் புலம் பெயர் தொழிலாளர்களையும் இத்தால் வேண்டிக் கொள்கின்றது.

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**'சுங்க இல்லம்'**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு -11.**

**Repeat Your ad For Better Offers**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk